உ

சிவமயம்

கணேசம்



பண்டிதை, கலாபூஷணம் வை.கணேசபிள்ளை

வெளியீடு :

பழைய மாணவர் சங்கம்,

யா/இணுவில் இந்துக் கல்லூரி.

கணேசம்

கட்டுரைத் தொகுப்பு

ஆக்கம் :
பண்டிதை, கலாபூஷணம்
வைகுந்தம் கணேசபிள்ளை

வெளியீடு :
பழைய மாணவர் சங்கம்,
இணுவில் இந்துக்கல்லூரி.

நூல் விபரம்

நூல்	:	கணேசம்
நூலாசிரியர்	:	திருமதி.வை.கணேசபிள்ளை
வெளியீடு	:	பழைய மாணவர் சங்கம். இணுவில் இந்துக் கல்லூரி
திகதி	:	17-01-2016
பதிப்பு	:	நிலாநிதன் கிரபிக்ஸ். இணுவில்.
பக்கம்	:	xii + 86

ஆசியுரை

கலாபூஷணம் திருமதி வைகுந்தம் கணேசபிள்ளை அவர்களின் ஆக்கங்கள் சமீப காலமாக எழுத்துலகில் பிரசித்தம் பெற்று வருகிறது. அவரது உரைநடையும். கவித்துவமும் எல்லோராலும் போற்றப்படுகிறது. அவர் ஒரு ஆன்மீகவாதி, சமயப்பற்று மிக்கவர். அவரது உரைநடைக் கட்டுரைகளில் ஆன்மீகமும், சமயமும் மேலோங்கி இருப்பதைக் காணலாம். அவரால் வெளிவந்த பல கட்டுரைகளுடன் மேலும் பல கட்டுரைகளையும் சேர்த்து ஒரே நூலாக, அன்னாரது கணவரான அமரர் திரு.கணேசபிள்ளை அவர்களது முதலாம் ஆண்டு நினைவு நாளன்று வெளியிடப்படுகின்றது. இந்நூல் காலத்திற்கு தேவையான ஒன்றாக விளங்குகின்றது. இந்நூல் கட்டாயம் எல்லோரிடமும் இருக்க வேண்டியது அவசியம். எனவே இந்நூலை எல்லோரும் பெற்று அன்னாரது எழுத்தார்வத்தை ஊக்குவிக்குமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றேன். அன்னார் எழுத்துலகில் மேன்மேலும் வளர எல்லாம் வல்ல ஸ்ரீபரராஜசேகர பிள்ளையாரை வேண்டி ஆசிகளைத் தருகின்றேன்.

சிவஸ்ரீ வை.சோமாஸ்கந்தக்குருக்கள்,
ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவில்.

இணுவில் இந்துக்கல்லூரி அதிபரின் ஆசிச்செய்தி

திரு. நாகலிங்கம் கணேசபிள்ளை ஆசிரியர் நினைவாக வெளிவரும் "கணேசம்" என்ற நூலுக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

அமரர் நாகலிங்கம் கணேசபிள்ளை தையிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டா லும் புகுந்த ஊரான இணுவைப் பதிக்கே பெரும் புகழையும் அளப்பரிய சேவையையும் ஆற்றியுள்ளார்.

பதினெட்டு வருடங்களாக ஆங்கில ஆசானாக, பகுதித் தலைவராக, உப அதிபராகத் தனது சேவையினை வழங்கி இணுவில் இந்துவை புகழ் பூத்த பாடசாலையாகத் திகழ்வதற்கு தன்னாலான பங்களிப்பைச் செய்துள்ளார். மாணவர் களின் கற்றல் செயற்பாடுகளில் மட்டுமன்றி ஆங்கிலத் திறன் போட்டிகளிலும் மாணவர்களைப் பங்கு பற்றச் செய்து பெருமை தேடித்தந்துள்ளார். எல்லாவற்றிலும் மேலாக ஒழுக்கம், கட்டுப்பாடு, பண்பாட்டு விழுமியங்கள் அனைத்தும் பெற்ற மாணவச் சமூகத்தினரை இந்து அன்னையூடாகத் தோற்றுவித்துள்ளார்.

மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற வாக்கிற்கு இணங்க தனது கடமையைப் பொறுப்புணர்வுடன் செயலாற்றியதுடன் இந்துவின் நம்பிக்கை நிதியத்தின் அங்கத்தவ ராக, தலைவராக பல காலம் செயற்பட்டுவந்ததுடன் ஒவ்வொரு தேவையையும் கண்டு பணியாற்றிய பெருந்தகையாளன். 150 ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி புதிய கட்டிடம் கட்டுவதற்கான செயற்பாடுகளை முன்னின்று நடாத்தியதுடன் கட்டிடத்தை நிறைவு செய்ய வேண்டும் என்ற அர்ப்பணிப்பால் நோய்வாய்ப்பட்ட போதிலும் கல்லூரியில் வந்திருந்து மேற்பார்வை செய்து கட்டிடம் இறுதிக்கட்டதை அடையும் நேரத்தில் யாரும் எதிர்பார்க்காத வேளையில் திடீரென இறைபதம் அடைந்த செய்தி எம்மைக் கவலையில் ஆழ்த்தியது. ஆயினும் அவரது ஆசி இந்துக்கல்லூரிக்கு எப்பொழுதும் இருக்கும் என்பதை 150ஆம் ஆண்டுக் கட்டடம் கூறிக்கொண்டே இருக்கும். இந்தவகையில் திரு. நா.கணேசபிள்ளை அவர்களின் நினைவாக வெளிவரும் "கணேசம்" மலர் பலருக்குப் பயன்படவும் இம்முயற்சியில் ஈடுபட்ட அனைவருக்கும் இறையருள் கிடைக்கவும் நல்லாசிகளை வழங்குகின்றேன்.

-நன்றி-

திரு. திருநாவுக்கரசு தேவதயாளன்
அதிபர்,
யா/ இணுவில் இந்துக்கல்லூரி
இணுவில்.

கணேசம் வாழியவே

அமரர் கணேசபிள்ளை அவர்களின் (பிரதி அதிபர் இணுவில் இந்துக்கல்லூரி) முதலாம் ஆண்டு நினைவாக அவர்களது குடும்பத்தினரால் வெளியிடப்படும் "கணேசம்" எனும் நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடை கிறேன். கல்வியின் உயர்ச்சியில் இணுவில் இந்துக்கல்லூரியில் தன்னுடைய இறுதிக் காலம் வரை பணியை அர்ப்பணித்தார். "அமரர் கணேசபிள்ளை" அவர்கள் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவு மண்டபத்தின் ஆரம்பகர்த்தாவாக இருந்து செயற்பட்டவர். திருமதி.வை.கணேசபிள்ளை அவர்கள் தான் வெளியிட்ட கட்டுரைகளின் தொகுப்பு ஒன்று தன்னுடைய குடும்பத் தலைவரின் முதலாம் ஆண்டு நினைவில் பரராஜசேகரப் பிள்ளையாரின் நாமத்தையும் உள்வாங்கி அதேநேரம் கணேசபிள்ளை அவர்களின் பெயரையும் தாங்கிய மலராக வெளி யிடுவது மிகவும் பொருத்தமானதாக அமைகின்றது. அமரரின் பாரியார் அவர்கள் தன்னுடைய தமிழ்மொழி வல்லமையால் பல நூல்களை ஆக்கிய பெருமைக் குரியவர். அதுமட்டுமன்றி நாட்டிய நாடகத்திற்குப் பாடலுடன் கதை எழுதுவதில் சிறப்பு வாய்ந்தவர். அந்தவகையில் திருமதி. கணேசபிள்ளை அவர்களின் நூல்களின் தொகுப்பாக "கணேசம்" வெளியிடுவதையிட்டு எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களைப் பகிர்வதுடன் இந்நூல் அனைவருக்கும் பயன்பட வேண்டி "கணேசம் வாழியவே" என வாழ்த்துகின்றேன்.

- நன்றி -

மு. செல்வஸ்த்தான்
(SLP S.I)
அதிபர்,
யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி
முன்னாள் அதிபர்,
யா/இணுவில் இந்துக்கல்லூரி.

ஆசியுரை

பதிவிரதா தர்மம் காத்த உத்தமர் அமரர் திரு.நா.கணேசபிள்ளை (பிரதி அதிபர் - யா/ இணுவில் இந்துக் கல்லூரி) அவர்களது ஞாபகார்த்தமாக அவரது பாரியார் பண்டிதை வைகுந்தம் கணேசபிள்ளை அவர்களால் வெளியிடப்படும் "கணேசம்" என்ற நூலுக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

சைவமும் தமிழும் தழைத்தோங்கி வளர்ந்துள்ள இணுவையம்பதியில் இத்தகைய நூலொன்று வெளியிடுவது மிகவும் பொருத்தமானது.

காலத்திற்கு காலம் இக்கிராமத்தில் தமிழ்ப் பண்டிதர்களும் தமிழ் வித்துவான்களும் தோன்றி சைவத்தையும் தமிழையும் போற்றி கவிதைகளும் கட்டுரைகளும் எழுதி வெளியிட்டு வந்துள்ளனர். அந்த வழியில் திருமதி. வைகுந்தம் கணேசபிள்ளை அவர்களும் கவிதை களையும் கட்டுரைகளையும், சைவத்தையும், தமிழையும் போற்றி வெளியிட்டு வருகிறார். இவரது ஆக்கங்களில் சொல்வளமும் பொருள் வளமும் சிறப்பாக அமைந்துள்ளன.

"வலம் வந்த மடவார்கள் முழவதிர மழையென்று அஞ்சி சில மந்தி அலமந்து மரமேறி முகில் பார்க்கும் திருவையாறு" என்று போற்றப்படும் இணுவையூரில் வீற்றிருந்து அருள் பாலிக்கும் பரராஜசேகரப் பிள்ளையாரையும் முருகனையும் வணங்கி அமைகின்றேன்.

திரு. சுந்தரம் தம்பித்துரை (JP)
முன்னாள் அதிபர்,
யா/இணுவில் இந்துக் கல்லூரி

வாழ்த்துச் செய்தி

வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்த பிரதி அதிபர் திரு. நா. கணேசபிள்ளை அவர்கள் அமரத்துவம் அடைந்து ஓராண்டு பூர்த்தியில் அவரது நினைவாக வெளிவரும் "கணேசம்" என்ற மலருக்கு வாழ்த்துச் செய்தி தருவதில் மன நிறைவடைகின்றேன்.

இவர் இணுவில் இந்துக்கல்லூரியில் 1977 தொடக்கம் 1995 வரை 18 வருட காலம் ஆசிரியராகவும், பகுதித் தலைவராகவும், பிரதி அதிபராகவும் இருந்து பன்முகச் சேவைகள் புரிந்துள்ளார். இவரது மலர்ந்த முகம், அனைவரையும் அரவணைக்கும் பண்பு, இனிய வார்த்தை, பிறரை மதிக்கும் பண்பு, நேர்மையான போக்கு இவையாவும் என்னைக் கவர்ந்தது. இவர் காலத்து அதிபர்களான பண்டிதர் இராசலிங்கம், S.M. மூர்த்தி, கமலநாதன், திரு. மு.தம்பித்துரை யாவருடைய பாராட்டுக்களையும், நன்மதிப்பையும் பெற்றவர். மாணவர் கல்விச் செயற் பாடுகளில் மிகுந்த அக்கறை கொண்டவர். பாடசாலைக்கு காலை 7 மணிக்கு வருகை தந்தால் பிற்பகல் 4 மணிக்கே வீடு திரும்புவார். பாடசாலை மட்டுமல்ல தான் வாழ்ந்த சமூகத்திலும் ஊர் மக்களிடமும் சேவையினாலும் மனிதநேயத் தினாலும் இடம் பிடித்தவர். ஆங்கிலக் கடிதங்கள் எழுதவும், மொழிபெயர்க்கவும் ஆங்கிலமொழி கற்பித்தும் உதவியவர்.

ஓய்வு பெற்ற காலத்திலும் பாடசாலை அபிவிருத்திச் செயற்குழு உறுப்பினராகவும், இந்துக்கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியத் தலைவராகவும் இருந்து கல்லூரியின் 150 ஆவது நிறைவாண்டு இரண்டு மாடிக் கட்டடம் அமைக்கும் பணியில் ஒத்துழைத்தவர். ஓய்வுபெற்ற அவரது துணைவியார் திருநெறி தமிழ் மறைக்கழகச் செயற்பாடுகளில் ஈடுபடவும், அறநெறிப் பாடசாலையைச் செவ்வனே நடத்தவும் உறுதுணையாகத் திகழ்ந்தவர். ஊரிலுள்ள சைவச் சிறுவர், சிறுமியர் அறநெறிக் கல்வி பெறவும், சமய அறிவு பெற்றுக் கொள்ளவும் திரு. கணேசபிள்ளையின் உதவியும் ஒத்துழைப்பும் பெரிதும் இருந்து வந்துள்ளது. அவரது ஓராண்டு பூர்த்தியில் "கணேசம்" மலர் வெளிவருவது பாராட்டத்தக்கது. பலருக்குப் பயன்பட வேண்டுமென்று எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

-நன்றி-

செ. குபேரநாதன்
ஓய்வுபெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளர் (உடுவில்),
முன்னாள் இணுவில் இந்துக்கல்லூரி அதிபர்.

செயல் வீரன் எமது தலைவர்

காங்கேசன்துறையில் உள்ள ஒரு கிராமமாகிய தையிட்டியில் பிறந்து கல்வி கற்றுத்தேறி ஆசிரியராகப் பணி புரிந்தார் அமரர் திரு. நா. கணேசபிள்ளை அவர்கள். ஆசிரியத் தொழிலை மேற்கொண்ட இவர் இணுவில் இந்துக்கல்லூரியில் உபஅதிபராக இந்துக் கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியத் தலைவராக இறுதிவரை இருந்து செயலாற்றியவர்.

எல்லா மாணவர்களும் கல்விகற்றுச் சிறந்தோங்க வேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்டவர் அவர். அதன் காரணமாகத் தன்னாலான உதவிகளையும் செய்து தந்தார். இணுவில் இந்துக்கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியம் என்ற அமைப்பினை இணுவில் இந்துக் கல்லூரிக்குக்கென நாம் உருவாக்கிய போது அதனுடன் தன்னை இணைத்துக் கொண்டு பெருஞ்சேவை ஆற்றிவந்தவர். அவருடைய நற்பண்புகளால் ஈர்க்கப்பட்ட நிதிய உறுப்பினர்களாகிய நாம் அவரைத் தலைவராக தெரிவு செய்து பெருமையடைந்தோம்.

எமது கல்லூரியின் செயற்பாடுகளில் முக்கிய பங்கெடுத்தவர். கல்வியில் பின்தங்கிய மாணவர்களை ஊக்கப்படுத்தி முன்னேற்றம் பெறச் செய்ய வேண்டும் என்று எமக்கு எடுத்துக் கூறிச் செயற்படுத்தியவர். இவரது ஊக்கப்படுத்தும் செயற்திறனால் கல்விகற்று உயர்ந்தவர்கள் பலர்.

கல்லூரிச் செயற்பாடுகளுக்கென போட்டோப்பிரதி இயந்திரம், நீர் இறைக்கும் மோட்டார், பான்ட் வாத்தியக் கருவிகள், ஒலிபெருக்கியும் அதற்குரிய சாதனங்களும் உருப் பெருக்கிக் காட்டி, நீர்க் குழாய் வசதிகள் - புதுப்பித்தலும் திருத்துதலும் முதலிய பௌதிக வளங்கள் இவரது காலத்திலேயே நிறை வேற்றப்பட்டன.

நிதியத்தின் வைப்பிலிடப்பட்ட பணத்தின் வட்டி வருவாயைக் கொண்டே இத்தேவைகள் நிறைவு செய்யப்படுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. நிதியத்தின் வளர்ச்சிக்காக வீடு வீடாகச் சென்று நிதி சேகரித்தபோது அவ்விடங்களுக்கெல்லாம் எம்முடன் தவறாது வருகை தந்தவர். இவ்விடத்தில் எமது முன்னாள் தலைவி அமரர். திருமதி. அன்னலட்சுமி சின்னராசா ஆசிரியை, திருமதி.பராசக்தி சந்திரசேகரி ஆசிரியை, திரு. சுந்தரம் தம்பித்துரை, முன்னாள் அதிபர் ஆகியோரைக் குறிப்பிட

வேண்டும். இவர்களுடன் சேர்ந்து நிதிய வளர்ச்சிக்காக செயற்பட்டவர் அமரர் கணேசபிள்ளையாவார்.

இப்படியாகக் கல்லூரிக்கு அரும்பணியாற்றி வந்த அமரர் அவர்கள் நிதியத்தால் புதிதாக இரண்டு மாடிக் கட்டடத்தை உருவாக்க ஆரம்பித்த போது அதற்கான நிதி சேகரிப்பில் முன்னின்று உழைத்தவர். நோய்வாய்ப்பட்டு பிரயாணம் செய்து நிதி சேகரிக்க முடியாதிருந்த வேளையிலும் தொலைபேசி இலக்கங்களைப் பெற்றுத் தொடர்பு கொண்டு நிதியினைச் சேகரித்துத் தந்தவர். கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு முதல் மாடி பூர்த்தியடையும் வரை எம்முடன் இருந்து செயற்பட்ட அமரர் அவர்கள் கட்டட வேலைகள் பூர்த்தியடையும் முன்னரே எம்மை விட்டுப் பிரிந்து இறைவனடி சேர்ந்து விட்டார். ஆயினும் அவர் ஆசைப்பட்டவாறு நாம் இப்புதிய கட்டடத்தை நிறைவு செய்து கையளித்தோம்.

அவரது சேவையைக் கௌரவிக்கும் முகமாக கட்டடத் திறப்புவிழாவின் நிகழ்வுகள் நடைபெற்ற அரங்கிற்கு "கணேசபிள்ளை அரங்கம்" என்று எமது வேண்டுகோளுக்கிணங்க கல்லூரி அதிபரால் பெயர் சூட்டப்பட்டது. அதுமட்டு மன்றி அவரது பெயர் என்றும் நின்று நிலைக்க வேண்டும் என்ற எண்ணங்காரணமாக புதிய கட்டடத்தின் நினைவுக் கல்லில் அவரது பெயரை பொறித்துப் பெருமை அடைந்தோம். தேவையறிந்து சேவை செய்தோரின் பெயர்களைக் குறிப்பிட்டால் அவை ஆவணப்படுத் தப்பட்டு விடும் என்று விலக்கிவிட்டு தாம் விரும்பும் பெயர்களை புகுத்தி விளம்பரம் தேடும் இன்றைய காலகட்டத்தில் அமரர் கணேசபிள்ளையின் நாமம் நின்று நிலவுவதற்கு நாம் வழி சமைத்துள்ளோம் என்று எண்ணும் போது நிதியத்தினராகிய நாம் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

அமரர் கணேசபிள்ளையின் நாமம் என்றும் நிலைத்திருக்கும். அவருடைய நினைவுக்காக வெளியிடப்படும் "கணேசம்" என்ற நூலானது இவர் போன்ற பல சேவையாளர்களை உருவாக்குவதற்கு உறுதுணையாக இருக்கும் என்பது எமது நிதியத்தினரது அசைக்கமுடியாத நம்பிக்கையாகும். அவரது திருநாமமும் செயற் பாடுகளும் என்றும் எமக்கு வழிகாட்டியாக அமைய எல்லாம் வல்ல ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையாரை வணங்கி நிறைவு செய்கின்றேன்.

-நன்றி-

வை. ஸ்ரீஸ்கந்தவரோதயன்
பதில்தலைவரும் செயலாளரும்
இந்துக்கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியம்,
இணுவில்.

என்னுரை

"மாதா, பிதா, குரு, தெய்வம் அவர் மலரடி தினம் தினம் வணங்குதல் செய்வோம்" என்பது வேதவாக்கு. என்னைப் பெற்று வளர்த்தவர்களையும், அறிவொளி தந்து வழிகாட்டிய ஆசிரியப் பெருந்தகைகளையும் வணங்குகின்றேன்.

இந்நூலில் இடம்பெறுங் கட்டுரைகள் பல்வேறு காலங்களில் வெளி வந்தவையும், வெளிவராத ஆக்கங்களுமாக அமைந்துள்ளன. சமயஞ் சார்ந்தவையும், தமிழ் சார்ந்தவையுமென பயனுள்ள கட்டுரைகளும் கவிதையொன்றும் இடம் பெறுகின்றன. இவற்றை யான் எழுதிய காலத்தில் இக்கட்டுரைகள் யாவும் எனது கணவரின் பார்வைபட்டுத் திருத்தங்கள் செய்யப்பட்டவை. இவற்றைப் பார்வையிடும் போதெல்லாம் தொகுத்து நூல் வடிவம் செய் என்று கூறுவார். இக்கட்டுரைகள் யாவும் அங்கொன்றும் இங்கொன்றுமாகவும், பெருந்தொகைப் பணம் கொடுத்து வாங்க வேண்டிய நூல்களில் இடம்பெற்று இருப்பதால் எல்லோரும் இதனை வாங்கிப் படிக்க மாட்டார்கள் என்பதாலும், இக்கட்டுரைகளை ஒன்று சேர்த்துப் புதிய ஆக்கங்களையும் இணைத்து மாணவச் சமுதாயம் பயன் பெறும்படி எனது கணவரின் ஓராண்டு பூர்த்தியில் அவரது நினைவாக சமர்ப் பணமாக, குலதெய்வம் வணங்கி "கணேசம்" என்ற பெயரில் இக்கட்டுரைத் தொகுப்பு வெளிவருகின்றது.

உடுவில் பிரதேசசபை, உடுவில் பிரதேச செயலகம், கீரிமலை நகுலேஸ்வரம், சந்திரசேகரப் பிள்ளையார் கும்பாபிசேக மலர்கள், இராமநாதன் கல்லூரி, இணுவில் இந்துக் கல்லூரி நூற்றாண்டு விழா மலர்கள் ஆகியவற்றுள் சில கட்டுரைகள் வெளிவந்துள்ளன. யான் முன்பு ஆத்மஜோதிக்கு எழுதிய கட்டுரைகளில் ஒன்றும் இணைக்கப்படுகிறது. எனது தாய்வழிப் பேரன் முருகபக்தர். சாந்தியடி வைரவர் தீர்த்தத்தில் அதிகாலையில் தினமும் நீராடி அவரால் அமைக்கப்பட்ட பூந்தோட்டத் தில் மலர் பறித்துத் தொண்டுகள் செய்தவர். இதன் நினைவாகச் சாந்தியடியான் மேல் யான் பாடி வைத்திருந்த பாடலையும் இணைத்துள்ளேன்.

எனது கணவர் யா/இணுவில் இந்துக்கல்லூரியில் நீண்ட காலமாக ஆசிரியராக, பிரதி அதிபராக, நம்பிக்கை நிதியத் தலைவராக இருந்துள்ளார். யான் இக்கல்லூரியின் பழைய மாணவி. இந்த வகையில் இணுவில் இந்துக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் இந்நூலை வெளியிட முன்வந்தமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

மேலும் இக் "கணேசம்" நூலுக்கு ஆசியுரை, வாழ்த்துரைகள், அணிந்துரை கள் தந்துதவியும், ஒத்துழைப்புகள் வழங்கிய குருக்களையா, கல்லூரி அதிபர், முன்னாள் அதிபர்கள், பணிப்பாளர், நம்பிக்கை நிதியத்தினர், பழைய மாணவர் சங்கத்தினர் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள். மேலும் இந்நூலை உரிய காலத்தில் வடிவமைத்துத் தந்துதவிய "நிலாநிதன்" அச்சகத்தினருக்கும் மனமார்ந்த நன்றிகளைக் கூறிக் கொள்கின்றேன்.

-நன்றி-

திருமதி. வை. கணேசபிள்ளை

வெளியீட்டுரை

தமிழ் இலக்கியம், சமயம் சார்ந்த கணேசம் என்ற இந்நூல் கலாபூஷணம் திருமதி வைகுந்தம் கணேசபிள்ளை அவர்களது 15வது நூல். இவர் இராமநாதன் கல்லூரி ஓய்வு நிலை ஆசிரியரும், இணுவில் இந்துக் கல்லூரி பழைய மாணவியும், பழைய மாணவர் சங்க மூத்த உறுப்பினருமாவார்.

இன்று இணுவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கல்லூரியின் 150வது ஆண்டின் நிறைவை கொண்டாடிய நிலையில் பழைய மாணவர் சங்கம் இக்கட்டுரைத் தொகுப்பை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

இந்நூலின் மூலம் கிடைக்கும் நிதி பழைய மாணவ சங்கம் ஊடாக இணுவில் இந்துக்கல்லூரி அபிவிருத்திக்குப் பயன்படும்.

இந்நூலாசிரியர் பற்றியது

ஆரம்பக்கல்வி - சைவப்பிரகாச வித்தியாசாலை (S.S.E வரை)
பால பண்டிதர் - இணுவில் மத்திய கல்லூரி (2 வருடம்)
பண்டிதர் - வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரா கல்லூரி (2 வருடம்)
பயிற்றப்பட்ட ஆசிரியர் - சமயம் விசேட பயிற்சி (கோப்பாய் - 3 வருடம்)

இந்நூலாசிரியரின் ஆக்கங்கள் பற்றியது

- முத்துக்குமாரசாமி திருவூஞ்சல்
- இராமநாதேஸ்வரர் திருவூஞ்சல்
- தெல்லிப்பழை காசிப்பிள்ளையார் திருப்பள்ளி எழுச்சி
- கௌரி அம்மன் திருப்பள்ளி எழுச்சி (இறுவட்டு)
- மருதனார்மடம் திருப்பதி வெங்கடேஸ்வரர் திருவூஞ்சல்
- சரவணை தெங்கங்குளம் மீனாட்சி அம்மன் திருவூஞ்சல்
- கட்டுடை மீனாட்சி அம்மன் திருவூஞ்சல்
- கனடா சித்தி விநாயகர் முருகன் மேல்திருவூஞ்சல்
- வேலனை முடிப்பிள்ளையார் "பிள்ளைத்தமிழ்" - 2010
- நாட்டிய நாடகத் தொகுப்பு - 2012
- இராமநாதன் சமாதியாலய வரலாறு - 2015
- சிறுவர் பாடல்த் தொகுப்பு "பாப்பாவுக்குப் பாடல்கள்" - 2015
- 2016ல் கட்டுரைத் தொகுப்பு

குடமுழுக்குப் பாமாலைகள்

- கோண்டாவில் பிள்ளையார்
- ஸ்ரீ வெங்கடேஸ்வரர்
- ஸ்ரீ பரராச சேகரப்பிள்ளையார்

கட்டுரையாசிரியரின் வெளிவர இருக்கும் நூல்கள்

- கௌரியம்மன் பிள்ளைத்தமிழ்
- விநாயகர் கீர்த்தனைகள்

கட்டுரையாசிரியர் பெற்ற விருதுகள்

உடுவில் பிரதேச சபை "தமிழ்ச்சுடர்" விருது - 2009
திருமறைக் கலாமன்றம் பாராட்டுப்பத்திரம் (யாழ்மாவட்டம்)
கலாபூஷணவிருது அரசால் 2012ல் வழங்கப்பட்டது.

மேலும் கட்டுரையாசிரியர் கௌரவிக்கப்பட்டமை

இராமநாதன் கல்லூரித் தமிழ்த்தினப் போட்டிகளில் 4 நாட்டிய நாடகங்கள் தேசிய மட்டப் பரிசையும் 4 மாகாணமட்டம் வரையான பரிசுகளையும் பெற்றது. கல்லூரி விருது வழங்கிக் கௌரவித்தது. இதே போல் இணுவில் மத்திய கல்லூரி 2 நாட்டிய நாடகங்கள் தேசிய மட்டப் பரிசுகளைப் பெற்றது. அவர்களும் கௌரவிப்பு செய்தனர்.

மேலும் வில்லிசை, நாடகங்கள், பாடல்கள் மேடையேற்றப்பட்டன. அண்மையில் எழுதிய வில்லிசை இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோயில் அறநெறி மாணவர்களால் இசைக்கப்பட்டு மாவட்ட மட்டத்தில் 1ம் இடம் பெற்றுள்ளது.

இலக்கிய வானில் மின்னுகின்ற குறிப்பிடத்தக்க படைப்பாளிகளில் ஒருவராகவும் விமர்சகராகவும் நாடகக் கலைஞராகவும் அதேவேளை தமிழ்த்துறையில் புலமை மிக்க பண்டிதராகவும், தாய்மொழியாம் தமிழ்மொழி. ஆற்றல் கைவரப்பெற்றவராக விளங்கு பவர் திருமதி. வைகுந்தம் கணேசபிள்ளை.

எங்கள் இணுவில் மண்ணுக்கு கிடைத்த பெறுமதிமிக்க சொத்தாக கருதப்படும் பண்டிதை வைகுந்தம் கணேசபிள்ளை அவர்களின் இந்த நூல் இணுவில் இந்துக் கல்லூரி பழையமாணவ சங்கத்தினால் முதலாவது வெளியீடாக கொண்டுவரப்படுவது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது.

காலத்தின் கண்ணாடியாகவும், கருத்து கருவூலமாகவும் ஆக்கபூர்வமான பல விமர்சனக் கட்டுரைகளையும், அறிமுக கட்டுரைகளையும் கொண்டமைந்த இந்நூல் எமது இணுவில் இந்துக் கல்லூரிக்கும், இந்துக்கல்லூரிப் பழைய மாணவர்களுக்கும் பெருமையைத் தருவதாகும். இந்நூலை ஆக்கிய எழுத்தாளர் பெருமையையும் புகழையும் அடையவும் சமூகத்திற்குச் சிறந்த பயன்பாட்டை வழங்கவும் வாழ்த்தி நிறைவு செய்கின்றோம்.

திரு. ஞானதிருக்கேதீஸ்வரன்
தலைவர்
இணுவில் இந்துக்கல்லூரி
பழைய மாணவர்

S. முகுந்தன்
செயலாளர்
இணுவில் இந்துக்கல்லூரி
பழைய மாணவர்

உள்ளடக்கம்

1.	விநாயகர் பெருமை	1
2.	இலக்கியங்களில் முருக வழிபாடு	5
3.	நடராஜர் தத்துவம்	16
4.	முத்தியின்பம் கூறும் திருவெம்பாவை	20
5.	சாந்தியடியானே சரணம் சரணம்	24
6.	சேர்.பொன்.இராமநாதன் அவர்களின் நினைவாலயங்களும் அவரது பணிகளும்	27
7.	வலிகாமம் தெற்கு பிரதேசத்தினுள் ஆலயங்களும் ஆத்மீகச் செழுமையும்	41
8.	திரு.நாகலிங்கம் கணேசபிள்ளை அவர்கள்	47
9.	எனக்குத் தமிழ் தந்த ஆசான்கள் இருவர்	49
10.	செம்மொழியாம் தமிழ்மொழி	52
11.	நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்	58
12.	"பள்ளு" ஒரு கிராமிய நடனம்	66
13.	நாட்டிய நாடக மரபின் வளர்ச்சி	71
14.	ஈழத்தில் நாட்டிய நாடக மரபின் வளர்ச்சி	76
15.	நாவலரின் சமூகப்பணி	80
16.	இராமநாத வள்ளலாரும் அவரது பணிகளும்	83

விநாயகர் பெருமை

"மண்ணுலகத்தினில் பிறவி மாசற - எண்ணிய பொருள் எல்லாம் எழிதின் முற்றுற - கண்ணுதலுடையதோர் களிற்று மாமுகப் பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்" எனக் கந்தபுராணம் பாடிய கச்சியப்பர் கூறினார்." கந்தரனுபூதி பாடிய அருணகிரிநாதர் "செஞ்சொற் புனைமாலை சிறந்திடப் பஞ்சக்கர ஆனை பதம் பணி வாம்" என்றார். இதனால் நாம் விளங்கிக் கொள்வது என்ன என்பது வினா? அதாவது மக்கள் செல்லும் நெறிகளில் தடைகளை நீக்குபவர் விநாயகர் என்பதுதான். இதனால் இவருக்கு விக்கினராசா என்றும் பெய ருண்டு. விக்கினங்களை நீக்குபவரும், தம்மை வழிபடாதவர்களுக்கு விக்கினங் களைக் கொடுப்பவரும் ஆகின்றார். விநாயகர் எனும் பதத்திற்குத் தனக்கு மேல் ஒரு தலைவனை இல்லாதவர் என்பது கருத் தாகும். எனவே இவர் இந்து மக்களின் வணக்கத்தில் முதலிடம் பெறுகின்றார். எடுத்த கருமங்கட்கெல்லாம் முன்வைக்கப் படுகின்றார். சைவ மக்கள் வாழ்வியலில் ஒன்றுபட்டுவிட்ட விநாயகப் பெருமான் இல்லாத கருமங்களே இல்லை. நாம் வேண்டிய போது எமது கரங்களில் வெகு வாக வந்து விடுவார். அறுகும் சாணமும் இருந்தால் போதும்; பிள்ளையார் பிடித்து விடலாம்.

இத்தகைய விநாயகருக்கு கணேசர், ஐங்கரன், கஜானனர், லம்போதரன், வக்கிர துண்டர், விகடசக்கரன், ஆகுதரர் என்றெல் லாம் பெயர்கள் உள்ளன. பூதகணங்களுக் குத் தலைவர் ஆதலின் கணேசர் என்றும், ஐந்து கரங்களை உடையவர் ஆதலால் ஐங்கரன் என்றும், யானை முகமுடையவர் ஆதலால் கஜானனர் என்றும், பெரிய வயிறு உடையவராதலால் இலம்போதரன் என்றும், வளைந்த துதிக்கையை உடைய வ ராதலால் வக்கிரதுண்டர் எனவும், மூஷி கத்தை வாகனமாகக் கொண்டவராதலால் ஆகுதரர் எனவும் அழைக்கப்பட்டார். முக் கண்ணும், ஐந்து கரமும், ஒற்றைக் கொம்பும், பானை வயிறும், யானை முகங் கொண்ட விநாயகரின் தோற்றமே அற்புத மானது. இவற்றைப் பார்க்கும்பொழுது விநாயகர் எல்லாமாக இருக்கின்றார் என் பதை உணரலாம். பஞ்ச பூதங்களானது உலகத் தோற்றம், பஞ்ச பூதங்களாக அவற் றிற்கு எட்டாமலும் விநாயகர் விளங்கு கின்றார் என்பதை அவரது தோற்றப் பொலிவு காட்டுகிறது. முக்கண்ணுடைமை யும், யானை முகமும், பானை வயிறும், தேவரும் அல்லர், விலங்குமல்லர், பூத கணங்களுமல்லர் என்பதையும், ஐந்து கரங்கள் பஞ்சகிருத்தியத்தைச் செய்பவர் என்பதனையும் உணர்த்துகிறது. எனவே உலக சராசரங்களுக்கு அப்பாற்பட்டவர் என்ற உண்மையை உணர வைக்கிறது.

பிள்ளையார் பிரணவ வடிவினர்

விநாயகருடைய தோற்றம் பிரணவ வடிவம். நாதவிந்துவடிவானவர் விநாயகர். நாதத்திற்கு வரிவடிவம் கீறு, விந்துவுக்கு வரிவடிவம் சுழி, இந்தக் கீறும் சுழியும் சேரும் போது யானையின் துதிக்கை போன்ற வடிவம் உண்டாகும். இதனைடே விநாயகக் கடவுளின் முகம் யானை முகம்

என்று கூறுவர். நாதவிந்துக்களின் வடிவம் "உ" என்பதாகும். இதனைப் பிள்ளையார் சுழி என்பர். சிவமும் சக்தியுமாகிய பிரணவ வடிவமே விநாயகர் வடிவம். துதிக்கை யுடன் கூடிய அவரது திருமுகம் ஓங்கார மூர்த்தி என்பதைக் குறிக்கும். அகர, உகர, மகர எழுத்துக்கள் மூன்றும் ஓங்காரத்துள் அடங்கும். "அ" பிரம்மாவையும், "உ" விஸ்ணுவையும் "ம்" சிவனையும் குறிக்கு மென்பார். எனவே விநாயகரே மும்மூர்த்தி களின் வடிவினர். உலகத் தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் காரணமானவர் விநாயகர். நாதவிந்து வடிவினரான விநாயகர் மூலா தார சக்தியாக விளங்குகின்றார். இதனை விளக்கவே கொடி மரத்தின் அடியில் கொடி மரப் பிள்ளையாராக வீற்றிருக்கிறார்.

விநாயகர் தோற்றம்

ஆறு ஆதாரங்களில் மூலாதார சக்தி யாக இருப்பவர் விநாயகர். ஞானத்தைத் தருபவரும் விநாயகரே. ஞானிகளின் ஆறு ஆதாரங்களிலும் மனதை நிலைநிறுத்தி இறைவனைக் காண்பர்.

கொடியேற்றம் பஞ்சகிருத்தியத் தத்து வங்களை விளக்குகின்றது. எனவே விநாய கப் பெருமானுடைய தோற்றமே அற்புத வடிவமாக விளங்குவதைக் காணலாம். பார்வதியும், பரமசிவனும், பெண் யானை யாகவும், ஆண் யானையாகவும் உருமாறிய போது விநாயகர் பிறந்தார் என்று புராணங் கள் கூறும். இதனுண்மை "அ" கரம் ஆண் யானையையும் "உ"கரம் பெண் யானையை யும் குறித்தது. அகர உகரச் சேர்க்கை ஓங் கார வடிவம் என்பதே. இவ்வாறு தோற்றம் பெற்றமையை மதகரி உரித்தோன் மதகளி றாகவும், உமை பிடி வடிவமாகவும் கூடிய கவியில் கூடாதாடலும் ஐங்கரக்கரிமுகன் வந்தவதரித்தார் எனப் பிள்ளையார் கதை கூறும். மேலும் அவர் தோற்றத்தில் அழ கினைச் சித்தரித்து,

'முண்டக மலர் போல் முழுதுஞ்சிவந்த
தண்டையும் சிலம்பும் அலம்புதாளிணையும்
குண்ட வட்டியும் தண்டரளமாலையும்'

என்றும், புண்டர நுதலுடனும், முப் புரி நூலுடனும் தோளொரு நான்கும் தொடைபுனை கழுத்தும் பொற்கரி முகத் துடனும இமையா முக்கண்ணுடனும், அங்குச பாசத்துடனும் ஐங்கரக் கரிமுகன் வந்தவதரித்தான் என்று கூறப்படுகின்றது. விநாயகருடைய அற்புத வடிவம் அப்படியே சித்தரிக்கப்படுகிறது.

இலக்கண சுந்தரியும் சஷ்டி விரதமும்

விநாயகப் பெருமான் சைவ மக்க ளுடைய வாழ்வியலில் ஒன்றித்துக் காணப் படுகின்றார். அவருடைய அற்புதச் செயல் களைப் புராணங்கள் வாயிலாக அறிகின் றோம். இவரை வழிபட்டுப்பயன் அடைந் தோர் பலர்.

விநாயகருக்குரிய விரதங்களில் ஒன்று விநாயகர்சஷ்டி விரதமாகும். இது கார்த்திகை மாதத்து கார்த்திகை நட்சத்திரம் கழித்து வரும் தேய்பிறைப் பிரதமை முதல் மார்கழி மாத வளர்பிறை சஷ்டி வரையிலான இருபத் தொரு நாட்கள் கொண்ட விரதமாகும். இவ்விரதத்தை விக்கிரமாதித்தன் மனைவி "இலக்கணசுந்தரி" நோற்கத் தொடங்கினாள். விரதநெறி பிழைத்ததால் அல்லலுற்றாள். கணவனைப் பிரிந்தும், வீடு தோறும் அலைந்தும் துரத்தப்பட்டும் வருந்தினாள். மீண்டும் ஔவையாரின் ஆலோசனைப்

படி விரதம் முறையாக அனுட்டித்து அருள் பெற்றார். விநாயகப் பெருமானுடைய அருட்கடாட்சம் முழுமையும் அவளுக்குக் கிடைத்தது. இக்கதை விநாயகர்சஷ்டி விரதத்தின்போது பிள்ளையார் கதையென யாவரும் படித்தும் கேட்டும் பயன் பெறு கின்றனர்.

விநாயகரின் அற்புதச் செயல்கள்

ஒரு சமயம் பொய்ச்சாட்சி சொன்ன குற்றத்தால் திருமால் உமையம்மையால் குருட்டுப் பாம்பாகும்படி சபிக்கப்பட்டார். அக்குருட்டுத்தன்மை நீங்கும் பொருட்டு திருமால் விநாயகரை வழிபட்டுக் குருட்டுத் தன்மையையும் பாம்புருவும் நீங்கப் பெற் றார். நம்பியாண்டார் நம்பி விநாயகரை வழிபட்டு, திருமுறைகள் இருக்குமிடம் கண்டும், அவற்றைத் திருமுறைகளாகவும் வகுத்துத் தந்தார். கைலைத் திருமணங்காண விரும்பிய ஔவைக்கு கைலை சேர்த்துத் திருமணங் காணச் செய்தவர். விநாயகர் கஜ முகாசுரனைச் சம்கரித்து தேவர்கள் துன்பந் துடைத்தார். சிவபெருமான் திருபுரதகனத் தில் தன்னை வணங்காமல் சென்ற குற்றத் திற்காக எலி வடிவமாகி தேரின் அச்சை அறுத்தலும், தேர் ஓடாது நின்றதும் மீண்டும் சிவன் விநாயகரை வழிபடத் தேர் ஊர்ந்தது என்றும் கதைகள் உண்டு. "அச்சது பொடி செய்த அதிதீரன்" என்று திருப்புகழ் புகழ்ந்து பேசும். இவை யாவும் விநாயகர் பெருமானின் பெருமைகளைக் கூறுவன.

அறுகம்புல்லால் அர்ச்சனை

அனலாசுரன் என்னும் அரக்கன் மக்க ளைக் கொடுமைப்படுத்தினான். துன்ப முற்ற மக்கள் விநாயகப் பெருமானைத் துதித்தனர். மக்களுடைய துயர் போக்க விநாயகப் பெருமான் அனலாசுரனைத் துதிக்கையால் தூக்கி விழுங்கிவிட்டார். பெருமானின் வயிற்றுக்குள் புகுந்த அனலா சுரன் வெம்மையை வெளியிட்டுக்கொண்டே இருந்தான். உலகம் முழுவதும் வெம்மை யால் உயிர்கள் துவண்டன. இதனை அறிந்த முனிவர்கள் ஒவ்வொருவரும் இருபத்தொரு அறுகுகளால் அர்ச்சித்து வழிபட்டபோது வெம்மை அடங்கிற்று. மூவுலகும் மகிழ்ந்தன.

அவந்தி என்னும் நகரில் சுலபன் என்னும் அரசன் இருந்தான். அவன் கொடையிற் சிறந்தவன். அவனிடம் மதி சூதனன் என்னும் வறிய அந்தணன் யாசித் தான். மன்னன் ஏளனமாகச் சிரித்தான். கோபங்கொண்ட அந்தணன் அரசனை எரு தாகும்படி சபித்தான். மனைவி சுபத்திரை அந்தணனைக் கழுதையாகும்படி சபித்தாள். அந்தணனும் சுபத்திரையை சண்டாளப் பெண்ணாகக் கடவாய் என்றான். மூவரும் சாபத்தால் உருமாறினர். ஒருநாள் மழை பெய்தது. மேய்ந்துகொண்டிருந்த கழுதை யும் எருதுவும் அருகிலிருந்த விநாயகர் ஆலயத்துள் சென்றன. பெண்ணும் புல்லுக் கட்டுடன் ஆலய மண்டபத்தை அடைந் தாள். அவள் கொண்டுவந்த அறுகம் புல்லை மாடும், கழுதையும் உண்ணத் தொடங்கின. தடியால் அடித்தாள். அவை ஒன்றை ஒன்று கொம்பால் குத்திச் சண்டை இட்டன. அப்பொழுது பலமாக வீசிய காற்றால் அறுகம்புல் விநாயகருடைய மேனி மேல் போய் விழுந்தது. அறுகம்புல் விநாயகருக்கு அர்ச்சனையானது. அதனால் மகிழ்ந்த பெருமான் மூவருக்கும் அருள் புரிந்தார். மூவரும் தேவலோகம் செ வதைக் கண்ட முனிவர்கள் அன்றிலிருந்து

விநாயகருக்கு அறுகினால் அர்ச்சனை செய்து விமோஷனம் பெற்றனர். விநாயகப் பெருமானுக்கு அறுகு உகந்த அர்ச்சனைப் பொருளாகும்.

மேலும் அறுகின் பெருமை பற்றிய சம்பவம் ஒன்றுளது. கவுண்டிய முனிவரும், அவரது மனைவி ஆசிரியையும் அறுகினால் கணபதியை வழிபட்டு வந்தனர். ஒருநாள் முனிவரைப் பார்த்து ஆசிரியை ஐயனே அறுகினால் தினமும் ஆனைமுகனைப் பணிகின்றோம். எமக்குச் செல்வம் கைகூட வில்லையே என்றாள். அதற்கு முனிவர் பூசையில் வைத்த அறுகம்புல் ஒன்றினை எடுத்து அவளிடம் கொடுத்து இதற்குப் பெறுமதியான பொருளை இந்திரனிடம் பெற்றுவா என்றார். ஆசிரியை மகிழ்ந்து கொண்டு இந்திரனிடம் சென்றாள். இந்திரன் குபேனிடம் அனுப்பினான். குபேரன் அறுகினை ஒரு தராசிலும் தனது செல்வம் முழுவதையும் மறு தராசிலும் இட்டும் தராசு சமப்படவில்லை. பின்பு பிரம்மா, விஸ்ணு முதலியோர் வந்து தராசுத் தட்டில் ஏறவும் சமநிலை அடைந்தது. அப்பொழுது விநாயகருக்கு அர்ச்சித்த அறுகின் பெருமை எல்லோருக்கும் புலப்பட்டது. விநாயகருக்கு இன்றுவரை அறுகு அர்ச்சனை நடை பெற்றுக்கொண்டே வருகிறது. காரணம் கருதி வழிபடுவோருக்கும், காரணம் கரு தாது வழிபடுவோருக்கும் கணபதி அருள் புரிவார்.

இது போன்ற பல அற்புதச் செயல் களை விநாயகர் நடாத்தியுள்ளார். அவற்றை கந்தபுராணம், மச்சபுராணம், விநாயகர் புராணங்கள் வாயிலாக அறியலாம். அறுவகைச் சமயங்களுள் ஒன்று கணபதி வழிபாடு. இதனைக் காணபத்தியநெறி என்பர். சிவனை முழுமுதற் கடவுளாக வழி படும் சமயம் சைவ சமயம். சைவ சமயத் தவர்கள் அறுவகைச் சமயத்தையும் கடவுள ரையும் ஒப்புக்கொள்வர். கடவுள் ஒருவரே. அவர் பல்வேறு வடிவங்களில் காட்சி தரு கின்றார். இதனைச் சிவஞானசித்தியார்,

'யாதொரு தெய்வங்கொண்டீர் அத்தெய்வ
மாகி ஆங்கே
மாதொரு பாகனார் தாம் வருவார்'

என்கிறது. ஆகவே சைவ சமயத்தவ ராகிய நாம் இறைவழிபாட்டில் நம்பிக்கை வைத்துக் கணபதியின் அருளைப் பெறு வோமாக. அத்திமுகனை நித்தம் நினைப் பவர் சித்த மகிழ்வோடு முத்தி பெறுவரே.

இலக்கியங்களில் முருக வழிபாடு

காலத்தின் கண்ணாடியாக விளங்குபவை இலக்கியங்கள். இலக்கியங்கள் மக்கள் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. பழங்குடி மக்களிடையே தனித்தனி வழிபாட்டு முறைகள் இருந்துள்ளன. மிகப்பழந்தமிழ் நூலாகிய தொல்காப்பியத்தில் இவற்றைக் காணலாம். மக்கள் தெய்வநம்பிக்கை உடையவர்களாக இருந்துள்ளனர். திருமால், முருகன், கொற்றவை, இந்திரன் முதலிய தெய்வங்களை வழிபட்டுள்ளனர். "சேயோன் மேயமை வரை உலகமும்" எனக் குறிப்பிடப்படுவது முருகனுடைய வழிபாட்டையே குறிக்கும். மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி எனப்பட்டது. குறிஞ்சி நிலமக்கள் முருகனைக் குல தெய்வமாக வழிபாடாற்றினர்.

சங்க இலக்கியங்களில் முருக வழிபாடு :-

தொல்காப்பியம் முதற்கொண்டு சங்க காலத்தெழுந்த நூல்களில் முருகவழிபாடு பற்றிய சிறப்புக்களைக் காணலாம். திருமுருகாற்றுப்படை, பரிபாடல், பதிற்றுப்பற்று, மதுரைக்காஞ்சி, கலித் தொகை முதலிய நூல்கள் குறிப்பிடத்தக்கன.

திருமுருகாற்றுப்படை இலக்கியம் கூறும் முருகவழிபாடு

'மாமுதல் தடிந்த மறுஇல் கொற்றத்து
எய்யா நல் இசைச் செவ்வேல் சேஎய்
சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம் புரிந்துறையும்
செலவு நீ நயந்தனை ஆயின் பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப
இன்னே பெறுநீ முன்னியவினையே'

என வீட்டின்பம் பெறும் வகையில் பக்தன் ஒருவன் முருகப்பெருமானிடம் ஆற்றுப்படுத்தப்படுவதைத் தெளிவாகத் திருமுருகாற்றுப்படை கூறுகின்றது. ஆற்றுப்படை இலக்கணத்தைக் கூற வந்த தொல்காப்பியர்

'பெற்ற பெருவளம் பெறார்க் கறிவுறீஇ
சென்று பயனெதிர் சொன்னபக்கமும்' என

பொருள் பெற்றான் ஒருவன் பொருள் தேடிச் செல்வான். ஒருவனுக்கு தான் பொருள் பெற்ற இடங் கூறி ஆற்றுப்படுத்தலாகும் என்பர். ஆனால் திருமுருகாற்றுப்படையில் வீடு பெற்றான் ஒருவன். அது பெற விரும்பிய ஒருவனுக்கு முருகப் பெருமானிடம் சென்று வீடுபேறு அடைவாய் என ஆற்றுப்படுத்தியதாக அமைந்துள்ளது. முருகப் பெருமான் விரும்பியுறையும் திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை ஆகிய ஆறுபடை வீடுகளும் அறிமுகம் செய்வதோடு, முருகப்பெருமானின் வீரதீரச் செயல்கள், அழகு, அருட்செயல்கள், மக்கள் வழிபாடாற்றும் முறை யாவும் எடுத்துக் கூறப்படுகின்றன. சங்ககாலத் தலைமைப் புலவரான நக்கீரரால் இது பாடப்பட்டது. ஆற்றுப்படுத்தலை அதாவது ஆன்மாக்களை ஆண்டவனிடத்து ஆற்றுப்படுத்தி, அழியாத பேரின்பப் பொருளைப் பெறச் செய்வதாக அமைந்துள்ளது. முருகப் பெருமான் சிவனொடு பேதகமற்ற நிலை, பெருங்கருணை என்பன சொற்சுவை பொருட்சுவை தோன்றக் கூறப்படுகின்றது.

குருடன் ஒருவன் குருடனுக்கு வழி காட்ட முடியாது. அதனாலேதான் வீடு பெற்றான் ஒருவன் வீடுபேறு அடைய விரும்பிய ஒருவனுக்கு வழிகாட்டியதாகக் கூறப்படுகின்றது. இந்த வகையில் நக்கீர தேவர் முருகன் அருளை முழுமையாகப் பெற்றவர். ஆதலின் ஏனையோரும் பயன் பெற வேண்டித் திருமுருகாற்றுப்படை மூலம் எமக்கு வழிகாட்டுகின்றார். இதற் கோர் கதையும் உண்டு. தீர்த்த யாத்திரை மேற்கொண்ட நக்கீரர் அரசமர நிழலில் தவம் செய்கிறார். மரத்தில் இருந்து விழுந்த ஒரு இலை பாதி பறவையாகவும் பாதி மீனாகவும் மாறி தரையிலும், நீரிலுமாக ஒன்றை ஒன்று இழுபட்டு நிற்பதைக் கண்டார். அவருடைய தவம் குலைந்ததால் பூதம் ஒன்று அவரைக் குகையுள் அடைத்து விட்டு உண்பதற்கு நீராடச் சென்றது. குகையில் ஏற்கனவே அடைபட்டுக் கிடந்த 999பேரும் நக்கீரரைத் திட்டினர். உன்னுடன் இன்று ஆயிரம் பேரும் பூதத்திற்கு இரையாகப் போகிறோம் என்று அழுதனர். பூதத்திடம் இருந்து தப்ப முடியாது என்பதை உணர்ந்த நக்கீரர் ஆறுபடை வீடுடையானைத் திருப்பரங் குன்றத்து முருகனை வேண்டித் திருமுரு காற்றுப்படை இலக்கியத்தைப் பாடினார். நக்கீர தேவரின் வழிபாட்டை ஏற்று வேண்டுகோளுக்கிரங்கி முருகன் தன் வேலாயுதத்தால் பூதத்தைக் கொன்றார். ஆயிரவரும் காப்பாற்றப்பட்டனர். இத னைத் திருச்செந்தூர்ப் பிள்ளை தமிழில் பகழிக்கூத்தர் "சீர் கொண்ட நக்கீரனைச் - சிறைவிடுவித்தவா- செங்கீரை ஆடி யருளே" என அழகாகப் பாடியுள்ளார். பன்னிருகைக் கோமானாகப் பரங்குன் றிலும், செந்தூர் முருகனாகப், பழனி முருகனாக தந்தைக்குபதேசித்த தனயனாக, குன்றுதோறாடுங் குமரனாகப், பழமுதிர் சோலை மலை கிழவோனாக எழுந்தருளி இருந்து அருள் வழங்கும் காட்சியையும் மக்கள் வழிபாடாற்றும் முறைகளையும் இந்நூலில் சித்திரிக்கப்படுகின்றது.

திருப்பரங்குன்றம்

திரு +பரம் +குன்றம் திருப்பரங்குன்றம் எனப்படும். அழகிய பரம்பொருளாகிய இறைவனைக் கொண்டமலை என்பது பொருள். நக்கீரர் பூதத்தால் அடைக்கப் பட்ட குகை திருப்பரங்குன்றத்திலேயே அமைந்துள்ளது. ஆதலின் நக்கீரர் முதலில் பரங்குன்றத்தையே பாடியுள்ளார். சிவ லிங்க வடிவிலமைந்த இம்மலையை மக்கள் சிவமாகவும் வழிபட்டனர். சூரனைச் சங் கரித்த முருகப் பெருமானுக்கு இந்திரன் தன் மகளாகிய தெய்வயானையை இத்தலத்தி லேயே திருமணம் செய்து கொடுத்ததாகக் கந்தபுராணம் கூறும். மணவாளக் கோலத் துடன் முருகன் பெருமான்பரங்குன்றில் காட்சி தருகின்றார். பங்குனி உத்தர நன் நாளில் திருமணம் நடைபெற்றதாக, இவ் விழா இங்கு சிறப்பாகக் கொண்டாடப் பட்டு மக்கள் பக்தி பூர்வமாக வழிபா டாற்றுகின்றனர். இதன் சிறப்பையும் வழி பாட்டையும் ஆற்றுப்படையில்

'கோழிதங்கிய வென்றடு விறற்கொடி
வாழியபெரிது என்று ஏந்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகம் சிலம்பாடிச்
சூரர மகளிர் ஆடும் சோலை'

எனச்சிறப்பிக்கப்படுகின்றது.

திருச்செந்தூர் (திருச்சீரலைவாய்)

'பல்லியம் கறங்கத் திண்காழ்
வயிரெழுந்திசைப்ப வால்வளை நரல
..... உருமிடி முரசமொடு

பல்பொறிமைஞை வெல்கொடி அகவ

.....

ஓங்குயர் வீழுச்சீர் அலைவாய் சேறலும்

நிலை இய பண்பே'

எனத் திருமுருகாற்றுப்படை வீடு பேற்றை விரும்பியவனுக்கு வழிகாட்டு கிறது. அங்கே ஆறுமுகங்களுடனும், பன்னிரண்டு கைகளுடனும் முருகப் பெரு மான் அருளுந் தன்மை கூறப்படுகின்றது. இது சமுத்திரக் கரையில் இருப்பதால் திருச்சீரலைவாய் எனப்பட்டது. சங்க இலக்கியங்களான புறநானூறு, "வெண்ட லைப் புணரி அலைக்கும் செந்தில்" என்றும், அகநானூறு, திருமணி விளக்கின் அலைவாய்" என்றும், தொல்காப்பியம் தீப்புனல் அலைவாய் என்றும், சிலப்பதி காரம்" சீர்கெழு செந்தில் என்றும் சிறப்பிக் கின்றன. வியாழ பகவான் வழிபட்டதால் வியாழ சேத்திரமென்றும், முருகனும் தேவர்களும் தங்கி இருந்ததால் ஜெயந்தி நகர் என்றும் அழைக்கப்படும். முருகப் பெருமானின் ஆறுமுகங்களும் அருள் பாலிப்பதை, பல்கதிர் விரிந்தன்று ஒரு முகம் என்றும், காதலினுவந்து வரங் கொடுத்தன்றே ஒருமுகம் என்றும், திங்கள் போலத்திசை விளக்கும்மே ஒருமுகம் என்றும், பகைவரை அழிக்கக் களம் வேட்டன்றே ஒரு முகம் என்றும், மட வரல் வற்றியொடு நகையமர்ந்தன்றே ஒருமுகம்" என்றும் ஆறுமுகமான பொருள் அருள் வணங்கும் தன்மை கூறப்படுகின்றது. பன்னிருகைகளின் அருட்செயல்களும் கூறப்படுகின்றன.

செந்தூரானின் அற்புதங்களும் வழிபாடுகளும்

17ஆம் நூற்றாண்டின் நாயக்கராட்சி யின்போது கடற்கொள்ளையர்கள் ஆலயத் துள் புகுந்து விக்கிரகங்களைக் கொள்ளை அடித்துச் சென்றபோது கடல் கொந் தளித்துப் புயலுடன் மழை பெய்ததால் விக்கிரகங்களை அங்கேயே கைவிட்டுச் சென்றனர். பக்தர்கள் பெருங்கவலை கொண்டனர். முருக பக்தனான வடமலைப் பிள்ளை என்பவர் கனவில் தோன்றிய முருகன் தான் இருக்குமிடத்தையும், அடை யாளத்தையும் கூறினான். இது முருக பக்தர்கள் முருகப்பெருமானிடத்து வைத்த மெய்யன்பையும் வழிபாட்டின் சிறப்பை யும் காட்டுவதாகும்.

விழித்தெழுந்த வடமலைப்பிள்ளை சில பக்தர்களுடன் வள்ளத்தில் ஏறிச் சமுத்திரத்தில் சென்றபோது கருடன் வட்ட மிட்டது. எலுமிச்சம்பழம் மிதந்தது கண்டு, அவ்விடத்தில் குதித்து ஆறுமுகப் பெரு மானையும் வேறு விக்கிரகங்களையும் எடுத்து வந்தார். ஆறுமுகப்பெருமான் திரு வுருவத்தில் மீன்கள் கொத்திய தழும்புகள் காணப்படுகின்றன என்று கூறுவர். இச் சம்பவத்தை கி.பி. 1653இல் எடுக்கப்பட்ட தாகக் கல்வெட்டுச் சான்று கூறுகின்றது.

1803இல் முருகப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனை அலங்காரங்கள் நடைபெற்று விசிறியால் விசிறி உபகாரம் செய்வதைக் கண்ட லூஷிங்டன் துரை உங்கள் கடவுளுக்கு வேர்க்குமா? என்று கேலி செய்ததாகவும், முருகன் மேனியில் வியர்வைத் துளிகள் தோன்றித் தரையை நனைத்ததாகவும், துரை பணிந்து ஆலயத் திற்குச் சன்மானங்கள் கொடுத்ததாகவும்

கதைகள் உண்டு. இவை பக்தி வழிபாட்டின் வெளிப்பாட்டைக் கூறுகின்ற சம்பவங்களே.

ஸ்ரீசங்கராச்சாரியாருக்கு ஏற்பட்ட நோயின் வேதனையால் செந்தூர் முருகன் மீது "ஸ்ரீசுப்பிரமணிய புயங்க தோத்திரம் பாடி நோய் நீங்கப் பெற்றார். குமர குருபரருக்கு ஊமைத் தன்மை நீங்கியதும் இத்தலத்திலேயே. இவரால் கந்தர்கலி வெண்பா முருகன் மேல் பாடப்பட்டது. இத்தலத்தில் வைகாசி விசாகப் பெருவிழா, சூரன்போர் என்பன சிறப்பாக இன்றுவரை கொண்டாடப்பட்டு வருகின்றன. பக்தர்கள் கந்தசட்டி விரதத்தை இங்கு சென்று அனுட்டித்து முருகப் பெருமானின் அருளைப் பெறுகின்றார்.

பழனிமலை (திருவாவினன்குடி)

'படிக்கின்றிலை பழனித்திருநாம் ~ படிப்பவர் தாள
முடிக்கின்றிலை முருகா என்கிலை'

என்று பாடுகிறார் குமரகுருபரர். இத்தலத்தை சங்ககால நூலாகிய அகநானூறு "பொன்னுடை நெடுநகர்ப் பொதினி" என்று கூறுகின்றது. பொதினி பழனி என்றாயிற்று.

இத்தலத்தை இலக்குமி, காமதேனு, சூரியன், பூமி, இந்திரன் ஆகியோர் வழி பட்டதால் திருவாவினன்குடி என்ற பெயர் பெற்றது.

திரு - இலக்குமியையும், ஆ - காம தேனுவையும், இனன் - சூரியனையும், கு- பூமியையும், டி - இந்திரனையும் குறித்தது.

மேலும் முனிவர்கள் காந்தர்வர்கள், மகாவிஷ்ணு, சிவன், பிரம்மா, இந்திரன், ஆதிதர் பன்னிருவர், உருத்திரர்கள், வசுக்கள், மருத்துவர், முப்பத்து முக்கோடி தேவர்கள், 18 கணங்கள் வந்து வாழ்த்தி வழிபட்ட தலமாகத் திருமுருகாற்றுப் படை கூறுகின்றது.

திருவேரகம் (சுவாமிமலை)

திருவேரகத்தைச் சுவாமி மலை என்பர். முருகன் குருநாதராக இருந்து தந்தைக்கு உபதேசித்த இடம் சுவாமிமலை. சிவபெருமான் ஞானோபதேசம் பெற்ற தலமாக விளங்குவதால் அந்தணர்கள் பூணூல் அணியும் சடங்கு வழிபாடு சிறப்பாகக் கருதப்படுகின்றது. அந்தணர்கள் நாற்பத்து எட்டு ஆண்டுகள் குருகுலவாசம் செய்து கற்றுப், பிரமச்சரிய விரதம் காத்து பக்குவமடைந்த பின் திருமணம் செய்து கொள்வர். அந்தணர்கள் ஓதல், ஓதுவித்தல் முதலிய தொழில்களில் வழுவாது ஆக நீயம், தக்கிணாக்கினியம், காருகபத்தியம் என்னும் முத்தீ வளர்த்து இறைவனை வழிபடுவர் என்ற செய்தியைத் திருமுருகாற்றுப்படை கூறுகின்றது. இதனை

'மூன்றுவகை குறித்த முத்தீச் செல்வத்து
இருபிறப்பாளர் பொழுது அறிந்து துவல'

என்றும்

"ஆறெழுத்து ஆக்கிய அருமறைக்கேள்வி
நாஇயல் மருங்கில் நவிலப்பாடி'
'விரையுறு மலரேந்தி வழிபாடற்ற ஏற்று முருகன்
திருவேரகத்தில் உறைகிறான்'
எனத் திருமுருகாற்றுப்படை கூறுகின்றது.

குன்றுதோறாடல்

குறிஞ்சி நிலத்தெய்வம் குமரன். எங்கெங்கு மலைகள் உண்டோ அங்கெல்லாம் குடியிருப்பவன் என்பதைக் காட்டக் குன்று தோறாடல் என்று குறிப்பிடப்படுகின்றது. குறிஞ்சி நிலத்தில் வாழும் குறவர் முருகனிடத்தில் அயராத பக்தியுடையவர்.

தமது பக்தியை வெளிப்படுத்தி முருகனை வேண்டி ஆடியும் பாடியும் வழிபாடாற்றுவர். குன்றுகளில் வாழும் குறவர் வெறியாடு களங்களில் நடத்தும் பூசாரிவேலன் வெறியாட்டினையும், குறப்பெண்கள் குரவை ஆடுதலையும், பக்திக்குக் கட்டுப்பட்ட குமரன் குரவையாடும் பெண்களோடு கைகோர்த்து ஆடுதலையும் முருகப் பெருமானின் அருள் வழங்குத்தன்மையையும் நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் அழகாகக் கூறுகின்றார். மலை நிலத்துத் தொண்டகப் பறையை முழக்கி ஆடும் குரவைக்கூத்தைக் கண்ட கானவமகளிரும் நறுமணங்கமழும் பூக்களைச் சூடி பல் வகை வாத்தியங்கள் இசைக்க குறவருடன் சேர்ந்து முருகப் பெருமானை வேண்டி ஆடி வழிபாடாற்றுவர். முருகன் சிவந்த மேனியனாய் மல்லிகை, வெண்டாளிப் பூவால் கட்டப்பட்ட மாலையை அணிந்து, செஞ்சாந்து பூசிக், கையில் வேலுடனும் இடுப்பிலே கச்சையும், காலிலே கழலும் அணிந்தவனாய் ஆட்டுக்கடாவிலும், சில சமயம் மயில்மீதும் சேவற்கொடியுடனும் வருகை தந்து, பல்வகை வாத்தியங்களிசைப்ப குறவர் மகளிரொடும், கானவ மகளிரொடும் கைகோர்த்து நின்று ஆடி மகிழ்ந்து வரங்களைக் கொடுப்பான் எனக் கூறப்படுகின்றது. இதனை ஆற்றுப்படை இலக்கியத்தில்

'குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை அயர்'

என்றும்

'மயில் கண்டன்ன மடநடை மகளிரொடு'
'கச்சினன், கழலினன் செச்சைக் கண்ணியன்'
குழலன் கோண்டன் குறும்பல்லியத்தன்
தகரன் மைஞ்ஞையன் புகரில் சேவல் அங்
கொடியன்'

.....

மென்தோள் பல்பிணை தழீஇத் தலைதந்து
குன்று தோறாடலும்'

எனக் குறிப்பிட்ட பாடல்களால் உணரலாம்.

திருத்தணிகை (பழமுதிர்சோலை)

மலைக்கோயில்களில் வாழும் குறப் பெண்களும் கானவ மகளிரும், பூசாரி வேலனும் முருகனுக்கு விழா எடுத்து வணங்குவர். இதனை ஆற்றுப்படை இலக்கியம் அழகாக,

'சிறுதினைமலரொடு விரைஇ மறிஅறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ
ஊரூர் கொண்ட சீர்கெழுவிழவு'

என்றும்

'செந்நெல் யாத்து வெண்பொரி சிதறி
மதவலி நிலை இய மாத்தாட் கொழுவிடைக்
குருதியொடு விரை இய தூவெள்ளரிசி
சில்பலி செய்து பல்பிரப்பு இரீஇச்
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்து'

என்றும் கூறுகின்றது.

மேலும் இக்குறமகள் நன்நகர் வாழ்த்தி, குறிஞ்சி பாடி, இன்இயம் கறங்க, பல்பூத்தூஉய், குருதிச் செந்தினை பரப்பி, ஆடுகளம் சிலப்பப்பாடி, கொடுமணி இயக்கி, ஓடாப்பூட்கை பிணிமுகம் வாழ்த்தி வேண்டுவர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட முருகன் அருள்பாலித்து இருந்தான் என்று குறிப்பிடப்படுகின்றது.

குறவர் வழிபாட்டில் சிறுதினை அரிசியைப் பூக்களோடு கலந்து வைத்தல், ஆடு பலியிடல், கோழிக் கொடி பக்கத்தே நிறுத்தி வைத்தல், முக்கியமாக இடம் பெறுவதைக் காணலாம்.

மேலும், வெண்பொரி தூவுதல், கொழுத்த ஆட்டுக்கடாவின் இரத்தத் துடன் வெள்ளை அரிசியைக் கலந்து பலி யிடல், பல்வகை உணவுகள் படைத்தல், மஞ்சளொடு சந்தனம் தெளித்தல், செவ்வலரி மாலையணிதல் என்பன இவ்வழிபாட்டில் குறிப்பிடப்படுகின்றன. இவ்வாறு குறவர் மகளிரும் கானவரும் முருகனிடம் பசிப்பிணியும், பகையும் நீங்கும்படி வேண்டி மணி அடித்து கொம்பு வாத்தியம் இசைத்து, குரவை ஆடி வழிபாடாற்றுவர் என ஆற்றுப்படை இலக்கியம் குறிப்பிடுகின்றது.

பரிபாடல் கூறும் முருக வழிபாடு

சங்ககாலத்துத் தொகை நூல்களில் ஒன்றான பரிபாடலில் முருகப் பெரு மானைப் பற்றிய எட்டுப்பாடல்கள் உள்ளன. இவை பண்ணோடு பாடிப் பரவிப் பரம்பொருளை வழிபட்டுப் பயனடையும் நெறியைக் கூறுவதாக அமைந்துள்ளன.

'யாமிரப்பவை பொருளும்
பொன்னும்போகமுமல்ல நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளினர் கடம்பின் ஒலிதாரோயே'

என அக்கால மக்கள் நல் வாழ்வின் புருடார்த்தங்களான அறம், பொருள், இன்பம், வீடு பேற்றையே முருகனிடம் வேண்டி வழிபட்டதாகக் கூறப்படுகிறது. இவ்வாறு வேண்டி வழிபாடாற்றுவோர் முருகப் பெருமானின் தோற்றப் பெருமை, வீரம், அருட்பெருமை, மயில், வேல், சேவற்கொடி, பிணிமுக மெனும் போர்யானை, ஆட்டுக்கடா என்பவற்றையும் மலை வளத்தையும் புகழ்ந்து கூறுவர்.

உலகியல் வேண்டி ஒரு சாராராகிய இளம் மகளிர் தம் காதலரை அடையவும், பொருள் வயிற் பிரிந்து சென்ற காதலனுக்கு எளிதில் பொருள் கிடைக்கவும், பகைவயிற் சென்ற காதலன் பகைவென்று வீரனாக வரவும், குழந்தை வரம் வேண்டியும், முருகப் பெருமானை வழிபட்டு வேண்டிக் காணிக்கையாக மயில்களும், யானை களும், கோடரிகளும் பொன்னாற் செய்து கொண்டும், பல்வேறு மலர்வகை கொண் டும் அணையாத தீபமேந்திக் கொண்டும் முருகனை வழிபடச் சென்றனர் என்று குறிப்பிடப்படுகின்றது.

'மணி நிறமஞ்ஞை ஓங்கிய புட்கொடி
பீணி முகமூர்ந்த வேல்போரிறைவ
பணியியாரீஇ நின்புகழேத்தி
அணி நெடுங்குன்றம் பாடுதும் தொழுதும்'

என மணிநிற மஞ்ஞையினையும், கோழிக் கொடியினையும் உடையவனே, பிணிமுகமூர்ந்து போரில் வெற்றி பெற்றவனே. எமது பிரிவுத்துன்பம் நீங்கும் பொருட்டு யாமும் சுற்றமும் நின்புகழைப் பாடித் துதிக்கின்றோம். அருள் புரிவாய் என வழிபடுமாறுங் கூறப்படுகின்றது. இதனை,

"செருவேற்றானை செல்வ நின்னடி யுறை
உரு தினிலுறைபதி சேர்ந்தார்க்குப்
பிரியாதிருக்க எம்சுற்றமொடுடனே"

என்றும்,

"கடம்ப மரணி நிலை பகர்ந்தோம்
உடங் கமராயமொடு ஏத்தினம் தொழுதே"

என்றும்

"ஆறிரு தோளவை அறுமுகம் பிரிந்தவை
நன்றமய ராயமோடு ஒருங்கு நின்னடியுறை
இன்று போலியைகெனப் பரவுதும்
ஒன்னார்த்தேய்த்த செல்வநிற் தொழுதே"

என்றும் பரிபாடலில் மகளிரும், மக்களும் முருகப் பெருமானை வேண்டி இருமையிலும் இனிது வாழ வழிபாடாற்றி யுள்ளமையை அறியக் கிடக்கின்றது.

கந்தபுராணம் கூறும் முருக வழிபாடு

இது கச்சியப்பரால் எழுதப்பெற்ற பேரிலக்கியமாகும். அழியாத அழகும், மாறாத இளமையும் பரிபூரண கடவுட் தன்மையும் கொண்ட முருகனின் ஆற்றலை பல்வேறு இடங்களில் கச்சியப்பர் குறிப் பிடுகின்றார்.

"தீயவை புரிந்தாரேனுங் குமரவேள்
திருமுன்னின்றால்
தூயவராகி மேலைத் தொல்கதி அடைவர்"
என்றும்

"ஆதலால் நமது சக்தி அறுமுகன் அவனும் யாமும்
பேதகம் அன்றால் நம்பால் பிரிவிலன் யாண்டும்"
என்றும்

"ஊரிலான் குணங்குறியிலான் உரைக்கும்
பேரிலான் ஒரு முன்னிலான பின்னிலான
பிரிதோர்
சாரிலான் வரல்போக்கிலான் மேலிலான்
தனக்கோர் பாரிலான்
நேரிலான் உயிர்க்கடவுளாய் என்னுள்ளே
நின்றான்"

என்றும் கூறுவதிலிருந்து முருகன் குணங்குறி கடந்த முடிவிலா ஆற்றலுட மையும், தோற்றமும், முடிவு மில்லாத பரம்பொருளே, சிவன்தான் வேறு அல்லன் என்பதும் குறிப்பிடப்படுகின்றது.

தீயவை புரிந்தாரையும் தூயதாக்கி நல்வரம் அழிப்பவன் என்றும் ஆணவங் கொண்ட சூரனுக்கும் நற்கதி கொடுத்தவன் என்பதும் சுட்டிக் காட்டப்படுகிறது. முருகப் பெருமானை வணங்கி யாவரும் உய்தி பெறுக என்பதே இப்பாடல் தெரி விக்கின்றது. கந்தபுராணம் முழுவதும் சூரசங்காரம் பற்றிய செய்தி மூலம் சைவசித்தாந்த தத்துவம் கூறப்படுகிறது. பதி, பசு, பாசம் நன்கு விளக்கப் படுகின்றது. ஆன்மாக்கள் உய்தி பெறுவதற்கான வழி பாட்டு முறையே இங்கு கூறப்படுவது எனலாம். சூரன் போர் இதனையே விளக்குகின்றது. சூரன், சிங்கன், தாரகன் மும்மலங்களாக உருவகப்படுத்தி, அவற் றைப் போரிட்டு நீக்கிச் சூரனின் பொல் லாக் குணங்கள் போக்கி, சேவலும், மயிலு மாக ஏற்று பேரருள் புரியும் முருகனை வழிபட்டு முத்தியடையுங்கள் என்று கந்தபுராணங் கூறுகின்றது.

முருக பக்தர்கள் முருகன் ஆலயங் களில் இதற்காகவே கந்தஷஷ்டி விரதம் இருந்து முருகனை வழிபடுகின்றார்கள். முருகன் ஆலயங்களில் சிறப்பாக இவ்விழா கொண்டாடப்படுகின்றது.

மேலும் முருகனின் அருட்செயல் களை விஷேட வழிபாட்டு முறையாக வழிபடுவதையும் காணலாம். திருக் கார்த்திகை விரதம், வைகாசி விசாகம், தைப்பூசம், சூரன்போர், மகோற்சவ வழிபாடு யாவும் மக்களால் பேணப்பட்டு வருவதோடு கந்தபுராணப் படிப்பு முருகன் ஆலயங்கள் தோறும் நடைபெறுவதும், மக்கள் அவற்றைப் பக்தி பூர்வமாகக் கேட்பதும், தம் வாழ்வைச் செப்பனிட்டு வழிபாட்டை மேற்கொள்வதும் கந்த புராணம் சொல்லும் வழிபாட்டு முறை களே.

கந்தபுராணம் கூறும் வழிபாட்டு முறை மக்கள் வாழ்வோடு பின்னி பிணைந்தவையாகும். கந்தஷட்டி விரதம்,

கார்த்திகை விரதம் இவற்றை எவ்வாறு கடைப்பிடிக்கவேண்டுமென்பதை விரத வியல் கூறும். முருகனுடைய கந்தஷட்டி வழிபாட்டை பல்லாயிரக் கணக்கான மக்கள் கைக் கொள்கின்றனர். ஆலயங் களில் ஒரே ஆரவாரம், பூசைகள், வழிபாடு கள், முருகநாமப் பஜனைகள் ஆங்காங்கு மக்கள் கூடி வழிபடுவதைக் காணலாம். மேலும் வள்ளி, தெய்வயானை திருமணம், பழனியாண்டவர் உற்சவம், மாம்பழத் திருவிழா, குடைத் திருவிழா என்பன வழிபாட்டு முறைகளே. அபிடேகம், ஆரா தனைகள், அர்ச்சனைகள் நடைபெறுதல் பக்தர்கள் காவடி எடுத்தல் அங்கப் பிர தட்சணம் செய்தல், கற்பூரச்சட்டி எடுத்தல் என்பன இவற்றுள் அடங்கும்.

முருகன் ஆலயங்கள் தோறும் இவ் வழிபாட்டுமுறை பெருகியுள்ளது. அதிலும் யாழ்ப்பாணத்துக் கலாசாரம் கந்தபுராணக் கலாசாரம் என்ற அளவிற்கு மக்கள் முருக வழிபாட்டு முறையால், பக்தியால் மேலோங்கி நிற்பதைக் காணலாம்.

ஈழமணித் திருநாட்டில் முருகப் பெருமானின் ஆலயங்கள் பல உள்ளன. அவற்றுள் கதிர்காமம், சின்னக்கதிர்காமம் (செல்வச்சந்நிதி) நல்லூர், மாவிட்டபுரம், கந்தவனக்கடவை, இணுவில் கந்தசுவாமி கோயில் என்பன பிரபலமான ஆலயங் களாகும். இவற்றை ஈழத்து ஆறுபடை வீடுகள் என்பர். இவை யாவும் அற்புதத் தலங்களாகும்.

கதிர்காமத்தைப் பற்றி அருணகிரி நாதன் தன்திருப்புகழிலே "மணிதரளம் வீசி அணி அருவி சூழ மருவுகதிர்காமப் பெருமாளே" என்கிறார். வழிபடுவோர் மாணிக்க கங்கையில் நீராடி முருகப் பெருமானை வழிபடுவர். காவடி, கற்பூரச் சட்டி ஏந்தி வழிபடுங்காட்சி கண்கொள் ளாக் காட்சியாகும். பக்தர்கள் இலங்கை யின் பல பாகங்களின்னின்றும் பாதயாத் திரை செய்து கந்தரலங்காரம், கந்தசட்டி கவசம், திருப்புகழ் என்பவற்றைப் பாடிக் கொண்டு சென்று வழிபாடாற்றுவர். "அரோஹரா" ஓசை எங்குமொலிக்கும்.

கதிர்காமம் மூர்த்தி விஷேடம், தீர்த்த விஷேடம், தலவிஷேடம் பெற்றது. இங்கு ஏனைய ஆலயங்கள் போலப் பெரிய கோபுரங்கள் இல்லை. மந்திர ஒலியில்லை. வாயைத் துணியாற் கட்டி கப்புறாளை மௌனபூசை செய்வார். விழாக்காலங் களில் புனித பெட்டி அலங்கரித்த யானை மேல் ஏற்றி வாத்தியங்கள் முழங்க முருகன் பவனி வர, பக்தர்கள் காவடி, கற்பூர தீப வழிபாடாற்றுவர். இங்கு சித்திரைப் புத்தாண்டு, வள்ளியம்மை திருமணம், ஆடி மாதத்தில் வரும் மகோற்சவம், திருக் கார்த்திகை விளக்கீடு என்பன முக்கிய விழாக்களாகும். இதனையொட்டிப் பக்தர் கள் நாடெங்கிலும், வேல்விழா, கந்த புராணப்படிப்பு, கந்தஷட்டி விரதம் என்பன அனுட்டிப்பர். கதிர்காம முருகனை அருணகிரிநாதர் திருப்புகழில் பாடியதோடு இருபதுக்கும் மேற்பட்ட சிற்றிலக்கியங்கள் புகழ்ந்து பாடியுள்ளன. கதிரமலைச்சிலேடை வெண்பா, கதிர மலை அந்தாதி, கதிரமலைப் பள்ளு பிள்ளைத்தமிழ், கதிர்காம புராணம் என்பவை சிலவாகும்.

செல்வச்சந்நிதி

சின்னக்கதிர்காமம் என்றழைக்கப் படும் இவ்வாலய வழிபாட்டையும், பூசை முறைகளையும் பல்வேறு பக்திப்பாடல்கள் மூலம் அறியலாம். இங்கு பூசை செய்

பவர்கள் வாய்கட்டி மௌன பூசை செய் வர். எல்லா முருகனாலயங்கள் போல முருகன் நாமபஜனை, காவடி, கற்பூரச் சட்டி முதலியன எடுத்து மக்கள் வழி படுவர். கந்தபுராணம் கூறும் வழிமுறை களில் வழிபாடுகளை மக்கள் செய்து வருகின்றனர். பூசைமுடியப் பூசகரால் தீர்த்தம், திருநீறு, மருந்து கொடுக்கப்படும். மருந்து நம்பிக்கையோடு பக்திபூர்வமாக உண்டவர்கள் தீராப்பிணிகளினின்றும் நீங்கியுள்ளனர். இங்கு 65 ஆலமிலை களில் முருகனுக்குப் பிரசாதம் படைக்கப்படும். அது மருந்தாகும். மட்டக்களப்பிலுள்ள மண்டூர்க் கந்தசுவாமி கோவிலும் வாய் கட்டிப் பூசைவழிபாடுகள் செய்வர். இவர் களைக் கப்பூகர் என்றழைப்பர்.

நல்லூர்

"நல்லூரான் திருவடியை நான்நினைத்த
போதினிலே
எல்லாம் மறப்பேனடி கிளியே"

என்று யோகர் சுவாமிகள் பாடி யுள்ளார். இது போன்ற பல பாடல்கள் பக்தர்களால் பாடப்பட்டுள்ளன. இங்கு ஏனைய கோயில்கள் போல் பூசை வழிபாடுகள், கொடியேற்றத் திருவிழா என்பன நடைபெறும். முருகன் அருள் வேண்டிப் பக்தர்கள் மெய்யன்போடு வழிபடுவர். காலந்தவறாது பூசை வழி பாடுகள் இடம்பெறுகின்றன.

திருக்கார்த்திகை, கந்தசட்டி என்பன முக்கியமான விழாக்களாகும். மாவிட்ட புரக்கந்தனின் பெருமை மாருதப்புரவீக வல்லியின் வரலாறோடு தொடர் புடையது. கந்தவனக்கடவை முருகனும் இணுவைக் கந்தன் ஆலயமும் ஏனைய ஆலயங்கள் போல் வழிபாட்டு முறை யிலும், பூசை முறையிலும் சிறந்து விளங்கு கின்றன. இவ்வாலயங்களைப் பற்றி இலக் கியங்கள் பல எழுந்துள்ளன.

கந்தவனக்கடவை முருகன்

இவ்வாலயம் பொலிகண்டியில் அமைந்துள்ளது. இவ்வாலயத்தைப் பற்றி தட்சிணகைலாய மான்மியம், ஈழமண்டல சதகம் என்பவற்றிற் குறிப்பிடப்படு கின்றது. சோழப் பேரரசர் காலத்தோடு தொடர்புடையது. உடுப்பிட்டியைச் சேர்ந்த சிவசம்புப்புலவர் மறைந்த கண் கிடைக்கப் பெற்றதால் "நான்மணிமாலை" என்னும் நூலை கந்தப்பெருமான் மீது பாடியுள்ளார். நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவரும், நான்மணிமாலை, திருப்பள்ளி யெழுச்சி போன்றவற்றைப் பாடியுள்ளார். இந்நூல் அரங்கேற்றத்தின் போது மயில் தோகை விரித்து ஆடியது. அப்போது யோகர் சுவாமிகள் "ஆடுமயிலே" என்ற பாடலைப் பாடினார். கச்சியப்பச்சிவாச் சாரியார் கந்தபுராணத்தைப் பாடி அரங் கேற்றிய பின் ஈழத்திற்குக் கொண்டு வந்து பாடப்பட்ட கந்தபுராணப் பிரதிச்சுவடு இன்றும் திக்கம் செல்லையாபிள்ளை குடும் பத்தினரால் பாதுகாக்கப்பட்டு வரு கின்றது. காஞ்சிமாமரமும் இவ்வாலயத் தில் உண்டு. இது மூர்த்தி, தல, தீர்த்த விஷேடமுள்ள ஆலயம். கந்தபுராண கலாசாரம் பேணும் அடியவர்கள் இங்கு வழிபாடாற்றும் முறை பெரிதும் காணப் படுகின்றது.

இணுவை முருகன் ஆலயம்

பழம்பெருமை வாய்ந்தது. காஞ்சி புரத்தில் இருந்து வந்த முருகன் என்றும், நொச்சித்தடியூன்றிய அடையாளங்கண்டு கோயில் எழுந்தது என்றும் கூறப்படு

கின்றது. பெருஞ்சித்தராகிய பெரிய சந்நியாசியாரால் உலகப் பெருமஞ்சம் ஒன்று அமைக்கப்பெற்றது. மூர்த்தி, தல, தீர்த்த விஷேடமுடைய இவ்வாலயத்தின் மேல் வடிவேற்சுவாமிகளால் பக்திப் பாடல்கள் பாடப்பட்டுள்ளன. புலவர் சா,வே.பஞ்சாட்சரத்தினால் பிள்ளைத் தமிழும், பண்டிதர் இராசையாவினால் முருகன் பக்திப் பாமாலையும், வீரமணி ஐயாவினால் பக்திக் கீர்த்தனைகள் பலவும் பாடப்பெற்ற சிறப்பினை யுடையது. இங்கு வழிபாட்டு முறையில் வேறு எங்கும் காணமுடியாத பக்திப் பரவசமாக மக்கள் வழிபாடாற்றுவர்.

முருகனின் அருள்பெற்ற குமரகுருபரர் கந்தகலிவெண்பாவில் பெருமானின் அருட் சிறப்புகளைக் குறிப்பிடுகின்றார். இவற் றைப்பாடி அடியார்கள் வழிபடுவர்.

"சேல்பட்டழிந்தது செந்தூர் வயல்பொழில்
தேங்கடம்பின்
மால்பட்டழிந்தது பூங்கொடியார் மனம்
மாமயிலோன்
வேல்பட்டழிந்தது வேலையும் சூரனும்
வெற்புமவன்
கால் பட்டழிந்தது இங்கென்தலைமேலயன்
கையெழுத்தே' என்றும்,

"பேற்றைத்தவம் சற்றுமில்லாத என்னைப்
பிரபஞ்சமெனும்
சேற்றைக்கழிய வழிபட்டவா" என்றும்,

"வீழிக்குத்துணை திருமென்மலர்ப்பாதங்கள்
மெய்மைகுன்றா
மொழிக்குத்துணை முருகாவெனும் நாமம் முன்பு
செய்த
பழிக்குத் துணை வடிவேலும் செங்கோடான்
மயூரமுமே" என்றும்

பலவாறு தான் முருகனால் ஆட்கொள்ளப் பட்டமையை கூறுகிறார். அருணகிரி நாதரும் திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, வேல்விருத்தம், மயில் விருத்தம் போன்ற வழிபாட்டுக்குரிய பாடல்களைப் பாடியுள்ளார். இச்சிற்றிலக் கியங்களை முருக பக்தர்கள் வழிபாட்டின் போதும், தமது நோய் பிணி நீங்கும் பொருட்டும் மெய்யுருகிப் பாடி அருள் பெறுவர்.

கந்தரனுபூதி 51 பாடல்களும் மந்திரங் களாகும். இதனைப் படிப்போருள்ளத்தில் மன உறுதி வளரும் பயம் நீங்கும். ஒரு இடத்தில் "நாளென் செய்யும் எனை நாடி வந்த கோள் என் செயும் - குமரேசர் இருதாளுங் கடம்பும் எனக்கு முன்னே வந்தோன்றிடினே" என்கிறார். முருகனால் ஆட் கொள்ளப்பட்ட அருணகிரியார் பாடல்கள் யாவும் எம்மால் பாடி வழிபடத் தக்கன. எமது வழிபாட்டில் இவை முக்கிய இடத்தை வகிக்கின்றன. பாடும்பொழுது நாமே முருகனை வேண்டிப் பாடுகின் றோம் என்ற உணர்வு வருவதே ஒளிய இது அருணகிரியார் பாடல் என்ற நினைப்பு வரு வதில்லை. இந்த வகையில் இச்சிற்றிலக் கியங்கள் வழிபாட்டிற்குப் பெரிதும் உதவுகின்றன.

"உல்லாச நிராகுல சல்லாப வினோத னும் நீ யலையோ" என்று கூறுவது ஆறு ஆதரங்களையுமே குறித்து நின்றது உல்லாச மேலான மலை திருப்பரங்குன்றம் (மூலாதாரம்) நிராகுலம் - துன்பமற்ற இடம் திருச்செந்தூர் - (சுவாதிஸ்டானம்) யோக - இன்பந் தருவது. பழனிமலை (மணிபூரகம்) இத - இதமாக இருப்பது. திருவேரகம் (அநாகதம்) சல்லாபம் - குன்று தோறாடல் விசுத்தி விநோதம் - பழமுதிர் சோலை (திருத்தணிகை) ஆக்ஞை

இவ்வாறு ஆதாரங்களும் (ஆறுபடை வீடுகளும்) மனிதனது உடலில் இருப் பதைச் சுட்டிக் காட்டுகின்றார். ஞானிகள் ஆறு ஆதரங்களிலும் முருகனைக் கண்டு களிப்பர். அருணகிரிநாதரும், நக்கீரரும் இவ்வாறே வழிபட்டனர்.

மேலும் அருணகிரிநாதர் எமது வழி பாட்டு முறைக்கு வழிகாட்டுவார்.

"யாமோதிய கல்வியும் எம்மறிவும் தாமே பெற வேலவர் தந்தது"
"இருதாள் வனசம் தர என்றிசைவாய்"
"மெய்யேயென வாழ்வையுகந்து
ஐயோ அடியேன் அலையத்தகுமோ"
"நமனார் கலகஞ் செயுநாள் வாகா முருகா"
"ஆறாறையும் நீத்து அதன் மேன்னிலையைப் பேறா அடியேன் பெறுமாறுளதோ"
"குருவாய் வருவாய்" குகனே.

இவ்வாறு முருகப் பெருமான் சந்நிதானத்தில் நின்று மெய்யன்போடு வழிபட முருகன் வாராமல் இருப்பானா. அருள்வழி காட்டினார் அருணகிரிநாதர்.

இவ்வாறு சங்ககாலமோ அதற்கு முந்தியோ எம் பழங்குடி மக்களால் வழிபடப்பட்ட முருக வழிபாடு வைதீக மதங்களில் ஒன்றாகிச் சைவ மக்கள் வாழ்வில் பிரிக்க முடியாத அளவிற்கு வேரூன்றிவிட்டது. முருகனின் அற்புதக் கோலங்கள், அருட்செயல்கள், பக்தருக்கு அருள் வழங்கும் தன்மையில் முருக வழிபாடு மேலோங்கி நிற்கின்றது. இத் தகைய முருகப் பெருமானை எம்முள்ளே கண்டு வழிபட்டு மேலான வீட்டின்பம் பெறுவோமாக.

நடராஜர் தத்துவம்

"ஆனந்த நடனமே நடராஜர் தத்துவம். ஐந்தெழுத்தின் வடிவமே நடராஜர்" இதனை மனவாசகம் கடந்தார் அழகாக

'ஆடும்படிகேணல் அம்பலத்தானையனே
நாடும் திருவடியிலே நகரம் ~ கூடு
மகர முதரம் வளர்தோள் சிகரம்
பகரு முகம் வா முடியப் பார்' என்று
கூறுவர்.

நடராஜப்பெருமானின் திருப்பாதம் "ந"கரமும் திருவயிறு, "ம"கரமும் திருத் தோள் "சி"கரமும், திருமுகம், "வ"கரமும் திருமுடி, "ய"கரமும் உணர்த்தி நிற்கும் என்கிறார். இது நமசிவாய என்றும் ஸ்ரீபஞ்சாட்சரத்தை குறிப்பனவாகும். எனவே ஐந்தெழுத்தே நடராஜர் தத்துவ மாகும். இதனைச் சைவசித்தாந்தமும்

"தோற்றந் துடி யதனில் தோயும் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் ~ ஊற்றமாம்
ஊன்று மலர்ப் பதத்தில் உற்றதிரோத முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு"

என நடராஜப் பெருமானின் திரு வுருவம் ஐந்தெழுத்தின் வடிவமே என மெய்ப்பிக்கும். உடுக்கேந்திய கை படைத் தலையும், அக்கினி ஏந்திய கை அழித் தலையும், அமைந்த திருக்கரம் காத்த லையும், ஊன்றிய திருப்பாதம் மறைத்த லையும், எடுத்த பொற்பாதம் அருளலையும் குறிக்கும். நடராஜப் பெருமான் புலித் தோலை ஆடையாகவும், கரியுரி போர்வை யாகவும், பாம்பையும் சந்திரனையும் கங்கையையும் அணிகலன்களாகக் கொண் டுள்ளார்.

ஆன்மாக்கள் தன்னை வந்தடையும் பொருட்டு நடராஜப் பெருமான் ஐந் தொழில் நடனம் புரிகின்றார். சக்தியின் துணை கொண்டு உயிர்களையும் தனு, கரண, புவன, போகங்களையும் படைக் கின்றார். இவற்றை நிலை நிறுத்தல் காத்தல் எனப்படும்.

சர்வசங்கார காலத்தில் இவற்றை மாயையில் ஒடுக்குதல், அழித்தல் எனப் படும். ஊன்றிய திருவடி மறைத்தலைக் குறிக்கும். தூக்கிய திருவடி அருளலைக் குறிக்கும். இடது கரம் தூக்கிய திருவடியை நோக்கியவாறு அமைந்துள்ளமை ஆன்மாக் கள் அடைய வேண்டிய இடம் இறைவன் திருவடி நிழலே என்பதைச் சுட்டிக் காட்டுவதாகும். இதனை "உமாபதிசிவம்" நாடலைபோல் கூடியவை தானிகழா வேற்றின்பக் - கூடலை நீ ஏகம் எனக் கொள் என்றும், அப்பர் சுவாமிகள் "தலைப் பட்டாள் நங்கை தலைவன் தாளே" என்றும் கூறுவர். ஆன்மா என்ற தலைவி ஆன்ம நாயகனாம் இறைவனுடைய தாளை அடைதலை இவை குறிக்கின்றன.

நடராஜரது தோற்றம் எப்பொழுதுமே அசைந்து கொண்டிருக்கின்றது. விஞ்ஞானி களும் கண்டு தெளிய முடியாத தாண்ட வத்தை நடராஜர் வடிவம் கொண்டுள்ளது. ஆறு ஆதாரங்களில் ஒன்றான புருவ நடுவாகிய சிற்றம்பலத்தே செவ்வொளி, நீல ஒளிகளின் அசைவும் அசையாமையுமே ஆனந்த நடனம் என்கிறார் திருமூலர்.

சிவன் சக்தியாகிய இயற்கையோடு கூடுமிடத்து மந்திர வடிவம் தாங்குகிறார். மந்திரங்களின் ஒலி சக்தியாகும் பொருள் சிவமாகும் ஒலியும் பொருளும் பிரிக்க முடியாதவை. இந்த வடிவமே சிவன் திருமேனி என்பர். உலகமே இறைவனு

டைய வடிவம். எட்டுத் திசைகளும் கரங்களாகும். இரண்டு திருவடிகளும் இரண்டு தத்துவங்களாகின்றன. ஒன்று ஊன்றிய திருவடி மறைத்தலையும், மற்றது தூக்கிய திருவடி அருளலையும் குறிக்கும்.

இறைவன் ஆறு ஆதாரங்களான மூலாதாரம், துவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, அஞ்ஞை என்றும் நிலைகளின்றும், பிரமரந்திரம் என்னும் நிலையினின்றும் அருள் புரிகின்றான்.

மூலாதாரம் பிருதுவி தலமாகின்றது. சுவாதிஷ்டானம் அப்புதலமாகின்றது. மணிபூரகம் தேயுதலமாகின்றது. அநாகதம் ஆகாய தலமாகின்றது. விசுத்தி வாயு தலமாகின்றது. ஆஞ்ஞை காசித்தலம் பிரமரந்திரம் கைலாசம் எனக் குறிப்பிடுவர். எனவே இறைவன் பஞ்சலிங்க தலங்களிலும் நின்றருள் செய்யுமாறு திருவாரூர், திருவானைக்கா, திருவண்ணாமலை, சிதம்பரம், திருக்காளத்தி அமைகின்றது. இதனாலே தான் திருவாரூர் பிறக்க முத்தி, சிதம்பரம் தரிசிக்க முத்தி, காசியில் இறக்க முத்தி என்று கூறுவர். இவ்வாறு இயற்கையே பஞ்ச பூதங்களாகி நிற்கும் இறைவனின் ஆனந்த தாண்டவம் ஆன்மாக்களுக்கு முத்தியின்பம் கொடுத்தற்காகவே நடை பெறுகின்றது.

இறைவன் படைத்தல் முதலிய ஐந் தொழில்களைப் புரிவதில் பொங்கியெழும் ஆனந்தமே தாண்டவமாகத் தோன்றியது. இதனைக் கண்டவர் பலவாறு கூறி மகிழ்வர். "ஆனந்தம் நடனம் ஆடினார்" என்றும் "ஐயன் கூத்தாடும் சிதம்பரமோ" என்றும் பரவசமுறுவர். சிதம்பர தரிசனம் கண்ட சுந்தரர் பரவசமுற்ற நிலையைச் சேக்கிழார் சுவாமிகள் மிக அழகாக "வந்த பேரின்ப வெள்ளத்துள் நினைத்து மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்" என்கின்றார். அப்பர் சுவாமிகள் தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என ஆனந்த நடராஜரை எம்முன் நிறுத்துகிறார்.

'குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில்
குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியில்
பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும்
காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இம்மானிலத்தே'

என மனிதப்பிறவி இறைவனை அடைவதற்கு வேண்டுமென்று கூறுகின்றார். மனிதப்பிறவி ஒன்றினாலே தான் இறைவனை அடைய முடியும்.

அப்பர் சுவாமிகள் தில்லைத் தலத்திலே கண்ட ஆனந்த நடராஜரை வருணிக்கின்றார். வளைந்த புருவங்கள், கொவ்வம் பழம் போன்ற உதடுகளில் புன் சிரிப்பு, செம்பவளமேனிமேல் பூசப்பெற்ற பால் வெண்ணீறு, பனித்த சடை தூக்கிய திருவடி இத்தனை அழகுக் கோலத்துடன் ஜபன் திருநடனத்தை கண்டு களித்தது மட்டுமன்றி மனிதப்பிறவியின் மாண்பினையும் எடுத்துக் கூறினார். இறைவனின் குமிண் சிரிப்பு முப்புரங்களை எரித்தலைக் குறிக்கும். முப்புரமாவது மும்மலகாரியம் என்பர். பிரார்த்தம், ஆகாமியம், சஞ்சித வினைகளை நாம் காலங்காலமாகச் செய்து வருகிறோம். அந்த வினைகள் புன்சிரிப்பினால் அழிக்கபடுதல் இங்கே குறிப்பிடப் படுகிறது. மேனிமேல் பூசப்பட்ட வெண்ணீறு சக்தியைப் பிரியாதவன் என்பதையும், சடைமுடி ஞானத்தைத் தருபவர் என்பதையும் குறிக்கும் அடையாளங்களாகும்.

இவ்வாறு இறைவனால் ஆடப்பெற்ற தாண்டவங்கள் 108 என்று கூறுவர். இவற்றுள் முக்கியமான ஏழு தாண்டவங்கள் ஸப்த தாண்டவங்கள் என்றும், பல வேறு சந்தர்ப்பங்களில் ஆடப்பெற்றவை என்றும் கூறப்படுகின்றது. எப்படியானாலும் ஏதோ வகையில் இவை ஐந்தொழில் தத்துவத்தையே குறிக்கின்றன.

ஆனந்த தாண்டவம் ஐந்தொழில்களையும் கூறுகிறது.

காளிகா தாண்டவம்	-	படைத்தல்
சாந்தி தாண்டவம்	-	காத்தல்
கௌரி தாண்டவம்	-	காத்தல்
சங்கார தாண்டவம்	-	அழித்தல்
திரிபுர தாண்டவம்	-	மறைத்தல்
ஊர்த்துவ தாண்டவம்	-	அருளல்

இவை யாவும் ஐந்தொழில் பற்றிய விளக்கத்தைக் கூறுவனவாகும்.

ஆனந்தத் தாண்டவம்:

நான்கு கை, மூன்று கண், பரந்த சடை, பொன்னிறம் வலது புறச்சடையில் பிறை, ஊமத்தமலர், கங்கையும், வலக்காதில் மகர குண்டலமும், பூணூலும், புலித்தோலாடையும், கால்களில் கிண்கிணி புனைந்தவராகவும் வலக்கையில் உடுக்கையும், இடக்கையில் தீயகலும் உடையவராக வலக்காலை முயலகன் மேல் ஊன்றி இடக்காலை மேலே தூக்கி வலப்பக்கமாக நீட்டியாடுவது என்று கூறப்படுகிறது. வலது கை உடுக்கை படைப்புக்குக் காரணமான நாதத்தை எழுப்புகிறது. இதற்குத் தடங்கல் ஏற்படுத்தும் தீய சக்திகளை அழிக்க இடக்கை தீயகல் காணப்படுகிறது. ஒருகை நன்மை தரும் அபயகரமாகவும், மற்றுமொரு கை வெற்றியைத் தரும் அருளலைக் குறிக்கிறது.

காளிகா தாண்டவம் :

ஒருமுகம் முக்கண், பரந்த சடை எட்டுக்கை வலக்காலைத் தூக்கி இடது காலை முயலகன் மேலூன்றி வலக்கையில் அபயம் உடுக்கை, சூலம், பாசம் இவற்றைத் தாங்கி ஒருகையை வலப்பக்கம் குறுக்கே நீட்டி ஆடுதல் உலக முன்னேற்றத்திற்குத் தடையான தீய சக்திகளை அழித்து கருணை செய்யும் தன்மையை உணர்த்துகிறது.

சாந்தி தாண்டவம் :

இது அந்தி மாலை வேளையில் இறைவன் புரியும் பிரதோஷ தாண்டவம். இடையூறின்றிப் படைப்புத் தொழில் நடைபெறுவதன் சிறப்பை உணர்த்துவது, நான்குகை, முக்கண், ஜடாமகுடம் வலது கைகளில் அபயம், உடுக்கை, இடது கையில் மயில்தோகை, இடது காலின் அடியில் முயலகனின்றி வளைத்து, வலக் காலைத் தூக்கி இடப்பக்கமாக வளைத்து நீட்டிப் பாம்புக் கங்கணம் தரித்து ஆடும் நடனம்.

கௌரி தாண்டவம் :

சாந்தமான தோற்றம் நான்குகை, செந்நிறம் புன்னகை முகம், கபாலம், கொக்கிறகு, ஊமத்தம்பூ, எருக்கம்பூ, பிறை, மதி அணிந்த சடாமுடி, பாம்பு அணிந்து வலது காலை ஊன்றி இடது பாதம் வளைத்து அபயம் உடுக்கை தீயகல் ஏந்தி இடப்பாகத்தில் கௌரி தேவியுடனும் வலப்பக்கத்தில் நந்தி பகவானுடனும், சடாமகுடமாகச் சுற்றப்பட்ட சடைமுடியை இடப்பக்கம் சாய்த்து நின்றாடுவது.

சங்கார தாண்டவம் :

இறைவன் பிரளய காலத்தில் ஆடுந் தாண்டவம் சங்கார தாண்டவமாகும். மயானமே களமாக நீறணிந்து சடையில் சந்திரகலை அசைந்திட மாயையில் இருந்து உயிர்களை விடுவித்துத் தன்னிடத்தில் அடக்கிக்கொள்ளும் வகையில் ஆடும் நடனமாகும். முக்கண்ணும், எட்டுக் கைகளுடனும், பரந்த சடை இடது பாதம் முயலகன் மீது ஊன்றி, வலப்பாதம் தூக்கி அபயம், சூலம், பாசம், உடுக்கு ஏந்தி இடதுகை கபாலம், அக்கினி தாங்கி ஆடுவது.

திரிபுர தாண்டவம் :

திரிபுரங்களை எரித்தபோது ஆடிய தாண்டவம் பதினாறு கைகள் இடது பக்கத்தில் கௌரி தேவியுடன் வலப்பக்கம் அபயம், டமருகம், வச்சிரம், சூலம் ஏந்தி, இடக்கைகள், வரதம், கேடயம், கடகம், கபாலம் தாங்கி ஆடும் நடனம்.

ஊர்த்துவ தாண்டவம் :

சிவனும் பார்வதியும் ஆடிய நடன மாகும். ஏற்றத் தாழ்வின்றி இருவரது நடனங்களையும் தேவர்கள் கண்டு களித் தனர். தாண்டவத்தினிடையே சிவபிரான் ஒருகாலை உயர்த்தித் தலைமேலே வைத் துக் கொண்டு துரித தாண்டவமாடலும், உமை காலை உயர்த்த மனமின்றி தோல்வியை ஒப்புக் கொண்டதாக இந்நடனம் அமை கிறது. இத்தாண்டவம் ஊர்த்துவ தாண்டவ மெனப்படும்.

இவ்வாறு ஆன்மாக்கள் உய்யும் வண்ணம் பஞ்ச கிருத்திய நடனத்தை இறைவன் ஆடிக் கொண்டிருக்கிறார். ஒரு முறை தாருகா வனத்து முனிவர்கள் கன்மமே பிரமம் என்று செருக்குற்றிருந் தனர். அவர்களது அறியாமையைப் போக்க திருவுளங் கொண்டார் இறைவன். திருமாலை மோகினி வடிவங் கொள்வித்து, தான் பிச்சாடனை வடிவந்தாங்கித் தாருகா வனம் சென்றனர். மோகினி வடிவத்தைக் கண்ட முனிவர்கள் தம்வசமிழந்தனர். முனிபத்தினிமாரும் பிச்சாடனர் பின்னே செல்வதைக் கண்ட முனிவர்கள் கோபங் கொண்டு யாகம் வளர்த்து யாகக்கினியி னின்றும், புலி, யானை, பாம்பு, பூதகணங் களைத் தோற்றுவித்து ஏவ அவற்றை எதிர்கொண்டு, புலித்தோலை உரித்து ஆடையாகவும் இறைவன் ஏற்றுக் கொண்டார். கோபங் கொண்ட முனிவர் கள் முயலகனை வருவிக்க இறைவன் அவனைக் காலால் மிதித்து ஆனந்த நடன மாடினார். எல்லோரும் ஆனந்த பரவச மாயினர். இதனை அறிந்த பதஞ்சலி முனிவரும், வியாக்கிரபாதரும் இறைவனை வேண்டித் தவமிருந்தனர். தவத்திற்கு இரங்கிய இறைவன் அவர்கள் முன் வெளிப்பட்டு எம்முடைய தாண்டவத் தைத் தாங்குவதற்கு உரிய இடம் தாருகா வனமும் தில்லையுமே ஆதலின் தில்லைக்கு வருக என்று அருள் புரிந்தார். அவ்வாறே இருவரும் தில்லைக்குச் சென்றனர். இறைவன் தைப்பூசமும் வியாழக்கிழமை யும், சித்தயோகமும் கூடிய சுபதினத்தில் நண்பகலில் திருநடனம் புரிந்தார். அதனைக் கண்ட பதஞ்சலி, வியாக்கிரபாத முனிவர்கள் பரவசமடைந்தனர். ஏனை யோர் சேவித்து நின்றனர். இரு முனிவர் களின் வேண்டுகோளின்படி ஆன்மாக்கள் உய்யும் வண்ணம் தில்லையிலே இறைவன் ஆனந்தத் தாண்டவம் புரிந்து கொண்டிருக் கின்றார். நாம் உய்யும் வண்ணம் அப்பெரு மானை வழிபட்டுப் பிறவிப்பிணி நீங்குவோமாக.

முத்தியின்பம் கூறும் திருவெம்பாவை

திருவெம்பாவை என்பது ஒரு சக்தி வழிபாடாகும். இதனைச் சைவர்கள் திருவெம்பாவை என்றும், வைஷ்ணவர்கள் திருப்பாவை, பாவை நோன்பு, மார்கழி நோன்பு எனவும் கூறுவர். திருவெம் பாவையை இயற்றியவர் மணிவாசகப் பெருமானாவார். திரு + எம்பாவை, திரு வெம்பாவை என நின்றது. திரு தெய்வத் தன்மையையும் எம்பாவை என்பது சத்தி யாகிய உமையம்மையையும் குறிப்ப தாகும். மலவிருளினின்றும் ஆன்மாக்களை விடுவித்து இறைவனிடம் சேர்ப்பது இத் திருவருட்சத்தியே. ஆதலின் இச்சத்தியைக் குறித்து இயற்றப்படும் நோன்பைத் திரு வெம்பாவை என அழைக்கப்படுகிறது.

திருவெம்பாவை எல்லாமாக இருபது பாடல்களைக் கொண்டது. இவற்றுள் முதற்கண்ட எட்டுப்பாடல்களும் துயி லெழப் பெறுவதையும், ஒன்பதாம் பாடல் இறைவனிடம் விண்ணப்பம் செய்து கொள் வதையும், பத்தாவது தொடக்கம் பதினெட் டாவது பாடல் வரை நீர்நிலை சென்று நீராடுவதையும், பத்தொன்பதாவது பாடல் நோன்பின் பயனாகிய வேண்டுகோளை வெளியிடலையும், இருபதாவது பாடல் இறைவன் திருவடி போற்றுவதையும் கூறுகின்றது.

பாவை நோன்பு விளக்கம்

ஆதியில் மழை வேண்டியும், நல்ல கணவரை அடைய வேண்டியும் கன்னிப் பெண்களினாலே நோற்கப்பட்ட இந் நோன்பு, அறிவாற் சிவனெனப் போற்றப் படும் மாணிக்கவாசகரினால் பரமார்த்திக மாகப் பாடப்பட்டுள்ளது. அன்றியும் பத்திச் சுவையும், நகைச்சுவையும் ஒருங்கே அமைய உலகியல் பிறளாது, உலகில் இருந்து கொண்டே பரமார்த்திக வாழ்வு பெற்று வாழலாம் என்பதைக் குறிப்பாகத் திருவெம்பாவை மூலம் உணர்த்துகிறார் மணிவாசகர்.

நோன்புக் காலங்களில் அதிகாலையில் துயிலெழுந்து தம்மோடொத்த கன்னிப் பெண்களை அவர்தம் பள்ளியறை வாசல் தொறும்புக்கு இறைவன் புகழ்பாடித் துயி லெழுப்பிச் சென்று நீராடி நிர்மலராய்த் தங்கள் வேண்டுகோளை விண்ணப்பிப்பர். இதனைச் சக்திகள் அதாவது மனோன்மணி முதல் வாமையீறாகவுள்ள நவசக்திகள் துயில் எழுப்புவதாகக் கூறப்படுகிறது.

துயிலெழுப்பல் என்பது

துயிலெழுப்புவதாகக் கூறப்படும் செய்தி முறையே உயிரழுக்காகிய மலத் திடை உழலும் உயிரையும் அவ்வுயிரை மலத்தினின்றும் பிரித்து இறைவனிடம் சேர்க்கும் திருவருட் சக்தியையும் நினை வூட்டுகின்றன. இதனைப் "பாசம் பரஞ் சோதிக் கென் பாய்" என்ற அடியும், "போதார் அமளிக்கே நேசமும் வைத் தனையோ" என்ற அடியும் தெளிவுறுத்து கின்றன. போதாரமளிக்கு வைத்த நேசமும் பரஞ் சோதிக்கு வைக்கும் பாசமும் முறையே இகபர இன்பங்கள் இரண்டை யும் கூறுகின்றன. சிற்றின்பம் அதாவது உலக இன்பத்தைப் பேரின்பமென மயங்கும் ஆன்மாவை இடித்துரைத்து நீ அடைய வேண்டிய இன்பம் பரமானந்தப்

பெருவாழ்வாகிய பேரின்பமன்றோ. அதனை விடுத்து இங்ஙனம் உழலுகின்றாயே. என்னே நின் மதியுடைமை என அறிவுறுத்தும் திருவருட் சக்தியைப் புலப்படுத்துகின்றது.

இன்னோரிடத்து அருட்சக்தியின் அருள் முன்னின்று உணர்த்த உணர்ந்து சிவக்காட்சி கைவரப்பெற்று இடையிடையே ஏற்பட்ட மலத்தாக்குதலினாலே பாதிக்கப்பட்ட ஒரு ஆன்மாவின் நிலை கூறுகின்றார்.

"தென்னா என்னா முன்னம்
தீ சேர் மெழு கொப்பாய்
என்னானை என்னரையன்
இன்னமுதன் என்றெல்லாமும்
சொன்னோம் கேள் வெவ்வேறாய்"

தென்னா என்று கூறி முடிப்பதற்கிடையே தீயிட்ட மெழுகுபோல் உருகிப் போவாயே. இப்பொழுது தென்னாடுடைய சிவனேயென்று முழுதும் கூறியும் வன்னெஞ்சப் பேதையர் போல் வாழாகிடக்கின்றாய். என்னே நின்மதியுடமை யென்று ஒரு தோழி இன்னொரு தோழியின் பழைய பத்தி நிலையைக் கூறித்துயிலெழும்புகின்றாள். தீ சேர் மெழுகொத்து இருந்த நிலை சிவக்காட்சி கிட்டிய பொழுது ஆன்மா இருக்கும் நிலையையும், வன்நெஞ்சப் பேதையாய் நின்ற நிலை, மலத்தாக்குதலாற் பாதிக்கப்பட்ட ஆன்மாவின் நிலையையும் உணர்த்திற்று.

பொங்கும்மடு

உலகத் தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் காரணமாகி நின்ற கூத்தப் பெருமானையும், ஐந்தொழில் தத்துவத்தையும் உணர்த்த,

"ஆர்த்த பிறவித்துயர் கெடநாம்
ஆடும் தீர்த்தன் என்றும்
தில்லைச் சிற்றம்பலத்தே ஆடும்
கூத்தன் என்றும்

குவலயமும் எல்லோமுங்
காத்தும் படைத்தும்
கரந்தும் விளையாடி நிற்கும்
நிலையும் இங்கே கூறப்படுகிறது.

பசு ஞானம் நீங்கிப் பதிஞானம் கைவரப் பெற்ற ஆன்மா எங்கும் சிவத்தையே கண்டு வழிபடும். அத்தகைய ஆன்மாவின் நிலை கூறுவாராய் நீராடும் பொய்கைதனை "எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த பொங்கும் மடு" என விளம்புகின்றார். பைங்குவளைகளினாலும், செங்கமலப்பைம் போதுகளாலும், அங்கங் குருகினத்தாலும் பின்னு மரவத்தாலும் நிரம்பி வழிந்த பொய்கையானது அவர்தம் கண்களுக்கு அம்மையப்பரை நினைவூட்டிற்றாம். கார்மலர் அம்மையின் நீலமேனியையும் அப்பனின் நீலமணிமிடற்றையும் உணர்த்தா நிற்க, அங்ஙனமே செங்கமலமானது அம்மையின் திருவடிகளையும், அப்பனின் செந்தீவண்ணத்தையும் உணர்த்த பின்னிக் கிடக்கும் ஆபரணங்களானவை அரவத்தையும் உணர்த்தப் பொய்கையானது அம்மையப்பரை நினைவூட்டி விட்டன.

தீட்சை

அம்மையப்பரை நினைவூட்டிய அந்த மடுவானது சிவதீட்சை முறையினையும் நினைவூட்டுகிறது. குவளை மலர் காண்டல் நினைவுக் குறியை உணர்த்தலாலும், கமலம் - அதாவது இதய கமலம் - கருதல் நினைவுக் குறியை உணர்த்தலாலும், சிறகால் குஞ்சை

அணைக்கும் பறவை - குரு தன்னாதரவில் சீடனை வைத்துக்கொள்ளுமாற்றை உணர்த்தலாலும், அரவம் ஐந்தெழுத்தோதி அருமறை உபதேசிக்குமாற்றை உணர்த்தலாலும், சிவதீட்சை முறை தனை குவளையும், கமலமும், அரவமும் நினைவூட்டுகின்றன. அம்மையப்பரின் அருள் வெள்ளத்துள் திளைத்தல் மடுவில் குடைந்து நீராடுவது உணர்த்தும்.

பத்திக் காதல்

இடையறாத சிவ பாவனையிலே உண்டாகும் அருள் விளக்கத்தில் தலைப்பட்டு ஆனந்த விளக்கத்தில் திளைத்து எல்லாம் அவன் செயலெனவே அவனே தானேயாய் நிற்கும் ஆன்மாவின் நிலையை உணர்த்துவான் வேண்டி "நெடுந் தாரை கண்பனிப்ப, ..." "பாரொருகால் வந்தனையாள்" பேரரையற் கிங்ஙனே பித்தொருவராமாறும் ஆரொருவர்" என்னும் அடிகளால் விளக்கியுள்ளார். திருவடியாய் விரிந்தும் திருமுடியாய் நுணுகியும் யாவற்றையும் கடந்து நிற்கும் அவ்விறைமையின் தன்மையும், எமது பிறவித் துயர் கெடும்படியாக ஞானப் பர வெளியாம் தில்லையிலே கூத்தனாகக் காட்சியளிக்கும் அப்பேரருளையும் பல வாறு புகழ்ந்து வாயோயாமல் சொல்லிக்கொண்டிருக்கும் சித்தக்களிப்பினால் கண்ணானது நீர்த்தாரைகளைச் சொரியா நிற்ப இவள் நிற்கும் நிலை பக்திக் காதலானது இந்த உருவத்தோடு பாருக்கு இறங்கி வந்து விட்டதோ என்று சொல்லும் படியானது எனக் கூறியும் அமையாராய் பத்திக்கே ஒரு பித்துப் போன்றாள் எனப் பத்தி நிலை கூறினார். அன்றியும் ஒரு ஆன்மா உலகில் இருந்து கொண்டே உலகியலில் ஒட்டாமல் சிவத்தைச் சார்ந்து வாழுமாறு கூறப்பட்டுள்ளது.

எங்கும் சிவத்தைக் காணல்

இறைவனது அருளுக்கு இலக்காகிச் சிவானந்தப் பெருவெள்ளத்துள் திளைக்கும் உயிரானது அவனருளே கண்ணாகக் கொண்டு எங்கும் எல்லாப் பொருள்களிலும் நீக்கமற வியாபித்து நிற்கும் பரம் பொருளை உள்ளவாறு உணரும், என் பதனை "ஆளுடையாள் இட்டிடையின் மின்னி" "திருவடிமேல் பொன்னஞ் சிலம் பிற் சிலம்பி" "திருப்புருவம் எனச்சிலை குலவி" "நமக்கு முன் சுரக்கும் இன்னருளே என்னப் பொழியாய்" என்னும் அடிகள் விளக்கா நின்றன. அருளாகிய மழை பொழிந்து ஆருயிர்களைக் காக்க வேண்டு மென்பது உள்ளுறையாகவுள்ளது.

இறைவனிடம் அடைக்கலம்

ஆன்மாவாகிய கொடி பற்றிப்படர ஆன்ம நாயகனாம் ஆண்டவனே கொழு கொம்பாக இருப்பவன் என்னும் கருத்தை இம்மைப் பயன்வேண்டி நோன்பிருக்கும் கன்னியர் தம் மேலேற்றிக் கூறுகின்றார்.

"உங்கையிற் பிள்ளை
உனக்கே அடைக்கலம்
எம் கொங்கை நின்னன்பர்
அல்லார் தோள் சேரற்க,
எங்கை நினக்கல்லாது
எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல் எம் கண்
மற் றொன்றும் காணற்க"

என விளக்கந் தரப்படுகிறது.

உனக்கு அன்பரல்லாதார் தோள் தோய்வதினாலே நாமும் நினக்கு அன் பில்லாதவர் ஆகிவிடுவோம். அங்ஙனம் அன்பில்லாதவர்களாய் நாம் வாழ விரும்ப வில்லை. உனக்கு வழியழி அடியார் களாகவே வாழ விரும்புகின்றோம்.

நீராடல் சிறப்பு

பிரம்ம முகூர்த்தம் மார்கழி மாதம் தேவர்களுக்கு விடியற் காலம் இக் காலத்தில் நீராடி நீர்மலராய் இறைவன் புகழ்பாடிப் பக்தர்கள் பேரின்பத்தில் திழைப்பர். நீராடுதல் இரண்டு வகை. ஒன்று உடல் சுத்தத்திற்கு ஆடுவது. மற்றது திருவருளாகிய தீர்த்தத்தில் புனித தீர்த்த மாடுதல். இது மேலானது. இதனைத் திரு வெம்பாவைப் பாடல் மார்கழி நீராடேல் எம்பாவாய் என்று கூறுகின்றது.

திருவெம்பாவை விரதம் பத்து நாட் கள் கொண்டாடப்படும். சிவன் ஆலயங் களில் மிகச்சிறப்பாக இது இடம்பெறும். தினமும் அதிகாலை திருப்பள்ளியெழுச்சி பாடுதல், திருவெம்பாவை பாடுதல் நடை பெற்றுப் பத்தாம் நாள் நடராஜனுக்கு விஷேட அபிடேகம், பூசை இடம்பெறும். பின்பு உமையம்மையாருடன் நடராஜர் நடனமாடி வருங்காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். இதனை ஆருத்திரா தரிசனம் என்பர். மார்கழித்திருவாதிரை என்றும் அழைப்பர்.

நிறைவுரை

இங்கே மாணிக்கவாசகர் திருவெம் பாவையைப் பக்திச்சுவை சொட்டச் சொட்ட எடுத்துக் கூறுவார். இறைவனைப் பற்றிக்கூறும் பொழுது ஆதியுமந்தமும் இல்லாதவன், அரும்பெருஞ்சோதி, மால றியா நான்முகன், ஊழி முதல்வன், முன் னைப் பழம்பொருள், பெண்ணாகி, ஆணாகி, அலியாகி என எல்லாமாக நீக்கமற நிறைந்து நிற்கும் பரம்பொருளை ஆங் காங்கே கூறி, இறைவனை அடையும் நெறி கூறி, பேரின்பங்கூறி உலகத் தோற்றத்திற் கும் ஒடுக்கத்திற்கும் காரணமானதும் இம்மை மறுமை இன்பங்களைத் தர வல்லதுமான திருப்பாதங்களை ஆதியாம் பாதமலர் என்றும், அந்தமாம் செந்தளிர்கள் என்றும், ஈறாம் இறையடிகள் என்றும் கூறி மார்கழி நீராடலின் பெறுபேறுங் கூறினார். ஆதலின் பாவை நோன்பின் பயன் கண்ட நாம் அதன் வழி ஒழுகிப் பேரின்பம் அடை வோமாக.

(என்னால் ஆத்மஜோதிக்கு எழுதப்பட்ட இக்கட்டுரை 1966.12.06இல் வெளிவந்தது)

சாந்தியடியானே சரணம் சரணம்

காப்பு

ஞானமுதல்வனே நற்குங்சரக் கன்றே அம்பிகை
புதல்வா அவ்வைக்கருள் புரிந்தவா
ஆனைமுகனே அற்புதக் கணபதியே அறுகம்புல்
அர்ச்சனை ஏற்பவரே பரராச சேகரனே
இணுவிலுறை வைரவநாதன் சாந்தியடியான் மேல்
பாமாலை புனைந்தேத்தி வழிபட
ஈனமிலாது அருள்சுரந்தருளி அடியவர் இடர்களையும்
நின்பொற் பாதகமலங்களே காப்பு.

1) ஏருழவர் உழுமுழவால் ஏற்றங்கண்ட மருதநில வளத்தின்
சைவப்பெருங் குடிகள் வாழுகின்ற
ஊராம் இணுவைப் பதிதனிலே கோயில் கொண்டாய் வேம்பொடு
தென்னை மா பலா வாழைக்கனிகள் சிந்த
தேனூரும் பொன்னொச்சி மந்தாரை சந்தனம் சாம்பிராணி சண்பகம்
முல்லை மல்லிகை மலர்கள் மணம் வீசும் சோலைசூழ்
நாலூரும் பேசும் பெருமையொடும் புனித தீர்த்தத்தினால் வினைகள்
தீர்க்கும் சாந்தியடியானே சரணமையா.

2) விரிஞ்சி வடுகனாய் முகுந்தவடுகனாய் உருத்திர வடுகனாய்
முத்தொழில் புரிந்து உலகம் காப்பவரே
நெருங்கி வந்து இடர் தருந் துட்டரை அழிக்கப்பெரும்
பைரவ மூர்த்தங் கொள்பவரே
விரும்பி வந்து வழிபடுமடியவர்க்கருள் செய்து வாடிய உயிர்கள்
பயிர்கள் வளமுற வான்மழை பெய்பவரே
அருளும் பொருளும் நீயே தெய்வமுங் குருவும் நீயே இணுவில்
பதி சிறக்க மங்கல வாழ்வு அருள்வீரே.

3) பஞ்ச பூதங்கள் ஐந்தும் நானே என்பான்
நாயையும் வாகனம் என்பான்
பஞ்சங்கள் தீர்ப்பான் பழவினை தீர்ப்பான்
பாரினை பார்த்து காத்திடுவான்
வஞ்சங்கள் தீர்ப்பான் வளங்கள் தருவான்
அருள்மழை எங்கும் பொழிந்திடுவான்
நெஞ்சத்தில் இருத்தி வழிபடுவோர்க்கு
முத்தி தந்தருள் செய்திடுவான்.

4) நான் முகன் அகந்தை அடக்கிய வீரன்
நாயகன் நானே என்றிடுவான்
பான்மையில் தாய்மை கருணையுள்ளம்
கொண்டவன் வைரவ நாதனிவனே
ஆண்மையில் அவனுக்கு அவனே
நிகராவான் பெரியவன் அவனே
வான் மழை பொழிவான் வானவர்மகிழ
நாமும் மகிழ்ந்து வழிபடுவோம்.

5) வேதங்கள் அவனே வேள்வியும் அவனே
முறையாய்ப் பூசைகள் செய்திடுவோம்
பாதகம் தீர்ப்பான் பாவங்கள் அறுப்பான்
சாந்தி தருவான் சாந்தியடியானே
நாததத்துவம் நானே என்பான் உடுக்கும்
ஏந்தி நிற்பான் இணுவிலில் உறைவானே
பூதங்கள் தோறும் நின்றான் தன்னை
இணுவிலில் கண்டுவழிபடுவோம்.

6) சுருண்டகேசம் படர்ந்தசடையும்
தரித்தே அவன் வருவான்
மருண்ட மனத்துயர் மயக்கம் போக்கும்
மாமலை மருந்துமானவன் சாந்தியடியானே
தெருண்ட உள்ளம் தெளிவுபடுத்த
தெய்வத் தீர்த்தம் தருவானே
வெகுண்ட பார்வை நீங்கிடநாமும்
வேள்வி தவம்பல செய்வோமே.

7) தந்திரவடுகன் சாந்தியடியான் சந்நிதி
சென்றுவிட்டால் துயரங்கள் போய்விடுமே
சுந்தரவாழ்வு சுகமாய் வருமே வைரவநாதன்
தருவான் எமக்கு நல்லவரமே
மஞ்சனமாட்டி மலர்கள் தூவி ஐயனை
வணங்கி மகிழ்வோமே நாமும்
மந்திரம் ஓதிப் பூசனை புரிந்து நற்
புண்ணியம் சேர்த்திடுவோம்.

8) பொங்கர வணிந்தோன் புத்திரன் அவனே
நீறுதரித் திருப்பான் புண்ணியன் அவனே
அங்கையில் சூலமும் கபாலமும் ஏந்திய
வைரவப் பெருமானே இணுவிலில் உறைபவனே

செங்கை சிவப்ப வரங்கள் தருவான் வாழ்வு
சிறந்திடுமே இங்கிதமாக இணுவில் உறையும்
தங்கக்கழல்கள் அடியினை போற்றி வழிபடுவோம்
தலைசாய்த்து நித்தம் வழிபடுவோம்.

9) காலனின் காலன் வைரவப்பெருமான்
கருணைக் கடலாவான்
சூலமேந்தும் சூலபாணி இணுவிலில்
உறைகின்றான் நாயும் வாகனமே
நீலமேனியன் நீள் நிலம் போற்றும்
காளி சக்தியுடன் களிப்பானே
ஞாலம் துலங்கிட ஒளியாய் விளங்கும்
வைரவ நாதனைத் துதித்திடுவோம்.

10) மரத்தடி கிணற்றடி மலையடிவாரம்
என்றே மகிழ்ந்து குடியிருப்பான்
கரத்தினில் கபாலம் ஏந்திய கடவுளை
சூலபாணியைக் கரங்கூப்பி வழிபடுவோம்
சிரத்தினில் சடைமுடிதரித்து உடுக்கையுமேந்திப்
பெருஞ் சித்தனுமாகி நின்றான் சிறுந்தொண்டனிடம்
அரிய பிள்ளைக் கறியமுதுண்ண விளைந்தவனை
உவந்து நாமிணுவையில் கண்டு வழிபடுவோம்.

11) வில்வந் தாமரை நொச்சியொடு மருக்கொழுந்து
சம்பங்கி பிச்சி மல்லிகைவகை
எல்லாம் சேர்த்து அர்ச்சனை செய்திடுவோம்
அப்பமும் வடையும் அதிரசத்தோடு
வெள்ளைப் பொங்கலும் படைத்து வழிபடுவோம்
வள்ளலே வைரவப் பெருமானே ஐய
கள்ள மற்றவர் மனதில் விரும்பி உறைபவரே
சாந்திதரும் கடவுள் சாந்தியடியானே.

12) சரணம் சரணம் சாந்தியடியானே சரணம்
சரணம் சரணம் வடுக நாதரே சரணம்
சரணம் சரணம் சேத்திர பாலனே சரணம்
மூலமூர்த்தியே சரணம் சரணம்
சரணம் சரணம் வடைமாலைப் பிரியரே சரணம்
சரணம் சரணம் சூலபாணியே சரணம்
சரணம் சரணம் நாய்வாகனரே சரணம் சரணம்
சங்கடந்தீர்க்கும் சாந்தியடியானே சரணம் சரணம்.

சேர்.பொன்.இராமநாதன் அவர்களின் நினைவாலயங்களும் அவரது பணிகளும்

ஈழத்தாய் பெற்றெடுத்த தவப் புதல்வன் சேர் பொன் இராமநாதன், தமிழர் களின் தலைமகன். சிறந்த தேசியத்தலைவர், பல்துறைப் புகழீட்டிய மகான். சிறந்த ஆத்மஞானி. எண்பது ஆண்டுகள் வாழ்ந்து நாட்டிற்கு ஆற்றிய சேவைகளில் சமயப் பணியும், கல்விப்பணியும் நிலைபெற்று விளங்குகின்றது. இராமநாதன் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி, பொன்னம்பல வாணேச்சரர் கோயில் உள்ளவரை அவர் புகழ் நிலை பெற்று வாழும்.

நினைவாலயங்கள்

1927ம் ஆண்டு இராமநாதன் கல்லூ ரிக்கு வருகை தந்த மகாத்மா காந்தியடிகள் "இராமநாதன் அவர்களின் பரோபகாரப் பண்பின் நினைவாலயமாக இக்கல்லூரி நிலைத்து நிற்கும்" என வாழ்த்திச் சென்றார். தனது வாழ்விற் பெரும் பகுதியை கல்விப் பணிக்காகச் செலவழித்த பணியாளர் சேர். பொன் இராமநாதன் என்றும், அவர் ஒரு உலகமேதை என்றும் சென்னைப் பல் கலைக்கழகத் துணைவேந்தர் சிட்டி பாபு சுட்டிக்காட்டினார்.

"சிறுவர் சிறுமியர்க்கு கல்வி இரு கூடம்
நிறுவினான் பெயர் என்றும் நிற்கும் ~
பெரும்பெயரான்
சென்னைக்குப் பச்சையப்பன் சீர்
யாழ்ப்பாணத்திற்குச்
மன்னு இராமநாதன்"

எனப் பிரான்சிங் கிங்ஸ்பரி தனது ஆய் வில் குறிப்பிட்டுள்ளார்.

ஆத்மீகத்தின் நிலைக்களங்களாக அமைந்த கல்லூரிகளும் ஆலயங்களும் அவரது நினைவாலயங்களாகும். இந்த வகையில் அவரது நினைவாலயங்களாக விளங்குபவை மருதனார்மடத்தில் பாரிய நிலப்பரப்பில் அமைந்த இராமநாதன் கல்லூரி, அதனோடிணைந்த நடராஜர் ஆலயம், கல்லூரி வளாகத்தில் அமைந்த சமாதி ஆலயம். திருநெல்வேலியில் அமைந்த பரமேஸ்வராக் கல்லூரி, பரமேஸ் வரன் ஆலயமும் கொழும்பு கொச்சிக் கடையில் அமைந்த பொன்னம்பல வாணேச்சரர் ஆலயம், கொடைக்கானலில் அமைந்த குறிஞ்சிக்குமரன் ஆலயமும் ஆகும். இவை யாவும் சேர் பொன். இராம நாதன் அவர்களின் புகழினை நிலைத்து நிற்கும் நினைவாலயங்களாகும்.

இலங்கையின் இந்துதமிழ் முதற் பெண்கள் கல்லூரி (இராமநாதன் கல்லூரி) நிறுவல்

காலமெல்லாம் நிலைத்திருக்க வேண்டு மென்ற நினைவோடு கட்டப்பட்டது இக் கல்லூரி. எந்த ஒரு வள்ளலாலும் நினைத் துப் பார்க்க முடியாத அளவில், 1913ம் ஆண்டு பெருந்தொகை நிதியைச் செல வழித்துக் கட்டப்பட்டது.

அந்நியர் ஆதிக்கத்தின் பிடியில் நம் நாடு சிக்கித்தவித்த காலம், மக்கள் சுதந்திர மற்றவராய் சுதேச கலாசாரத்தைப் பேண முடியாதவர்களாய் வாழ்ந்தனர். கல்வி, சமய வாழ்வு, பண்பாடு யாவும் சீரழிக் கப்பட்ட நிலையில் மதம் மாற்றம்

ஒன்றையே இலக்காக மக்களுக்கு கல்வி புகட்டப்பட்டது. கிறிஸ்தவப் பாதிரிமார் ஆங்காங்கு பாடசாலைகளை அமைத்துக் கல்வி புகட்டினர். வேறு வழியின்றி சைவப் பிள்ளைகள் கிறிஸ்தவபாடசாலைகளை நாடினர். இளைய தலைமுறையினர் சைவத்தைக் காட்டிலும் கிறிஸ்தவத்தை நன்கு அறிந்திருந்தனர். அவர்களது நடை, உடை, பாவனை யாவும் மேல்நாட்டு பாணியில் அமைந்திருந்தன. இதனால் பாதிக்கப்பட்ட பெற்றோர் நெஞ்சங்கள் குமுறினர். குமுறல்கள் வெடித்துப் புரட்சி உருவாகும் நிலை ஏற்பட்டது. இந்நிலையில் ஆறுமுகநாவலர் தோன்றித் தலைமை தாங்கிச் சமய மறுமலர்ச்சிக்கு வித்திட்டார்.

இந்த வகையில் ஆறுமுகநாவலரின் வழிகாட்டலைப் பின்பற்றி அஞ்சா நெஞ்சமும் தற்துணிவுங் கொண்ட இராமநாதன் தன் இலட்சியத்தை நிறைவேற்றினார். பெண் கல்வியில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் 1913ம் ஆண்டு மருதனார்மடத்தில் இராமநாதன் கல்லூரி நிறுவப்பட்டது. இது இலங்கையில் நிறுவப்பட்ட முதற் பெண் கல்லூரி என்ற பெருமையை உடையது.

கல்லூரியின் அமைவிடமும் அமைப்பும்

சைவத்தமிழ்ப் பண்பாட்டு மரபு காக்கும் சூழலில் பெண்கள் கல்வி பயில வேண்டிய அவசியத்தை உணர்ந்து அதற்கேற்ப மருதனார்மடத்தில் வடகீழ் பகுதியில் இருபத்தைந்தேக்கர் நிலப் பரப்பை வாங்கி அதில் பாரிய அளவிலான கல்லூரியை நிறுவினார். 1910 ஆம் ஆண்டு யூன் மாதம் 3ம் திகதி, யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சான்றோர் முன்னிலையில் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அப் பொழுது யோகர் சுவாமிகளின் குருவாகிய செல்லப்பா சுவாமிகள் அவ்விடத்திற்கு எழுந்தருளி வந்து ஒரு பனை ஓலை விசிறி ஒன்றைச் சேர். பொன் இராமநாதனுக்கு அன்பளிப்புச் செய்துள்ளார். இது இறைவன் நேரிலே வந்து ஆசீர்வதித்துள்ளார் என்றே கொள்ள வேண்டும். இவ்வாறு அனுபூதி மான்களுடைய ஆசீர்வாதத்துடன் ஆரம் பிக்கப்பட்ட கல்லூரி 1913ம் ஆண்டு ஜனவரி மாதம் 20ம் திகதி நல்ல முகூர்த்தத் தில் சம்பிரதாயச் சடங்குகளுடன் திறந்து வைக்கப்பட்டது. இச்சம்பவத்தை வெளியிட்ட "இந்து ஓகன்" பத்திரிகை "இக் கல்லூரியின் ஆரம்ப தமிழர் வரலாற்றில் புதிய சகாப்தத்தை உருவாக்குமென்றும், இது இந்துக்கள் தம் வாழ்வில் நினைவிற் கொள்ள வேண்டிய தினம் என்றும், இப்பணி தேசிய மறுமலர்ச்சிப் பணி" என்றும் சிறப்பித்தது.

பாரிய நிலப்பரப்பில் அமைந்த இக் கல்லூரி பலம் வாய்ந்த கட்டட அமைப்பைக் கொண்டது. நூற்றைம்பது அடி சதுரமான முற்றத்தைச் சுற்றி மண்டபம், வகுப்பறைகள், நூல்நிலையம், மாணவர் விடுதி, ஆராதனைக்கூடம், கலாசார மண்டபம் எனப்பல வசதிகளோடு கூடியதும் நவீனமாகக் காட்சி தரும் வகையில் கல்லூரி நிர்மாணிக்கப்பட்டது. நடராஜர் ஆலயமும் சரஸ்வதி மண்டபமும் திட்டமிடப்பட்ட வகையில் அமைந்தன. "பண் பாட்டுப் புரட்சியின் சின்னமாகக் கல்லூரி விளங்கியது"

"கருதரிய சற்சபையின் ஆனந்த நிர்த்தமிடுங்
கருணாகரக் கடவுளே
திரிகரண சுத்தியும் காரியசித்தியும் அருள்வாய்"

என்பது கல்லூரியின் மகுட வாசகம். ஆத்மீகத்தின் அடிப்படையில் சைவத் தமிழ்ப் பண்பாட்டுப் பாரம்பரியங்கள் பேணும் வகையில் இக்கல்லூரி அமைந் தது. அதனைச் சுட்டிக் காட்டுவதாக இம்மகுட வாசகம் அமைந்துள்ளது. பெண் கல்வியின் மறுமலர்ச்சியாக, பண்பாட்டுப் புரட்சியின் சின்னமாக இக்கல்லூரி விளங்குவதைக் காணலாம்.

ஒரு சமூகத்தை விழிப்படையச் செய் வதும் உயர்த்துவதும் கல்வி என்றால் அத்துணைச் சிறப்புடையது சமயக்கல்வி என்ற கொள்கையை முன்னெடுத்ததோடு நடைமுறைப்படுத்தியவர் சேர் பொன் இராமநாதனேயாவார். இதன் பேறாக அமைந்தவையே இராமநாதன் கல்லூரியும் பரமேஸ்வராக் கல்லூரியுமாகும்.

பெண் கல்வி புறக்கணிக்கப்பட் டிருந்த காலத்தில் சமூகத்தில் விழிப் புணர்ச்சியை ஏற்படுத்தி பெண்கல்வியில் வியத்தகு மாற்றத்தை ஏற்படுத்தினார். ஒரு ஆணுக்குக் கொடுக்குங் கல்வியிலும், ஒரு பெண்ணுக்குக் கொடுக்கும் கல்வியானது ஒரு சமூகத்தையே அறிவுடையோராக்கும் என்ற கருத்தின் வெளிப்பாடாக அமைந் ததே இராமநாதன் கல்லூரி. பெண்கல்வி புறக்கணிக்கப்பட்டு சைவத்தமிழ்ப் பண் பாடு சீரழிந்து போனபோது சைவத்தமிழ்ப் பெண்களுக்காக ஏற்படுத்தப்பட்டதே இராமநாதன் கல்லூரி. அது தனக்கெனத் தனித்துவமான கொள்கைகளைக் கொண் டிருந்தது.

இராமநாதன் கல்லூரியின் தனித்துவம்

"பொன்பூத்த மேனியினார் பூக்கொய்து பரமனுக்குப் பன்மாலை அணிவிக்கும் பாங்குடைத்திக் கல்லூரி" என்றும்,

"திங்கள் சேர்வாண்முகத்தார் திருநீற்றுத் தேசுடனே

மங்களஞ் சேர் வாழ்வுபயில் மாண்புடைத் திக் கல்லூரி"

என்றும் திரு. சு.நடேசபிள்ளை அவர் கள் கல்லூரியின் மகத்துவத்தைச் சுட்டிக் காட்டுகின்றார். பூக்கொய்து பன்மாலை பரமனுக்கு அணிவிக்குந் திறன், திருநீற்றுத் தேசுடன் விளங்கல், மங்களஞ் சேர் வாழ்வு பயில்மாண்புகளை இக்கல்லூரியில் பயி லும் மாணவர்கள் கொண்டிருந்தனர் எனகக் கூறுமிடத்து இங்கே கல்வி பயிலும் மாணவர்கள் சமூகத்தில் இனங்காணப் பட்டனர். கல்விமுறை, வழிபாடு, நடை, உடை, பாவனை, பண்பு, ஒழுக்கம் யாவற் றிலும் கல்லூரி மாணவிகள் இனங்காணப் பட்டனர். பாதம் வரை நீண்ட பாவாடை, சட்டையுடன் தாவணி அணிந்து கூந் தலைப் பின்னலிட்டு மலர்மாலை சூடி நீறு பூத்த நெற்றியில் திலகமிட்டு மங்களகர மாகக் காட்சி அளித்தனர்.

ஆரம்பத்தில் சேர் பொன் இராம நாதன் அவர்கள் கட்டுப்பாடு, ஒழுக்கங்கள், கல்விக் கோட்பாடுகளை வரையறுத்து தானே முன்னின்று நடாத்தியும், ஆழமான அறிவும் சைவாசார சீலமும் உள்ள ஆசிரியர் களைத் தேர்ந்து கற்பிக்கும் பணியிலும் ஈடுபடுத்தினார். மாணவர்கள் ஆசிரியருட னுறைந்து கற்கும் குருகுலக்கல்வி முறை பேணப்பட்டது. மாணவர்கள் கல்வி கற்றலோடு நில்லாது ஆலயப் பணிகளிலும் ஈடுபடுத்தப்பட்டனர். பண்ணோடிசை பாட இசைப்பயிற்சி அளிக்கப்பட்டது.

இதற்கென அமைந்த பூந்தோட்டத்தில் மலர் பறித்து மாலைகள் தொடுத்து மாணவர்கள் காலை, மாலை வேளைகளில் நடராஜப் பெருமானுக்கு வழிபாடாற் றினர்.

மாணவர்கள் சைவ உணவையே உண் டனர். மாணவர்கள் சைவத் தமிழ்க் கலா சாரம் பேணும் வகையில் உருவாக்கப் பட்டனர். சைவத்தமிழ்ப் பண்பாட்டு மறுமலர்ச்சியின் உன்னத நிலைகண்டு இலங்கையின் பல பாகங்களில் இருந்தும், சிங்கப்பூர், இந்தியா முதலிய வெளிநாடு களில் இருந்தும் மாணவர்கள் இராமநாதன் கல்லூரிக்கு வந்து தங்கி இருந்து கற்றார்கள் என்றால் இராமநாதன் எந்த இலட்சியத்தை முன்வைத்தாரோ அது நிறைவேறியுள்ளது என்பதே அர்த்தமாகும்.

சைவத் தமிழ்க் கலாசாரம் பேணும் வகையில் புராண, இதிகாச இலக்கியங்கள் கூறும் இலட்சியப் பெண்களை உருவாக் கும் பணி தொடர்ந்தது. பலர் உருவாக்கப் பட்டனர், பலர் உயர் பதவிகளை வகித் தனர். வைத்தியத்துறை, நீதித்துறை, கல்வித்துறை, சமயத்துறை, நடனத்துறை, இசைத்துறைகளில் உயர்ந்து வெளிநாடு களிலும் தங்கள் செல்வாக்கைச் செலுத்தி இராமநாதன் கல்லூரிக்குப் பெருமை சேர்த் தனர். திருமண வைபவங்களில் கூட இராம நாதன் கல்லூரி மாணவர்கள் என்றால் பெருமதிப்புச் சமூகத்தில் காணப்பட்டது. சேர் பொன் இராமநாதன் அவர்களால் ஏற்றி வைத்த கலாசாரத்தீபம் சமூகத்தில் சுடர் விட்டுப் பிரகாசித்தது. இந்த வகை யில் இராமநாதன் நிலைவாலயமாகிய இக்கல்லூரி ஒரு நூற்றாண்டு காலத்தில் எத்தனையோ சாதனைகளை நிலைநாட்டி விட்டது என்றே கூறலாம்.

ஆடவல்லானுக்கு ஒரு ஆலயம்

ஒரு நூற்றாண்டு காலத்திலும் காலத் தால் அழியாத நினைவாலயமாக விளங்கு வது நடராஜர் ஆலயமாகும். சைவமணமும் தமிழ் மணமும் ஒருங்கிணைந்து வளரும் இக்கல்லூரியில் ஆட வல்லான் நடராஜப் பெருமானுக்கு மேல் மாடியில் ஓர் ஆலயம் அமைத்துத் தந்தவர் சேர் பொன் இராம நாத வள்ளலார். ஆத்மீகத்தின் நிலைக்களங் களாக விளங்குபவை ஆலயங்கள். எனவே ஆத்மீகத்துடனிணைந்த கல்வியை வழங்க வேண்டுமென்று எண்ணிய வள்ளல் தன் எண்ணத்தை "பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்வோம்" என்ற பாரதி வழி நின்று நிலைநிறுத்தியுள்ளார். அவர் ஆற்றிய பணிகள் ஒவ்வொன்றும் காலத் தால் அழியாத நினைவாலயங்களாக அமைந்துள்ளன.

இவ்வாலயமானது கல்லூரியின் மேற்குப் புறவாயில் முகப்பில் மேல்மாடி யில் அமைந்துள்ளது. பாரிய இரும்புத் தூண்கள் இக்கட்டத்தைத் தாங்கி நிற் கின்றன. பிரதான வாயிலினூடாகக் கல் லூரி மண்டபத்துள் நுழையும் பொழுதே சரஸ்வதி மண்டபம் அமைந்திருத்தலைக் காணலாம். நடராஜப் பெருமானைத் தரி சிக்கச் செல்லும் மேல் மாடிப் படிக்கட்டின் மேல் மாடத்தில் கல்லூரித் தெய்வம் கலைமகள் அமர்ந்திருத்தலைக் காணலாம். படிக்கட்டுக்கள் வண்ண வண்ணக் கோலங் களால் அழகு செய்யப்பட்டிருக்கும். நவ ராத்திரி காலங்களில் சரஸ்வதி கல்லூரிக் கலைத் தெய்வத்திற்கு கொலு வைத்து விசேட ஆராதனைகள் நடைபெறும்.

படிக்கட்டு வழியே சென்று ஆடவல் லானையும், சிவகாமசுந்தரியையும் தரிசிக்க வாய்ப்பு உண்டு. பாரிய இரும்புத் தூண்கள்

தாங்கி நிற்கும் ஆலயம் பலம் வாய்ந்த பலகைகளினால் அமைந்த நிலப்பகுதி யாகும். ஓட்டினால் வேயப்பட்ட கூரையை யும் அதனை மறைத்து அடிக்கப்பட்ட பலகைகள் வர்ண வேலைப்பாடுகளுடன் கூடியதாக அமைந்துள்ளது. பாரிய மரக் கதவுகள் ஆங்காங்கே பொருத்தப்பட் டுள்ளன. ஆலயத்திற்குத் தேவையான பொருட்கள் வைப்பதற்கு களஞ்சிய அறை, காண்டாமணி அடிப்பதற்குரிய அறை வடக்கும், தெற்குமாக அமைக்கப்பட் டுள்ளது.

மரத்தினாலான அழகிய வேலைப் பாடுகளோடு கூடிய ஆலயம் போன்ற அமைப்பில் செய்யப்பட்டு யாழிகள் பொருத்தப்பட்ட பீடத்தில் ஆடவல்லான் நடராஜப் பெருமான் சிவகாமசுந்தரி சமேதராக இருக்கை கொண்டு அருள் பாலித்துக் கொண்டிருத்தலைக் காண லாம். பெருந்தொகையான மாணவர்களும், ஆசிரியர்களும் வழிபடக்கூடிய வழிபாட்டுத் தலமாக இது அமைந்துள்ளது.

ஆலயத்திற்கென அமைத்த பூந் தோட்டத்தில் மலர்கள் பறித்து மாலைகள் தொடுத்து இறைவனுக்குச் சாத்தி வழி படுவதும், நிறுவுநரால் தெரிவு செய்த திரு முறைப் பாடல்களைப் பண்ணோடு, பாடு வதும், காலை மாலை வேளைகளில் பூசை யிற் கலந்து கொள்வதும் விடுதி மாணவர் களின் அன்றாட நிகழ்வுகளாகும். ஆட வல்லானுக்குரிய அபிடேகங்கள் யாவும், நவராத்திரி, சிவராத்திரி விழாக்கள், நாயன் மார் குருபூசைகள், திருமுறை விழாக்கள் யாவும் இவ்வாலயத்தில் ஒழுங்காக நடை பெற்று வருகின்றன.

புனருத்தாரண வேலைகள்

இத்தகைய ஆலயமானது ஒரு நூற் றாண்டு பழமை வாய்ந்தது. காலத்திற்குக் காலம் ஏற்பட்ட அனர்த்தங்களினாலும் முதுமையினாலும் தன்தனிப் பொலிவை இழந்தது. மேற்கூரை, சுற்றிவர அமைந்த கட்டடங்கள் நிலப்பகுதி, கதவுகள் பழுதடைந்தன. இதனைக் கண்ணுற்ற (அப் பொழுது கல்லூரியில் தங்கி இருந்த) துர்க்கா துரந்தரி அம்மா அவர்கள் 1998 ஆம் ஆண்டு மூன்று லட்சம் ரூபா செலவில் ஓரளவு திருத்த வேலைகள் செய்து அதே ஆண்டில் கும்பாபிடேகமும் நடாத்தி வைத்தார்.

தொடர்ந்து ஆலயம் பழுது பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்ட பொழுது அப் பொழுது அதிபராக இருந்த சிவஞான சுந்தரம் அதிபர் அவர்களும், ஆசிரியர் களும் நலன் விரும்பிகளும் பழைய மாணவர்களிடம் உதவி கோரி நின்றனர். இதனைச் செவிமடுத்த கனடாப் பழைய மாணவர் சங்கம் திருத்த வேலைகளைச் செய்து தர முன்வந்தது. அவுஸ்ரேலியா, லண்டன் பழைய மாணவர்களும் இவர் களுடன் இணைந்து கொண்டனர். திருத்த வேலைகளுக்காக 2009ம் ஆண்டு நடராஜர் சிவகாமசுந்தரி சமேதராக, இலிங்கம் ஏனைய விக்கிரகங்கள் யாவும் சமாதி ஆலயத்துள் வைக்கப்பட்டு பூஜை வழி பாடுகள் நடைபெற்றன. வழிபாட்டுக்குரிய தலம் நிலைகுலைந்ததால் கல்லூரி பல வழிகளிலும் பாதிக்கப்பட்டது.

50 இலட்சம் ரூபாவைப் பழைய மாணவர்கள் திருத்த வேலைகட்குச் செலவழித்திருந்தனர். திருத்த வேலைகள் பல்வேறு தடைகளை எதிர் கொண்டது.

அப்பொழுது கல்லூரிக்குப் புதிய அதிபராக வேணுகா சண்முகரட்ணம் நியமிக்கப்பட்டிருந்தார். வழிபாட்டின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி வேணுகா சண்முகரட்ணமும், பழைய மாணவர்களும், ஆசிரியர்களும் எடுத்த முயற்சியால் ஆலயத் திருப்பணிகள் அவசரமாக முடித்துத் தரப்பட்டன. கீழ்மாடி வேலைகள் முற்றாகத் திருத்தப்படாத நிலையிலும், தாமதிக்கப்பட்ட சில திருப்பணிகளை விரைவுபடுத்த சேர் பொன் இராமநாதன் அவர்களின் வழித்தோன்றல் D.M சுவாமிநாதன் (பா.உ) அவர்களும், இந்து மாமன்றத் தலைவர் க.நீலகண்டன் அவர்களும், பேராசிரியர் க.சிற்றம்பலம் அவர்களும் ஒத்துழைத்து எடுத்த கடும்முயற்சியால் கும்பாபிஷேகம் நடைபெற இறைவன் திருவருள் கிட்டியது. நல்ல உள்ளம் படைத்தவர்களின் உதவியால் நடராஜர் ஆலயம் புதுப்பொலிவும் இளமையும் பெற்று எழுந்து நின்றது. அதிபர் திருமதி சண்முகரட்ணம் தலைமையில் 21.06.2012 குடமுழுக்குப் பெருவிழா சிவகாமசுந்தரி நடராஜப் பெருமானுக்கு நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து புதிய அதிபராக நியமிக்கப்பட்ட திருமதி கமலராணி கிருஷ்ணபிள்ளை அவர்கள் கல்லூரி நடவடிக்கைகள், ஆலயம் யாவற்றையும் கவனித்து வருகின்றார். ஒரு நூற்றாண்டைக் கண்ட நினைவாலயங்கள் பல பிரமுகர்களுடைய ஆசியுடன் நூற்றாண்டு விழாவைக் கொண்டாட உள்ளது மகிழ்வானவிடயம்.

கல்லூரி வளாகத்தில் அமைந்த சமாதி ஆலயம்

இற்றைக்கு எண்பது வருடங்களாக இராமநாதன் அவர்களின் நினைவாலயமாக திகழ்ந்து கொண்டிருக்கின்றது. இது கல்லூரி வளாகத்தின் தென்மேற்குத் திசையில் சேர். பொன் இராமநாதன் அவர்களின் நினைவாலயமாக இச்சமாதி ஆலயம் அமைந்துள்ளது. பேரறிஞர்களாலும், வெளிநாடுகளில் இருந்து வரும் பிரமுகர்களினாலும் வணக்கத்திற்குரிய ஆலயமாக இருப்பது ஒரு தனிச்சிறப்பாகும்.

பிரம்மச்சரியம், கிருகஸ்தம், வானப் பிரகஸ்தம், சந்நியாசமென்ற வாழ்க்கைப் படி நிலைகளில் வாழ்ந்து அருட்பரானந்த சுவாமிகளிடம் குரு உபதேசம் பெற்று முழுத்துறவு பூண்டு வாழ்ந்த ஆத்ம ஞானியே சேர்.பொன் இராமநாதன் அவர்கள். இவர் 1851ஆம் ஆண்டு அவதரித்து எண்பது ஆண்டுகள் நிலவுலகில் வாழ்ந்து செயற்கரிய சாதனைகளை நிலைநாட்டி 1930 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 26 ஆம் நாள் இறைவனுடன் இரண்டறக் கலந்தார்.

இவர் சுகவீனமுற்று இறைபதம் அடைந்த கொழும்பு உவாட்பிளேசிலுள்ள சுகவாசஸ்தலத்தில் இருந்து இவரது பூதவுடல் கொழும்பு புகையிரதநிலையத்திற்கு ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டது. இலட்சோப இலட்சம் மக்கள், பெரியார்கள், அரசினர் இறுதி அஞ்சலி செலுத்தினர். பின்பு கோட்டையில் இருந்து புகையிரதம் மூலம் யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வரப்பட்டு ஏற்கனவே

அமைக்கப்பட்டிருந்த கட்டடத்தில் சமாதி யாக இருத்தி வேண்டிய கிரியைகள் உரிய முறைப்படி செய்து மேலே இலிங்க பிரதிஷ்டை வைக்கப் பெற்று அபிடேக ஆராதனை வழிபாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இச்சமாதியைக் கோயிலாகக் கட்டி யவர் அவரது மனைவி லேடி இராமநாதன் அவர்களே. முழுவதும் கருங்கற்பொழி வினால் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கூரை விமானம், தூண்கள், நிலம், படிகள், நந்தி பலிபீடம் யாவும் கருங்கற்களினால் அமைந்தவை. இருபது தூண்கள் ஆல யத்தை தாங்கி நிற்கின்றன. கருவறையில் இராமநாதன் அவர்களின் சமாதிமேல் லிங்கம் பிரதிட்டை அமைந்துள்ளது. தூண்களில் அழகிய சிற்ப வேலைப்பாடு கள் காணப்படுகின்றன. நாயன்மார்களின் உருவங்கள், இராமர், மகாவிஷ்ணு, முருகன், விநாயகர், சிவன், இரணியவதம் எனப் பல புராண இதிகாசக் கதைகள் கூறுமளவிற்குச் சிற்ப வேலைப்பாடுகள் திராவிட சிற்பமுறையில் அமைந்துள்ளன. படிக்கட்டுக்களில் யானையின் துதிக்கை போன்ற அமைப்புக்கள் காணப்படு கின்றன. அருகே வசந்தமண்டபத்தில் சிவன், பார்வதி, விநாயகர், முருகன் முதலிய விக்கிரகங்கள் எழுந்தருளி உள்ளன.

ஆண்டுதோறும் இராமநாதனின் குருபூசைத் தினமும் மணவாளக்கோல விழாவும் சிறப்பாக அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களினால் கொண்டாடப்பட்டு வருகின்றன. மணவாளக் கோல விழாவில் பாடுவதற்கு இராமநாதேஸ்வரர் ஊஞ்சற் பாட்டும் ஆடுவதற்கு திரு ஊஞ்சலும் உள்ளன. 2013 ஆனி உத்திரத்தில் இராம நாதேஸ்வரர் ஊர்வலமாகப் பவனிவர சகடை ஒன்றை ஆசிரியர் செல்வி. சு.கனக லிங்கம் அன்பளிப்புச் செய்துள்ளார்.

அறுபது ஆண்டுகளின் பின் நடந்த கும்பாபிடேகங்கள்

1930 ஆம் ஆண்டு கட்டப்பெற்ற இச்சமாதிக் கோயில் நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்களினால் தூண்கள் உடைந்தும், மேற்கூரை பழுதடைந்தும் காணப் பட்டது. திருத்த வேலைகளுக்காக லிங்கம் பாலஸ்தானம் செய்யப்பட்ட நிலையில் மீதி வேலைகள் செய்து முடிபடாமல் சில காலம் காணப்பட்டது. இந்நிலையில் 1990 ஆம் ஆண்டு அதிபராக நியமிக்கப்பட்ட திருமதி. மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம் அவர்களின் விடாமுயற்சியினால் துர்க்கா துரந்திரியுதவியோடு பழுதடைந்த தூண் சரிபார்த்தும் திருத்த வேலைகள், செய்யப் பட்டும் 1992 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 14ம் திகதி புனருத்தாரண மகாகும்பாபிடேகம் செய்யப் பெற்றது. இது அறுபது ஆண்டு களின் பின் நடந்த முதலாவது கும்பா பிடேகமாகும். தொடர்ந்து 2003ம் ஆண்டில் கும்பாபிடேகமொன்றும் நடை பெற்றது. மீண்டும் ஆலயத்தில் மேற்கூரை வெடிப்புக்கள் காணப்பட்டது. இதன் திருத்த வேலைகளை சேர் பொன் இராமநாதன் அவர்களின் வழித்தோன்றல் D.M சுவாமிநாதன் (பா.உ) அவர்கள் இந்தியச் சிற்பிகளை வரவழைத்துச் சிறந்த முறையில் திருத்த வேலைகளை முடித்து, பிராயச்சித்த அபிடேக வேலைகளை தானே நிறைவேற்றி ஆலயத் திருப்பணி வேலைகட்கும் பூசைகள் ஒழுங்காக ந[illegible] பெறுவதற்கும் தொண்டர்களையும் அ[illegible]

தணர்களையும் நியமித்துத் தந்துள்ளார். ஆலயப் பூசைகள் செவ்வனே நடைபெறு கின்றது. சமாதி நினைவாலயம் காலமெல் லாம் நிலைத்து நின்று சேர்.பொன் இராம நாதன் அவர்களின் புகழினை உலகிற்கு எடுத்துக் கூறும் நினைவாலயமாகத் திகழும்.

பரமேஸ்வராக் கல்லூரி நிறுவல்

இராமநாதன் சைவப் பண்பாட்டுச் சூழலில் மருதனார்மடத்தில் கட்டிய இராமநாதன் கல்லூரி சைவப் பண்பாட்டு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது. ஆத்மீக விருத்திக்கும் கல்வி விருத்திக்கும் பெரும் பணி ஆற்றியது. இதனைக் கண்ட மக்கள் நம்பிக்கை அதிகரித்தது. பெண் பிள்ளை களின் கல்விக்கு ஆற்றிய பணிபோல் ஆண் பிள்ளைகளின் கல்வியும் உயரப் பணி புரிவார் என்ற கருத்தும் நம்பிக்கையும் மக்கள் மனதில் எழுந்தது. 1920 ஆம் ஆண்டு கீரிமலையில் கூடிய இந்து இளைஞர் மகாநாட்டில் சைவப் பெற்றோர் சார்பாக விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட சேர் பொன் இராமநாதன் அவர்கள் ஆர்வத்தோடு செயற்பட்டார். அக்காலச் சூழ்நிலையில் யாழ்ப்பாணத்தில் இருந்த பாடசாலைகள் உலகியல் ஈடுபாடு உள்ளதாக இருந்ததே ஒழிய தேசிய பண்பாட்டின் அடிப்படையில் உயர்கல்வி பெற வாய்ப்பு இல்லாதிருந்தது. எனவே தேசிய பண்பாட்டின் அடிப்படையில் மெய்யறிவு தரவல்ல உயர்கல்வியினைப் பெற்றோர் நாடி நின்றனர். இதன் பேறாக நிறுவப்பட்டதே பரமேஸ்வராக் கல்லூரி யாகும்.

தேசிய சமயப் பண்பாட்டுக் கல்வி யானது ஆத்மீக வாழ்வுக்கு வழி செய்யும் என்ற நோக்கில் பெண்களுக்காக அமைத்த இராமநாதன் கல்லூரி விழுமியங்களை ஆண்களுக்கும் வழங்க வேண்டிய அவசி யத்தை இராமநாதன் உணர்ந்து செயற் பட்டார். கல்லூரியை அமைப்பதற்கு நிலந் தேடிய பொழுது ஞானப்பிரகாச முனிவர் வழிவந்த சுப்பிரமணியம் என்பரின் உதவி யினால் 1920 ஆம் ஆண்டு திருநெல் வேலியில் 25 ஏக்கர் நிலப்பரப்பு வாங்கப் பட்டது. (இந்த நிலப்பரப்பில் 5 கிணறு களும், திருவாத்தி மரங்களும் ஒரு ஞானி யின் சமாதியும் இருந்ததாகக் கூறுப்படு கின்றது) இந்தப் பாரிய நிலப்பரப்பில் அன்று இலங்கையில் எங்குமே காணப் படாத பாரிய அமைப்பாக கல்லூரி உரு வாக்கப்பட்டது. கல்லூரியின் நோக்கம் ஆத்மீக அறிவுத்துறையில் உத்தமமான மனிதரை உருவாக்க வேண்டுமென்ப தாகும். இதற்குக் குருகுல வாசமே நல்லது. தாவர உணவுண்டு சாத்வீகவாழ்வு வாழும் பயிற்சியைப் பெற ஆசிரியருடன் உடனு றைந்து மாணவர்கள் கற்றலே மேலானது என்று எண்ணிய இராமநாதன் விடுதிச் சாலையையும் நிறுவினார்.

22.08.1921 ஆம் ஆண்டு நிறுவப் பட்டது. கல்லூரி அழகானதும், உறுதி யானதும், போதியளவு நீள அகலமுடை யதும் மேல்மாடிப் படிகள் தேக்கம் பலகை யினால் ஆனவையாக இருந்தன. அகன்ற விசாலமான வகுப்பறைகள், விசாலமான மண்டபம், மாணவர் விடுதி பரந்த விளை யாட்டுத்திடல், சிவாலயம், நூல்நிலையம் யாவும் மாணவருக்கு தேசிய பண்பாட்டுக் கல்வி விழுமியங்கள் வழங்கும் வகையில் அமைந்து காணப்பட்டன.

விடுதிச்சாலை

நூறு மாணவர்கள் தங்கி இருப்பதற்கு விடுதியும் இரவில் குளிர்மையாக உறை வதற்கு கிடுகினால் வேய்ந்த உறுதியான வீடுகள் சாணியினால் மெழுகப் பெற்று அமைத்துக் கொடுக்கப்பட்டது. விடுதி மேற்பார்வையாளராகச் சைவப் பெரியார் சிவபாத சுந்தரனாரை நியமித்தார். இவர் தலைமை ஆசிரியராகவும் பணிபுரிந்தார். கல்லூரியின் முதல் அதிபராக இருந்தவர். சேர் அருணாச்சலம் அவர்களின் மைந்தன் மகாதேவா அவர்களாவர். இக்கல்லூரியில் தலைசிறந்த ஆங்கிலேயர், இந்தியர், இலங்கையர், அறிஞர்கள் ஆசிரியர்களாகக் கடமையாற்றினர்.

மாணாக்கர் ஆசாரசீலராய்த் தூய உடைஉடுத்து, திருநீறு பூசிச் சந்தணப் பொட்டிட்டு வருதல் வேண்டும். காலை மாலை வேளைகளில் மாணவர்கள் வழி பாட்டிற்கென அமைந்த மண்டபத்தில் பரமேஸ்வரனைத் தினமும் வழிபட வேண்டுமென்பதும் அறிவுறுத்தலாக இருந்தது. பிரார்த்தனைக்கென ஒழுங்கு செய்யப்பட்ட தேவார திருவாசகங்கள் பண்ணோடிசைத்து வணங்குதல், நவ ராத்திரி, சிவராத்திரி விழாக்கள் நாயன்மார் குருபூசைத்தினங்கள் வருடத்தில் ஆறு அபிடேகங்களும் சிறப்பாகக் கொண் டாடப்பட்டன.

பல்வேறு இனமதத்தைச் சேர்ந் தவருக்கும் கற்றிருக்க வாய்ப்பு இருந்தது. பர்மா, ஐரோப்பிய நாடுகளில் இருந்தும் மாணவர்கள் கற்றிருந்தனர். சிங்கள மாணவர்களும் கற்றார்கள். எங்குமில்லாத அளவுக்குக் கல்லூரி ஆய்வுகூடமும், நூல கமும் இருந்தன. நூல்கள் பல்கலைக்கழகத் திற்குப் போதுமான அளவு இருந்தன. அன்பளிப்புச் செய்தவை, காலத்திற்குக் காலம் தேடியவை, தமிழ், ஆங்கிலம், வடமொழியில் ஏராளமான நூல்களும், பிரித்தானிய கலைக்களஞ்சியங்களும், புதிய நூல்களும் றாக்கைகளில் ஒழுங்காக அடுக்கப்பட்டிருந்தன. ஆய்வுகூடமும் முதற்தரமானதாக அமைந்திருந்தன. ஆய் வுக்கு வேண்டிய உலோகவகைகள் கருவி கள் யாவும் அணியணியாக இருந்தன. எல்லா வசதிகளும் இருந்ததினாலே இரசாயனவகுப்பு நடைபெற்றது.

சேர். பொன் இராமநாதன் அவர் களால் எழுதப்பெற்ற "பரமேஸ்வராக் கல்லூரி மாணவரின் இலட்சியங்கள்" என்ற நூல் மாணவர், பெற்றோர், மக்கள் அனைவரும் கல்லூரி வழங்கும் கல்வியின் தன்மையை உணரும் வகையில் எழுதி யுள்ளார். கல்லூரியானது இந்திய ஞானி களின் ஞானத்தோடு தமிழ் வடமொழி இலக்கியச் செல்வங்களும் இணைந்து, பிரித்தானியரின் மிகச்சிறந்த கல்விப்பாங் கினைத் தமிழ்ச் சிறுவர் பெறக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தும் வகையிலே கல்லூரி தாபிக்கப்பட்டது. இக்கல்வியில் இம்மையிலும் மறுமையிலும் இன்பம் பெறலாம் என்பதும் நல்ல மாணவர்கள் நாடெங்கிலும் உருவாகும் வாய்ப்பும் சுட்டிக்காட்டப்படுதலில் சேர் பொன் இராமநாதன் அவர்கள் அதி உன்னதமான கல்வி இலக்குகளையும் கொண்டிருந்தார் என்பது புலனாகும். கல்வியின் மூலம் சமுதாயத்தையும் நாட்டையும் உயர்த்த லாம் என்பது இராமநாதனின் இலக்காக இருந்தது. ஆசிரியப் பணி மூலம் ஆத்மீக விழுமியங்களை மாணவர் மத்தியில விருத்தி செய்தமை கல்லூரி வரலாற்றில்

சிறப்பம்சமாகும். ஆங்கிலேயரை ஆசிரியராக நியமித்ததினால் வரப்பட்ட மாணவர் தொகை நாளுக்கு நாள் கூடவே இராமநாதன் அவர்களின் இலட்சியம் நிறைவேற்றக்கூடியதாக அமைந்தது.

பரமேஸ்வராக் கல்லூரியில் ஆரம்பக் கல்வியில் இருந்து பல்கலைக்கழகக் கல்வி வரை கல்வி வழங்கப்பட்டது. தேசிய பண்பாட்டு மறுமலர்ச்சி, ஆன்மீக விருத்தி முன்னேறிக் காணப்பட்டது. ஆங்கிலக் கல்வியில் கல்லூரி முன்னேற்றமடைந்தது போல் ஆத்மீகத்திலும் மேலோங்கிக் காணப்பட்டது. 1921 ம் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து ஆரம்ப இடைநிலை வகுப்புக்களும், 1922 ம் ஆண்டு இலண்டன் பல்கலைக்கழக விஞ்ஞான இடைநிலைப் பரீட்சை வகுப்புகளும் நடைபெற்றன. 1924 ல் கல்லூரி இலண்டன் பல்கலைக் கழகப் பட்டப் பரீட்சைக்கு மாணவரைத் தயார் செய்யும் கல்லூரியாக அப்பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப் பட்டது. ஆரம்பக் கல்வியில் இருந்து பல்கலைக்கழகக் கல்வி வரை பரமேஸ்வராக் கல்லூரி உயர்ந்து நிற்கின்றது. பத்திரிகை வாயிலாக மக்கள் சேர் பொன் இராமநாதனுக்குப் பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்த வண்ணமிருந்தனர். சேர் பொன் இராமநாதன் அவர்கள் கல்லூரியை வளம்படுத்த வளங்களையும் விட்டுச் சென்றுள்ளார். 1930ல் நிறுவுனரின் மறைவுக்குப் பின் அவரது பாரியாரும் மருகர் சு. நடேசபிள்ளையும் கல்வி நிர்வாகப் பொறுப்பை ஏற்று நடத்தினர். முப்பது வருடங்களாகச் ஸ்ரீமான் சு. நடேசபிள்ளை அவர்கள் கல்லூரியின் அதிபராக இருந்து நல்ல முறையில் செயல்பட்டார்.

பாடசாலைகளை அரசு பொறுப் பேற்ற சில காலங்களில் பரமேஸ்வராக் கல்லூரி 6. 10. 1974ல் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகமாக இயங்கியது. இலங்கையின் வட பகுதியில் பல்கலைக் கழகமொன்ற உருவாக்க வேண்டுமென்ற இராமநாதனின் கனவு நனவாகியது.

சேர் பொன் இராமநாதன் தற்துணிவும் அஞ்சா நெஞ்சமும் கொண்ட செயல் வீரர். அச்செயலுக்கு எடுத்துக் காட்டுக்களாக விளங்குபவை இராமநாதன் கல்லூரி, அதனோடிணைந்த ஆலயங்கள், பரமேஸ்வராக் கல்லூரி, கல்லூரிகளோடிணைந்த ஆலயங்கள் பொன்னம்பல வாணேச்சரம் என்பன அவரது பணியை நிலை நிறுத்தும் நினைவாலயங்களாக மிளிரும்.

பரமேஸ்வரன் ஆலயம்

யாழ் பல்கலைக்கழகத்தின் இருதயமாக இருப்பது பரமேஸ்வரன் ஆலயம். சேர். பொன் இராமநாதன் அவர்களின் செயற்கரிய செயல்களில் ஒன்று பரமேஸ்வராக் கல்லூரியின் அங்கமாக இது விளங்குகின்றது. 1921 ம்ஆண்டு பரமேஸ்வராக் கல்லூரி அமைத்த காலத்தில் இருந்து 1928 ம் ஆண்டு வரை கல்லூரியின் மேல்மாடியில் வழிபாடுகள் நடைபெற்று வந்தது பரமேஸ்வரனின் பெயரால் கல்லூரியை அமைத்த இராமநாதன் அவர்கள் பெருமானுக்குக் கற்கோயில் ஒன்றை எழுப்ப வேண்டும் என்று நினைத்திருந்தார். அவரது எண்ணம் கைகூடியது 1926 ம் ஆண்டு ஆலயத்திற்கு அத்திபாரம் அமைக்கத் திருவருள் கூட்டியது. உரிய சுப முகூர்த்த வேளையில் சங்கு, சேமக்கலம், மங்கல முரசு ஒலிப்ப வேதியர் வேதமோத

திருமுறைகள் கற்பண்ணோடிசைப்ப அதிபர் மகாதேவா, சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் தம்பு தட்ஷணாமூர்த்தி முதலானோர் முன்னிலையில் சேர் பொன் இராமநாதன் பரமேஸ்வரன் நாமத்தை உச்சரித்தபடி அத்திபார திரவியங்களை இட்டார். அன்று தொடக்கம் கட்டட வேலைகள் தொடர்ந்தன பாரிய கருங்கற் கள் வியாங்கொடையில் இருந்து புகை யிரதம் மூலம் பரமேஸ்வரா அயலில் வந்து குவிந்தன. அவற்றை மாடுகள் பூட்டிய இரும்பு வண்டிகள் ஆலயத்தில் சேர்ந்தன. சில்லுகள் சில சமயம் புதைத்த போது கல்லூரி மாணவர்களும் சேர்ந்து திருப் பணிக்கு உதவினர். ஆலயம் உருவாகியது வடக்குத் தெற்காக நீளமும், அகலமும் கொண்ட அழகான மண்டபம், 12 பாரிய கற்றூண்கள் தாங்கி நின்றன. 1928 ம் ஆண்டு கும்பாபிடேகமும் நிறைவுற்றது.

கும்பாபிடேகத்திற்குக் குருக்கள் போட்ட பட்டியலைக் குறைவாகச் செய்ய லாமே என்று கேட்ட வாமதேவனைப் பார்த்து மகனே கும்பாபிடேக வைபவத் தில் மந்திரலோபம், கரியாலோபம், திரவியலோபம், சிறிதளவு இருத்தலாகாது. சிவபெருமான் எமக்குத் தந்த செல்வத்தில் உலோபத்தன்மை காட்டலாகாது. மகனே மனங்கோணாமல் தெய்வகாரியத்தைச் செய்வாய் என்றும், சேர, சேழ, பாண்டிய, பல்லவ, விஜயநகர வேந்தர் வழியில் சைவப் பண்பாடு நிலவச்செய்தல் வேண்டும் மென் றும் கூறிய போது மகன் பூரணசம்மதத் துடன் ஏற்றுச் சென்று செயல்பட்டார்.

ஒரு முறை தனது நண்பன் தட்ஷணா மூர்த்தியை அழைத்து பரமேஸ்வரன் எழுந்தருளப் போகும் இப்புதிய ஆலயக் கர்ப்பகிருகம் வெப்பமதிகமுள்ளதாயிருக் கும். சுவர்களின் சுண்ணாம்புச் சூட்டைத் தணிப்பதற்கு சந்தணக் கட்டைகளை ஊற வைத்து அரைத்துச் சந்தனக் குழம்பால் அப்புதல் வேண்டுமென்று அறிவுறுத் தினார். இவை இராமநாதன் அவர்களின் பக்தியை எடுத்துக் காட்டுவன. இவ்வாறாக 1928 இல் கும்பாபிடேகம் நடைபெற்ற போது மண்டபத்தினுள்ளும் புறமும் அலங்கார மண்டபங்கள் போட்டு யாக குண்டங்கள் அமைத்து வேத விற்பன்னர் கள் பலர் கூடி சாமகானம் பாடி கிரியைகள் செய்தனர். திருமுறைகள் ஓதப்பெற்றன. கும்பாபிடேகம் முடிந்து மண்டலாபி ஷேகப் பூர்த்தியில் மகேஸ்வர பூசையும் நடைபெற்றது.

ஆலய வளர்ச்சிக்கேற்ப பல்கலைக் கழகமும் வளர்ச்சியுற்றது. மீண்டும் 1991 இல் கும்பாபிடேகம் ஒன்று நடைபெற்றது. இக் கும்பாபிடேகத்தையும் ஆலயத்திருப் பணி வேலைகளுக்குப், பல்கலைக்கழக இந்துமன்றம், ஆலய இயக்குனர் சபை, துணைவேந்தர், சைவப் பெரியார்கள், பேராசிரியர்கள் அனைவரும் உதவினர். மன்றப் பொருளாளர் பேராசிரியர் சிற்றம் பலம் அவர்களின் அயராமுயற்சியினால் ஆலயம் கோபுரம், பரிவாரக் கோயில்கள், வைரவர் கோயில், சண்டேசுவரர் கோயில், வசந்த மண்டபம் ஆகியன கட்டப்பெற்று 1991.06.02 இல் கும்பாபிடேகம் நடை பெற்றது. ஆலயத்தில் ஒழுங்கான பூசை வழிபாடுகள், சிவராத்திரி, நவராத்திரி, குருபூசைத் தினவிழாக்கள் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. இவற்றை இந்து மன்றம், இயக்குனர் சபையும் கவனித்து வருகிறது.

பொன்னம்பலவாணேச்சரம்

சிவபூமி என்று சொல்லப்படும் ஈழ நாட்டில் பல சிவாலயங்கள் உள்ளன. மிகப் பழமை வாய்ந்தமையும் சரித்திரப் புகழ் வாய்ந்தவையும் திருமுறையில் இடம் பெற்றவையும் பெயர் கூறுமளவில் நினை வாலயங்களாக விளங்குகின்றன. கோணேச் சரத்தை எடுத்துக் கொண்டால், ஞான சம்பந்தரையும், இராவணணையும் நினைவு கூறுகின்றோம். இவ்வாறே பொன்னம்பல வாணேச்சரத்தைக் கண்டவர்களுக்கும் கேட்டவர்களுக்கும் சேர். பொன். இராம நாதனின் நினைவாலயம் என்பதை மறுக்க மாட்டார்கள். இது சேர் பொன் இராம நாதன் அவர்களின் புகழை கொழும்பு மாநகரில் பறைசாற்றி நிற்கும் நினைவாலய மாகும்.

தனிக் கருங்கற் பொழிவினால் ஆக்கப் பட்டதும் வானுற ஓங்கிய கோபுரங்களை உடையதுமாகும். திராவிட கட்டிட கலை யின் அற்புத சிற்பக் கலைப்படைப்புக் களைக் கொண்டு விளங்கும் பெருமையை உடையது. எந்த ஒரு அரச பொருளாதார உதவியும் இன்றித் தன் செலவிலேயே இருபது லட்சம் ரூபாவிற்கும் மேலான பணத்தைச் செலவழித்துத் தனி ஒரு மனித னாக நின்று கட்டிமுடித்த பெருமைக் குரியவர் சேர். பொன் இராமநாதன் அவர்கள். சேர சோழ பாண்டிய விஜயநகர மன்னர்கள் ஒரு ஆலயத்தைக் கட்டத் தொடங்கினால் அது அவர்களின் அடுத்த சந்ததியினரே கட்டி முடித்த வரலாறுகள் தான் உள்ளன. ஆனால் தற்துணிவும், ஆத்ம பலமும் ஆளுமையும், கொண்ட இராம நாதன் ஒருவரால் இவ்வாலயத்தைக் கட்ட முடிந்தது என்றால் இது பேசி முடியாத பெருமைக்குரிய நினைவாலயமாகும். கட்டுமானப் பணிகளுக்கு சிற்பிகளும் மனித வளங்களும் இந்தியாவில் இருந்தே வரவழைக்கப்பட்டனர். கருங்கற்கள் வியாங்கொடையில் இருந்து எடுக்கப் பட்டது.

ஆலயத்தோற்றம்

கொழும்பு மாநகரில் ஒரு சிவாலயம் அமைக்க வேண்டுமென்ற எண்ணம் இராம நாதனின் தந்தையார் பொன்னம்பல முதலி யாருக்கு இருந்து வந்தது. இறைவன் திரு வருளால் அவர் ஒரு மாதுளம் பழத்தைக் கனவிலே கண்டார். அதனைப்பிரித்துப் பார்க்கும் பொழுது உள்ளே சிவலிங்கத் தைக் கண்டார். இறைவனருள் இதற்குரிய காணியை கப்டன் ஜோன் எவாவுல் ஸ்ரோன் என்பவரிடமிருந்து தனது சொந்தப் பணத்தில் வாங்கினார். 1856ம் ஆண்டு ஆலயத்தைக் கட்டி முடித்துக் குடமுழுக்கும் செய்து வைத்தார். இவ் வாலயத்தைப் பாராமரித்த கம்பனையில் 500 ஏக்கர் நிலத்தை வாங்கி விட்டார். அதன் வருமானத்தைக் கொண்டு ஆலயம் பராமரிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

நிர்வாகக் கடமை

இவ்வாலய நிர்வாகக் கடமைகளே அவரது பரம்பரையில் தோன்றும் முதல் ஆண் வாரிசுக்கென வழங்கப்பட வேண்டும் மென்று வரையறையும் செய்யப்பட்டது. பொன்னம்பலம் முதலி யார் காலஞ் செல்ல அவரது மூத்த புதல் வனை குமாரசுவாமியிடம் நிர்வாகப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. 1905 இல் குமாரசுவாமியின் மறைவிற்குப் பின் அவரது சகோதரன் சேர். பொன். இராம நாதன் அவர்கள் கோயில் நிர்வாகப் பணிக்கு வாரிசானார். ஆலயப்பணியை

நல்ல முறையில் சேர். பொன் இராமநாதன் அவர்கள் முன்னெடுத்தார். அயரா முயற்சியும், தன்னம்பிக்கையும், அர்ப்பணிப்பும் செயல் வீரமுங்கொண்ட இராமநாதன் அவர்கள் பொன்னம்பலவானேச்சரத்தைக் கற்கோயிலாக்கிய பெருமைக்குரியவராவார். செங்கற்களாலும், சூழைச் சுண்ணாம்புக் கலவையாலுங் கட்டப்பட்ட ஆலயம் இன்று தனிக் கருங்கற் பொழிவினால் ஆக்கப்பட்ட திருத்தலமாக விளங்க வைத்தவர் சேர் பொன் இராமநாதன் அவர்களே. சைவத் தமிழ் மக்கள் போற்றும் காலத்தால் அழியாத பெரும் நினைவாலயமாகும். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் மறைவிற்குப் பின் இராமநாதன் இராசேந்திரன், இராமநாகன் வாமதேவன், சோம சுந்தரம் மகாதேவா, பத்மநாதன் ஆகியோர் நிர்வாகப் பணிக்கு வாரிசுகளாயினர். பத்மநாகனின் மறைவுக்குப் பின் 1974ம் ஆண்டு தொடக்கம் பரிபாலனசபை உறுப்பினராகவும், ஆலய அறங்காவலராகவும் பொறுப்பேற்று ஆக்க பூர்வமான பணிகளைத் இராமநாதன் வழித்தோன்றல் திரு.டி எம் சுவாமிநாதன் (பாராளுமன்ற உறுப்பினர்) அவர்கள் செவ்வனே செய்து வருகின்றார்.

கும்பாபிடேகங்களும் திருப்பணிகளும்

1907ம் ஆண்டு ஆரம்பித்த புனர் நிர்மாணப் பணியானது 1912 ம் ஆண்டளவில் பூர்த்தியானது. 1912ம் ஆண்டு நவம்பர் 21ம் திகதி கும்பாபிடேகம் நடைபெற்றது. ஆலயப் பணிகளில் ஈடுபடும் தொண்டர்கள், அச்சகர்கள் இருப்பதற்கு இருப்பிட வசதியும் செய்து கொடுக்கப்பட்டது.

மேலும் திருப்பணி வேலைகள் முன்னெடுக்கப்பட்டன. 1967 ல் கிழக்கு வாசல் இராச கோபுரமும் மேற்கு வாசல் கோபுரங்களும் அமைக்கப்பட்டன. 1974 சிவகாம சௌந்தரி அம்பாள் விக்கிரகம் பிரதிட்டை செய்யப்பட்டது. 1986ல் நவக்கிரக ஆலயம், சண்டேஸ்வரர் ஆலயமும், கட்டப்பட்டதுடன் சந்தான கோபாலர் திருவுருவம் பிரதிட்டை செய்யப்பட்டுக் கும்பாபிடேகங்கள் நடைபெற்றதுடன் 1999ல் புனருத்தாரான கும்பாபிடேகமும் நடைபெற்றது. கோயில் வெளிவீதியில் அமைந்த முத்துமாரி அம்மனுக்கும் ஆஞ்சனேயருக்கும் தனிக் கோயில்கள் உள்ளன. சந்திரபகவானும் சூரிய பகவானும் பிரதிட்டை செய்யப்பட்டன. தினமும் நடைபெற்று வரும் கோமாதா பூசைக்குரிய பசுமாடுகளும், அபிசேகத்திற்கு பால்தரும் பசுக்கள் வசிப்பதற்குரிய கோமாதா இல்லமும் அமைக்கப்பட்டுள்ளது கோயிலின் சிறப்பம்சமாகும். இவ்வாலயத்தின் ஈசான மூலையில் ஸ்ரீசொர்ண புஸ்கரணி தீர்த்தத் தடாகம் அமைந்துள்ளது. தலவிருட்சம் மகிழமரமாகும்.

இவ்வாலயத்தின் கர்ப்பக்கிரகத்தில் பொன்னம்பலவாணேஸ்வரரும், அர்த்த மண்டபவாயில் இருமருங்கும் விநாயகரும், முருகனும், மகா மண்டபத்தில் நடராஜமூர்த்தியும், சொர்ணாம்பிகையும் துவாரபாலகர்கள், அக்கினி குண்டம், ஸ்தம்பத்தை அடுத்த நந்தி பலிபீடம் என்பவற்றைக்காணலாம். கோஷ்ட தெய்வங்களாக, நர்த்தனவிநாயகர், தட்சணாமூர்த்தி லிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கை, சண்டேஸ்வரப் பெருமானையும் காணலாம். மேலும் சோமஸ்கந்த மூர்த்தி ஆலயம், பஞ்சலிங்கத்தலம், விஷ்ணு ஆலயம் சண்

முகப்பெருமான் ஆலயம் அமைந்துள் ளமை சிறப்பம்சங்களாகும்.

நித்திய அக்கினி நித்திய உற்சவம்

நித்திய அக்கினி குண்டத்தின் சிவாச் சாரியாரால் நித்தியாக்கினி வளர்க்கப்படு கின்றது. இதனைத் தொடர்ந்து சுவாமியும் அம்பாளும் பல்லக்கில் உள்வீதி வலம் வருவர். அடியவர்கள் சங்கு சேமக்கலம் ஒலிக்க "ஓம் நமச்சிவாய" என்ற மந்திரம் உச்சரித்துச் செல்வர். திருமுறைப் பாரா யணமும் நடைபெறும் மாலை வேளை களிலும் இக்கோமம் நடைபெறுதல் வழக்கம். ஆறுகாலப் பூசைகளும் ஆகம விதிப்படி நடைபெறுகின்றன.

திருத்தலத்தின் சிற்பக்கலை

இலங்கையில் இந்துமத வரலாற்றில் கருங்கல்லால் மட்டும் கட்டப்பட்ட ஆலய மாக விளங்குவது பொன்னம்பலவாணேச் சரமாகும். இதன் கோபுரம், சிற்பங்கள் அனைத்தும் தமிழகத்தின் பண்டைய திராவிடர் கலையை பிரதிபலிப்பதாகவே அமைந்துள்ள கலைக் களஞ்சியங்களாக அமைந்துள்ளன. வானளாவிய கோபுரங் கள், உட்புறத்தில் அமைந்த கோஷ்டங்கள் தனித்தனி ஆலயங்கள் உட்புறக் கூரை முகப்பைத் தாங்கி நிற்கும் தூண்கள், சுற்றி யமைந்த மதில்கள் யாவும் திராவிட சிற்பக் கலையினைப் பிரதிபலிக்கின்றதோடு, சிற்பியின் அற்புதக் கற்பனா சக்தியும் படைப்பு நுணுக்கத்தையும் கண்டு களிக் கலாம்.

தூண்களில் சிவபிரான் அம்பாளுடன் ரிஷபாரூடராய் எழுந்தருளி இருக்கும் காட்சி, அர்த்த நாரீஸ்வரர் வடிவம், சந்தான கோபால கிருஷ்ணன் சிற்பம் யாவும் உள்ளங்கவர் காட்சிகளாகும். ஒவ்வொரு கருங்கற் தூண்களிலும் சிங்கத்தின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. சிங்கம் வாயைப் பிளந்த வண்ண முகம் சாந்தமாகவும் அதே சமயம் சிங்கத்தின் இயல்பான தோற்றம் கம்பீரம், எடுப்பான தோற்றத்தைக் காண லாம். கருங்கற் பொலிவினால் ஆக்கப் பட்ட சங்கிலியை வாயில் கௌவிய வண்ணம் சிங்கத்தின் தத்ரூபமான உருவத் தினை சிற்பி வடிவமைத்துள்ளமை காணக் கூடியதாக உள்ளது. மேலும் தூண்களில் அழகிய பறவைகள், விலங்குகளின் வடிவங் களும் பொழியப்பட்டுள்ளன. சிவலிங்கத் தின் மீது பாலைச் சொரியும் பக்திப் பரவச மான பசுவின் தோற்றம், பிருங்கி முனிவரின் தோற்றம், சிவனின் பல்வேறு தோற்றங்கள், பிரதோஷமூர்த்தி, கண்ணனிடம் தப்பிய கண்ணப்பரின் தோற்றம், திருக்கல்யாண சிற்பம் முழுதும் கருங்கற் பொழிவினால் ஆக்கப்பட்ட அற்புதக் கலைப்படைப்புக் களைக் காணலாம். மேலும் இவ்வாலயத் தில் சேர். பொன் இராமநாதனையும் அவரது மனைவியாரின் தோற்றத்தையும் தனித்தனிச் சிற்பங்களாக பொழியப்பட் டுள்ள காட்சி ஒவ்வொருவருவருடைய உள்ளத்திலும் நற்பதிவை ஏற்படுத்தும் திராவிட சிற்பக்கலைச் செழுமையை இவ் வாலயம் கொண்டு மிளிர்கின்றது. செயற் கரிய சாதனை செய்து முடித்த சேர். பொன் இராமநாதன் அவர்களின் நினைவாலய மாக அமைந்துள்ள பொன்னம்பல வாணேச்சரம் இலங்கையின் பிரசித்தி பெற்ற கருங்கல்லாலான தனிப்பெரும் நினைவாலயமாகும். சைவத்தமிழ் மக்கள் என்றும் நன்றியுணர்வோடு பேணிப் பாது காக்க வேண்டிய கடப்பாடுடையவர்.

வலிகாமம் தெற்கு பிரதேசத்தினுள் ஆலயங்களும், ஆத்மீகச் செழுமையும்

"தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்" என்பது திருமந்திரம். ஒருவன் சீவன் தான் சிவலிங்கம் என்பதை உணரும் பொழுதே அவன் ஆத்மீகம் அடைகின்றான். உயிருக்கு உடல் ஆதாரமாக இருப்பது போல உயிருக்கு ஆதாரமாக இருப்பவன் இறைவன். எம்மிடையே மறைந்திருக்கும் இறை சக்தியை கண்டுணர்ந்து அதனைத் தனக்கும் பிறருக்கும் பயன்படுத்தி வாழ்பவன் ஆத்மஞானி. ஆன்மா அன்புமயமானது. அன்பினால் உலகம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அன்பையே நுதலியது உலகம். இதனை திருமூலர் "அன்பே சிவம்" என்றார். தெய்வப்புலவரும் அன்பின் வழியது உயிர் நிலை என்றார்.

ஆன்மீகத்தின் நிலைக்களமாக விளங்குபவை ஆலயங்கள். ஆலயங்களை வைத்துக் கொண்டே அப்பிரதேசத்தில் வாழும் மக்களுடைய இறை உணர்வு, கல்வி, கலை, கலாசாரம் யாவற்றையும் அறிந்து கொள்ளலாம். இவற்றிற்கு மேலாக பக்தர்கள், சித்தர்கள், ஞானிகள், மகான்களைக் கொண்டும் ஒரு நாட்டின் ஆன்மீகத்தைக் கண்டு கொள்ளலாம். தவமுனிவர்களும், மகரிஷிகளும் வாழ்ந்த நாடு பாரத நாடு. இவர்களால் நீதியும், தர்மமும், ஆத்மீகமும் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது. ஆத்மீக வழி நின்றே கல்வி, கலை, இலக்கியங்கள் தோற்றம் பெற்றன. இதனால் உலக அரங்கில் பாரத பூமிக்கு தனிமதிப்பு உண்டு. இந்தியாவில் தோன்றியது போல் ஈழத்திலும் மகான்கள் பரம்பரை ஒன்று உருவாகியது. அதன் அருள் வீச்சுக்கு ஈழத்தில் பல இடங்கள் இலக்காயின. இவ்வாறு ஆத்மீகச் செழுமை பெற்ற பிரதேசங்களில் ஒன்று வலிகாமம் தெற்கு என்பதில் ஐயமில்லை.

வலிகாமம் தெற்கு பிரதேசம் சுன்னாகம், கந்தரோடை, சங்குவேலி, உடுவில், இணுவில், தாவடி, ஏழாலை, குப்பிளான், புன்னாலைக் கட்டுவன், ஈவினைவரை பரந்துள்ளது. இவையாவும் ஆலயங்களிலும், ஆன்மீகச் செழிப்பிலும் ஒன்றையொன்று விஞ்சியதாகவே காணப்படுகின்றன.

"மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரன் எனத்தொழுமே"

என்பது சிவஞானபோதம்.

குற்றமற்ற அன்பு நிறைந்த தவவேடமும், ஆலயங்களும், சிவநினைப்பை ஏற்படுத்துவன, இறையுணர்வைத் தூண்டுவன எனவே சிவவேடம் தாங்கிய மெய்யடியார்களையும், ஆலயங்களையும், நாம் தொழ வேண்டியவர்கள். இதனாலே தான் "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்றும், "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" எனவும் கூறப்பட்டது. இந்த வகையில் வலிதெற்கு பிரதேசத்திற்குட்பட்ட ஆன்மீகப் பண்பை ஓரளவு அளவிட முடிகின்றது.

சுன்னாகப் பகுதியில் அமைந்த ஆலயங்கள்

கொழும்புத்துறை சிவயோக சுவாமிகளும், நயினாதீவு முத்துக்குமார சுவாமிகளும் இம்மண்ணில் உலாவிச்சென்ற

பெருமையுடையது. செல்லாச்சி அம்மை யார் என்ற சித்தரும் வாழ்ந்த இடம் சுன்னாகம். சைவாசார சீலரும், சித்தாந்த வித்தகரும் ஆகிய குமாரசுவாமிப்புலவர் வாழ்ந்த இடம் இது. மகான்களின் கால் பதித்த புனிதம் சுன்னாகத்திற்கு உண்டு.

இங்குள்ள ஆலயங்களில் தாழையடி ஐயனார் கோவிலும், சந்திரசேகர விநாயகர் ஆலயமும் மூர்த்தி, தல, தீர்த்த விசேடம் பெற்றவை. மேலும் மயிலணி கந்தசுவாமி கோயில், விஸ்வநாதர் கோவில், வாரியப் புலம் மகாமாரியம்மன் கோவில், கதிர மலைச்சிவன் கோவில், சூராவத்தை சிவபூத ராயர் கோவில், வடகாளி கோவில், பழனி கோவில், புவனேஸ்வரியம்பாள் கோவில், மயிலணி வைரவர், முத்துமாரியம்மன், சர்வமங்கள ராஜேஸ்வரி கோவில், சுன்னாகம் சிவபூதராயர் கோவில் முதலியன சுன்னா கப் பகுதியில் அமைந்து அருளாட்சி செய் கின்றன. இவற்றுள் சில ஆலயங்களில் மகோற்சவங்களும், சிலவற்றில் அலங்கார உற்சவங்களும் நடைபெறுகின்றன. இத் துடன் கிறிஸ்தவ மக்களின் வழிபாட்டிற் காக சுன்னாகம் மத்தியில் புனித அந்தோனி யார் ஆலயமும், அன்னை திரேசா ஆலய மும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்க தாகும்.

கந்தரோடைப் பகுதியில் அமைந்த ஆலயங்கள்

இப்பகுதியில் வட்டாக்கி அம்மன் கோவில், வீரகத்திப் பிள்ளையார் கோவில், அருளானந்தப் பிள்ளையார் கோவில், ஆலடிப் பிள்ளையார் கோவில், கற்பக் குணை அம்மன் கோவில், வைரவர் கோவில் என்பன அமைந்து அப்பகுதி மக்களைப் பாதுகாத்து வருகின்றன.

கிறிஸ்தவ மக்களின் வழிபாட்டிற்கான தேவாலயமும், பௌத்தமத விகாரையும் இவ்வூரின் ஆத்மீகத்தை சிறப்பித்து நிற் கின்றன.

உடுவில் பகுதியில் அமைந்த ஆலயங்கள்

உடுவில் பகுதியில் இந்துக்களும், வேறு மதத்தினரும் வாழ்கின்றனர். சைவமக்கள் வழிபாட்டிற்காக, உடுவில் முருகமூர்த்தி கோவில், கேணியடி வைரவர், அம்மன் ஆலயம், மல்வம் பேச்சியம்மன் ஆலயம், உடுவில் வடக்கிலமைந்த கொல்லன் ஒல்லைப் பேச்சியம்மன் ஆலயம், சிவ ஞானப்பிள்ளையார் ஆலயம், குளத்தடிப் பிள்ளையார் ஆலயம், வெட்டுக்கட்டைப் பிள்ளையார் ஆலயத்துடன் எட்டுக்கும் மேற்பட்ட ஆலயங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் முருகமூர்த்தி ஆலயமும், வெட்டுக்கட்டைப் பிள்ளையார் ஆலய மும் பழமை வாய்ந்தவையாகும். முருக மூர்த்தி ஆலயத்தில் ஒல்லாந்தர் காலத்தி லிருந்தே புராணப்படிப்பு நடைபெற்றுவரு கின்ற சிறப்பினை உடையது. வெட்டுக் கட்டைப்பிள்ளையாரும் இந்தியாவில் நின்றும் வருகை தந்த பணிக்கர்களால் கட்டப்பட்டது என்பர். இங்கும் பேச்சி யம்மன் முதலான சிறு தெய்வ வழிபாடு களும் இருந்து வந்துள்ளன. இவ்வாலயங் கள் மக்களின் ஆன்மீக வளர்ச்சிக்கு உறு துணையாக இருந்தமையை அறியலாம். இப்பகுதியில் மேலும் பிறமத வழிபாடு இருந்தமையை கத்தோலிக்க தேவாலயங் களும், மாதா கோவில்களும், தென்னிந்திய திருச்சபையும் பிரதிபலித்து நிற்கின்றன.

தாவடி பகுதி ஆலயங்கள்

இங்கு பிரபலமான வடபத்திரகாளி யம்மன் கோவிலும், விநாயகர் ஆலயமும், முருகமூர்த்தி கோவிலும் காளி கோவிலும் உள்ளன. வடபத்திர காளி அம்மன் அற்புதச் செயல்களோடு கூடியது. இது பழமை வாய்ந்ததொரு ஆலயமாகும். தூர இடங் களிலிருந்தும் இவ் அம்மனைத் தொழுது செல்ல மக்கள் கூட்டம் வருவதுண்டு. அவ் வூர் மக்கள் மிக்க பயபக்தியுடன் அம்மனை பொங்கல் பூசை செய்து வழிபடுவர். திருக் குளிர்த்தி, மகோற்சவம், கௌரி விரதம், நவராத்திரி விரத விழாக்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. குடைச்சுவாமி கள், சிவயோக சுவாமிகள் உலாவிப் புனிதம் பெற்றது தாவடி.

இணுவையூர் ஆலயங்களும், சமாதிக் கோவில்களும், தவயோகிகளும்

இணுவிலுக்கு என்றொரு மண்வாசனை உண்டு. சைவத்திருநெறியாலும், வேத நெறியாலும் துறைபோனது. மஞ்சத் தால் பெருமை பெற்றது. ஞானிகள் வாழ்ந்து சமாதிகள் கொண்டதும், சித்தர்கள் பலர் இம்மண்ணில் உதித்துலாவித் தங்கி இம் மண்ணைப் புனிதப்படுத்தியதும் இணு விலுக்கோர் பெருமை, சித்தர்கள் பலர் சமாதி கொண்ட இடம் இணுவிலைச் சேர்ந்த காரைக்கால் பதியாகும். நாடக நடன இசை வாத்தியக் கலைஞர்களால் திசைபோனது இணுவையம்பதி. காலத்திற் குக் காலம் சித்தர்கள், ஞானிகள் தோற்றம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. எங்கு பார்ப்பினும் ஆலயங்கள், பக்தர்கள், எங்கு கேட்பினும் காண்டாமணியின் ஓங்கார நாதம், வேதபாராயணம் ஒலித்துக் கொண்டே இருக்கும். சைவசான்றோ னாகிய அம்பிகைபாகப்புலவர், சின்னத் தம்பி புலவர் தோன்றியதும் இவ்வூர். இவை யாவும் இவ்வூரின் ஆன்மிகச் சிறப்பை எடுத்துக் காட்டுவனவாகும்.

ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார் கோவில்

மிகப்புராதனமானதும் சரித்திரப் புகழ் வாய்ந்ததும் பரராஜசேகர மன்னனாலும், செகராஜசேகர மன்னனாலும் கட்டப் பட்ட ஆலயங்கள் உண்டு. தென் இணு வைப் பகுதியில் ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளை யார் கோவில் கொண்டுள்ளார். வானளா விய இராச கோபுரமும் கலையம்சங்க ளோடு சரித்திரப் பெருமை கூறும் சித்திர வேலைப்பாடுகளுடனும் காட்சிதர அய லிலே கல்யாண மண்டபமும், அன்னதான மண்டபத்தோடு கூடிய மூன்று மாடிமணி மண்டபமும் அமைந்து ஊருக்கு அழகூட்டு கின்றன. குழந்தைகள் முதல் முதியவர் வரை பக்தியுடன் பூக்கள், பூமாலைகள், கொண்டு தினமும் வந்து வழிபட்டுச் செல்வர். புராண படனத்தை அடியவர்கள் செய்து வருகின்றனர். இளைய தலைமுறையினர் ஆர்வத்தோடு ஆலய தொண்டுகளில் தின மும் ஈடுபடுவர். திருநெறிய தமிழ்மறைக் கழகம் உருவாக்கப்பட்டுள்ளது. இது அறநெறி வகுப்புக்கள், இசை வகுப்புக்கள், நடனம், வீணை வகுப்புக்களை நடாத்துவ துடன் சமய தீட்சை, பேச்சுப்போட்டி, பண்ணிசைப்போட்டிகள் வைத்து ஆன்மீக வழியில் மாணவர்களை ஈடுபடுத்தி வரு கின்றது. இவற்றுக்கெல்லாம் ஊரிலுள்ள நல்ல உள்ளம் படைத்தவர்கள் உதவுகிறார் கள். மகா வித்துவான் வீரமணி ஐயா அவர் களுக்கு இசைவாரிதி என்ற பட்டம் வழங்கி கௌரவித்தமை இவ்வாலயத்தின் இன் னொரு சிறப்பம்சமாகும்.

செகராஜசேகர ஆலயமும் புனருத்தாரணப் பணிகளை முடித்து இராச கோபுரத்துடன் இணுவில் மேற்கை அழகு செய்கின்றது. சண்முகம் சுவாமிகள், முத்துச்சுவாமிகள், வேலுப்பிள்ளை சுவாமிகள், செல்லையா சுவாமிகள், வடிவேல் சுவாமிகள் தங்கி வாழ்ந்த இடமாக இது விளங்குகின்றது. இவர்கள் வேதாந்த மடத்தைச் சேர்ந்தவர்களும் ஆவார். சண்முகம் சுவாமிகள் பத்து வருடங்கட்கு மேலாக ரமண மகரிஷியுடன் வாழ்ந்தவர். இப்புனிதர்கள் இங்கு வாழ்ந்த பெருமை இம்மண்ணுக்கு உண்டு.

இணுவில் கந்தசுவாமி கோவில்

மஞ்சத்தால் பெயர்பெற்றது இணுவில் கந்தசுவாமி கோவில். இணுவில் பெரிய சந்நியாசியாரினால் இம்மஞ்சம் உருவாக்கப்பட்டது. இது இணுவிலின் கலைக் களஞ்சியமாகும். ஆலய நிர்வாகிகள் ஆலயத்தைப் பரிபாலித்து வருகின்றனர். சுற்றிவர அந்தணர் வதிவிடங்களும், மாலை கட்டுவோரும், இசை வாத்தியக்காரரும் அமர்ந்துள்ளனர். வானளாவிய இராஜ கோபுரமும், மணிமண்டபமும், இளந் தொண்டர் சபையும் இவ்வாலயப் பெருமை கூறும். இளைய தலைமுறையினர் சபையினூடாக பண்ணிசை, வாத்திய இசை வகுப்புகள், நடன வகுப்புகள் வைத்தும் போட்டிகள் வைத்தும் ஆத்மீக பணியில் மாணவர்களை ஈடுபடுத்தியும் வருகின்றனர். முருக பக்தர்கள் புராணபடனம் கூட்டு வழிபாடாற்றி ஆத்மீக பணிபுரிவர்.

மேலும் மஞ்சத்தடி முருகன் ஆலயம் பெரிய சந்நியாசியாரின் சமாதியுடன் காணப்படுகின்றது. அதிஅற்புதமான ஆத்மீக ஒளி வீசும் இடமாக விளங்குகின்றது. அடியார்கள் தினமும் இறைவழிபாடு நடாத்துவர். அருகே அரசோலைப் பிள்ளையாரும் இருந்து அருளாட்சி செய்கின்றார். மேலும் சிவன் ஆலயம், பரமானந்தவல்லி ஆலயம், வட்டுவினி அம்மன், விநாயகர் ஆலயம், கண்ணகி அம்மன், வைரவர், மேற்கே கற்பக விநாயகர் ஆலயம், நரசிங்க வைரவர் ஆலயம், கௌரி அம்மன், நடுவிளாத்தி வைரவர், சுந்தர ஆஞ்சநேயர் ஆலயம், சாந்தியடி வைரவர் ஆலயம், சிவகாமி அம்மன் ஆலயம், காரைக்கால் சிவன் ஆலயங்களும் இணுவையம் பதியில் அமைந்துள்ளன.

இவற்றுள் சாந்தியடி வைரவப் பெருமான் ஆலயம் தீர்த்தக் கிணற்றால் பெருமைபெற்றது. பலருடைய நோய் தீர்க்கும் மருந்தாக அது விளங்குகிறது.

சிவகாமி அம்மை ஆலயம் வானளாவிய இராசகோபுரமும், அன்னதான மண்டபமும், அறநெறி பாடசாலையும், கல்யாண மண்டபமும், சைவத்திருநெறி கழகத்தையும் கொண்டு விளங்குகிறது. கழகமானது ஆத்மீகச் சொற்பொழிவுகள், அறநெறிப்போதனைகள், கூட்டு வழிபாடுகள், புராண படனங்களை நடாத்தி வருகின்றது. சிவகாமியம்மை பெரிய சந்நியாசியார் சிறுவனாக இருந்த போது தாயார் வடிவில் வந்து பொதிச்சோறும் நீரும் கொடுத்து அருள் செய்தவர். சின்னத்தம்பிபுலவர் அந்நியரால் சிறையில் அடைக்கப்பட்ட பொழுது அம்மனை வேண்டி மெய்யரும்பி பாடியதால் சிறைக்கதவின் பூட்டு உடைந்து கதவு திறக்கப்பட்டதாக அறிஞர்கள் கூறுகின்றனர். இத்தகைய அன்னை சிவகாமித் தாயாரின் அருளினால் வாக்குச் சித்தி சொல்லும் சாத்திரம்மா இவ்வூரில் இருந்தார். காரைக்கால் சிவன் ஆலயச்

சூழல் சித்தர்கள், ஞானிகளாலும் சமாதி யாலயங்களினாலும் புனித பூமியாக விளங்கி வருகின்றது. இவ்வாலயம் மிக மிகப் பழமை வாய்ந்ததொன்றாகும். இங்கு ஈழத்துச் சித்தர்கள், இணுவில் சச்சிதானந்த சுவாமிகள், நயினாதீவு முத்துச்சுவாமிகள், தியாகராஜ சுவாமிகள், அம்பலவாண சுவாமிகள், குடைச்சுவாமிகள் என்னும் பல சித்தர்கள் கூடியிருந்து தியானம் செய்த சிவபூமி, இங்கே நடராஜ முனிவர், அம்பல வாண சுவாமிகள் சமாதிகளோடு வேறு பல சமாதிகளும் உண்டு. அயலிலே மருதனார் மடத்தில் இராமநாதனுடைய சமாதியும் இருக்கின்றது. பரமானந்தவல்லி ஆலயத் துடன் வடிவேல் சுவாமிகளுடைய ஆச்சிர மும் உண்டு. இணுவில் வட்டுவினி அம்மன் ஆலய அருகாமையில் (வேதபாராயண வகுப்புக்கள்) குருகுலம் அமைந்துள்ளது. இத்தனை சிறப்புகளும் கொண்டு ஆத்மீக செழுமை மிகுந்து விளங்குவது இணுவை.

மேலும் இளந்தாரி, அண்ணமார் கோவில்களும் இருக்கின்றன. இவர்கள் மரத்திலேறி உட்கார்ந்து தெய்வமுற்றவர் கள். இவர்களிடம் மக்கள் நம்பிக்கையுடன் வழிபாடாற்றி வருகின்றனர்.

ஏழாலையூர் திருக்கோவில்களும், சமாதிகளும், தவயோகிகளும்

ஒரு ஊரின் பெருமையை அவ்வூர் ஆலயங்கள் விளக்கி நிற்கின்றன. இந்த வகையில் ஏழு ஆலயங்களின் பெயரால் அமைந்த ஊர்ப் பெருமையை தாங்கி நிற்பது ஏழாலை. சான்றோரையும் சாதுக் களையும், தோற்றுவித்த ஏழாலைக் கிராமத் தில் புங்கடி அம்பலவாணேஸ்வரர் ஆலயம், புங்கடி புவனேஸ்வரி ஆலயம், அத்தியடி விநாயகர் ஆலயம், அத்தியடி முருகன் ஆலயம், பெரிய தம்பிரான் கோவில், காளியம்மன் கோவில், வைரவர் கோவில் யாவும் ஊர்ப்பெயரை விளக்கி நிற்பன.

இவற்றைவிட ஆலங்கட்டை விநாயகர் ஆலயம், கற்கரைக் குப்பிளான் விநாயகர் ஆலயம், சொக்கர் வளவு சோதி விநாயகர் ஆலயம், பாதாள வைரவராலயம், மடத் துப்பிள்ளையார், சூராவத்தை அம்மன், கோட்டைக்காடு சாளம்பை, முருகமூர்த்தி ஆலயங்களும், குப்பிளான் நாககன்னியர் ஆலயமும், களபாவோடை வசந்தநாக பூஷணி அம்மன் ஆலயமும் இவ்வூரின் பெருமைக்கு உதாரணங்களாகும். இவற்றை விட ஏழாலை தெற்கில் அமெரிக்கன் மிஷன் ஆலயமும், கிழக்கில் சாந்த இசிதோர் தேவாலயம், சூராவத்தை சென் திரேசா தேவாலயம், லூர்த்மாதா தேவா லயங்களும் கிறிஸ்தவமத வழிபாட்டிற்காக அமைந்தவையாகும்.

சிவ வழிபாட்டுடன் கிராம தேவதை கள் வழிபாடும் இங்கு இடம்பெற்றன. அந்நியராட்சிக் காலத்தில் இவ்வழிபாடு களே எமது சமயத்தைப் பாதுகாத்தன. சமய வழிபாட்டுக்கும் இத்தேவதை வழி பாட்டுக்கும் வித்தியாசம் காணமுடியாது. மக்கள் முழுநம்பிக்கையோடு வழிபட்டு இட்டசித்திகளைப் பெற்றுள்ளனர். சைவ நாயன்மார்கள் காலத்தில் அற்புதங்கள் போல் இங்கும் நடந்துள்ளது. இறந்த யானையை உயிர்ப்பித்தமை, கண் தெரி யாத மரக்காயர்க்குப் பார்வை வரச்செய் தமை, பெண் பனையை ஆண் பனை ஆக்கியமை, நாவற்பழத்தை கொட்டை இல்லாமல் காய்க்கச்செய்தமை, வடலியை ஈச்சமரமாக்கியமை, கடலில் கவிழ்ந்த கப்பலையும், மக்களையும் கரைசேர்த்தமை முதலிய அற்புதங்கள் மக்கள் மனதில் தெய்வநம்பிக்கையை வளர்த்தது எனலாம்.

சைவத்தமிழ் அறிஞர்களும், ஞானி களும், சாதுக்களும் வாழ்ந்த கிராமம் ஏழாலை. ஆறுமுக நாவலரின் வழிநின்று வாழ்ந்தவர்கள் இக்கிராம மக்கள். சடை வரத சுவாமிகள், அவரது சீடர் அரு ளானந்தசிவம் நடமாடித்திரிந்த கிராமம் ஏழாலை. சி.வை. தாமோதரம்பிள்ளை, ஆத்மஜோதி முத்தையா, கலாநிதி மு.கந்தையா, சித்தாந்த வித்தகர் ஞானப் பிரகாசர் இம்மண்ணில் தோற்றம் பெற்றவர்களாவர். சைவச்சான்றோர்களி னாலும் ஆலயங்களினாலும் ஆத்மீக ஒளி வீசுவது ஏழாலை.

இத்தகைய சிறப்புக்கள் பலவும் கொண்ட ஏழாலையூரின் ஆத்மீகச் செழுமை யாவராலும் போற்றத்தக்கது. சிறந்த பக்தர்களையும் கலைஞர்களையும் ஆத்மீகச் செல்வர்களையும் கொண்ட ஏழாலைபதி ஆலயங்கள், திருவிழாக்கள், புராண படலங்கள், சமயசொற்பொழிவு கள், சமயபோட்டிகள் என்பவற்றை நடாத்தி மக்களை வழிப்படுத்துகின்றனர்.

குப்பிளான்

இக்கிராமம் ஏழாலையை விட்டுப்பிரி யாத தொடர்பினையுடையது. கிறிஸ்தவ மதம் எட்டிப்பார்க்க முடியாத பக்தி வைராக்கியமும் ஆத்மீகச் செழிப்பும் உடை யது. ஆத்மீக விளக்குகளாக விளங்கிய சடைவரதசுவாமிகளின் சீடரான பிரம்மஸ்ரீ சுந்தர சர்மாவையும், அம்பலம் வைத்தி யரையும், காசிவாசிசெந்திநாதரையும் தோற்றுவித்த மண் என்ற பெருமையையும் உடையது. திருவொற்றியூர் இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட சரவணமுத்து சுவாமி களினதும் குப்பிளான் அம்மா என்று அழைக்கப்படும் மாணிக்கம் அம்மாவின் சமாதிகளும் இங்கே அமைந்துள்ளன என்பர்.

குப்பிளானில் பரவலாக எங்குமால யங்கள் உள்ளன. விநாயகருக்கு நான்கு ஆலயங்களும், வைரவப் பெருமானுக்கு நான்கு ஆலயங்களும், இரண்டு அம்பாள் ஆலயங்களும், வீரபத்திரர் ஆலயம் ஒன்றும் முருகனாலயம் ஒன்றும் உள்ளன. மக்கள் பக்திப் பரவசமானவர்கள். ஆத்மீக உணர்வு மேலோங்கப் பெற்றவர்கள்.

"திருக்கோவில்கள் இல்லாத ஊரும், வெண்ணீறணியாத ஊரும், பக்தி கொண்டு பாடாத ஊரும், பலதளிகள் இல்லாத ஊரும், வெண்சங்க மூதாவூரும், விதான மும் வெண்கொடியும் இல்லா ஊரும், விருப்போடு மலர் பறித்து இட்டு உண்ணா ஊரும் இவை எல்லாம் ஊரல்ல அடவி காடே என்றார் திருநாவுக்கரசர். மனிதனுக் காகவே ஆலயங்கள் கட்டப்பட்டன. ஆலயத்தில் நடைபெறும் விழாக்கள் முதற்கொண்டு ஒவ்வொரு நிகழ்வும் மனிதனை தெய்வீக நிலைக்கு இட்டுச் செல்கின்றன. மணியோசை, தேவார பாராயணம், புராணபடனம், மந்திரங் களின் ஒலி, தெய்வீகப் பொலிவை நாட்டிற் குத் தருகின்றன. இதனாலே தான் ஆலயச் சூழலை அமைத்து மனிதன் ஆத்மீக வழியில் வாழத் தலைப்பட்டான். எனவே வலிதெற்குப் பிரதேசம் ஆலயச்சூழல் பல வற்றைக் கொண்டும், சாதுக்கள், ஞானி களைக் கொண்டும் ஆத்மீகச் செழுமை கொண்டதாக விளங்குகின்றது என்றால் மிகையாகாது.

உ

சிவமயம்

அமரர்

திரு.நாகலிங்கம் கணேசபிள்ளை அவர்கள்

(15.03.1935 - 26.01.2015)

(ஓய்வுபெற்ற உபஅதிபர், இணுவில் இந்துக் கல்லூரி)

திரு.நாகலிங்கம் கணேசபிள்ளை அவர்கள்

ஈழ மணித்திரு நாட்டின் தலையாய யாழ்ப்பாணத்தின் வடபகுதியில் விளங்குவது தையிட்டிக் கிராமம். நிலவளமும், கடல்வளமும், இயற்கை வளம் மிகுந்ததும் சைவவேளாண்குடிகள் வாழ்வதும், ஆலயங்களை உடையதுமான அழகிய கிராமம் இது.

இத்தகைய கிராமத்தில் சைவவேளாண்குடி திலகமாக விளங்கிவரும் சிங்கப்பூரில் லிகிதர் வேலை பார்த்தவருமான திரு நாகலிங்கம், தங்கம்பிள்ளை தம்பதிகளின் தலைமகனாக 1935ம் ஆண்டு தோற்றம் பெற்றவரே திரு. நா.கணேசபிள்ளை ஆசிரியர். இவருக்கு காலஞ்சென்ற சிவகாமி பெண் சகோதரியாவார்.

தந்தையார் நாகலிங்கம் சமய அறிவு நிரம்பப் பெற்றவரும், ஆங்கிலக் கல்வியில் வல்லுனருமாவார். இவருக்குச் சொந்தமான (தான்தோன்றி விநாயகர்), அரசடி விநாயகர் ஆலயத் திருப்பணிகளை நிறைவேற்றியவர். இத்தகைய நாகலிங்கம் 1938ம் ஆண்டு சிவபதமடைந்தார். மிக இளம் வயதிலேயே கணேசபிள்ளை தந்தையை இழந்தார். தாயினதும் தாய்மாமன் நீதவான் சின்னத்துரையின் அரவணைப்பிலும் வாழ்ந்து வந்தார்.

ஆரம்பக் கல்வியை தையிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலும், உயர்கல்வியை நடேஸ்வராக் கல்லூரியிலும் கற்று S.S.E சிரேஷ்டதராதரப் பத்திரப் பரீட்சையில் தேறினார். இக்காலத்தில் துர்அதிஷ்ட வசமாக தாயையும், சிறிது நாளில் தாய் மாமனையும் இழந்தார். தாயின் சகோதரி பொன்னம்மாவின் அரவணைப்பில் வாழ்ந்த இவர் மேற்கொண்டு கல்வியைத் தொடராமல் தொழில் வாய்ப்புப் பெற்று 24.03.1958 தொடக்கம் 1970 வரை நு / றொப்கீல்ட் தோட்டப் பாடசாலையில் ஆசிரியத் தொழில் புரிந்தார். ஆசிரியதராதரம் பெற்றமையால் அரசினது பாடசாலையில் கற்றன் கைலன்ஸ் மகாவித்தியாலயத்தில் 1970ல் நியமனம் பெற்று, கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சியை 1970 - 72 ல் முடிந்ததும் பயிற்றப்பட்ட ஆசிரியரானார். ஆங்கிலக் கல்வியில் நாட்ட முடைய இவர் கண்டியில் நடைபெற்ற ஆங்கிலப் பயிற்சி கல்லூரியில் கற்றுத் தேர்ச்சி பெற்று ஆங்கில ஆசிரியராகக் கடமை புரிந்தார்.

இக்காலத்தில் அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கப் பிரதிநிதியாகவும் செயலாளராகவும் மகாசிவத்துடனிணைந்து கல்விச் சேவை ஆற்றினார்.

1974ல் இணுவில் பகுதியில் வாழும் தம்பையா அன்னம்பிள்ளை தம்பதிகளின் இளைய மகள் வைகுந்தம் ஆசிரியரைத் திருமணம் செய்து கொண்டார். இதன் பேறாக சசிகுமாரன் என்ற ஏக புத்திரனைப் (அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆளுநர் செயலகம் வடமாகாணம்) பெற்று மகிழ்ந்தார். உரிய வயதில் மகனுக்கு 2011ல் தெல்லிப்பழை ஆயுள்வேத வைத்தியசாலை வைத்திய அதிகாரியான டிசிந்தினியைத் திருமணம் முடித்து வைத்து மிக்க மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தார்.

1977ல் இடமாற்றம் பெற்று இணுவில் இந்துக் கல்லூரியில் ஆசிரியராக, பகுதித் தலைவராக, பிரதி அதிபராக 1995 வரை கல்விப்பணி புரிந்தார். ஓய்வு பெற்ற பின்பும் கல்லூரியின் வளர்ச்சிக்காக இறுதிவரை இந்துக்கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியத் தலைவராக இருந்து பணிபுரிந்துள்ளார்.

1977ல் தமிழ்ப் பண்டிதர்கள் 39 பேர் வேலை இடைநிறுத்தம் பெற்றிருந்தனர். மீண்டும் அவர்களுக்கு வேலைவாய்பைப் பெற்றுக் கொடுக்க பண்டிதசங்கத்தாருட னிணைந்து செயல்பட்டு வேலைவாய்பைப் பெற்றுக் கொடுத்துச் சங்கத்தினால் பாராட்டும் பெற்றார். தான் வாழ்ந்த காலத்தில் இது போன்ற கல்விச் சேவைகள் பல ஆற்றியுள்ளார். நல்லமனப்பாங்கு, பண்பு, இனிய சுபாவம், உண்மை, நேர்மை என்பன இவரது குணங்களாகும். இதுவரை இவர் நீதிக்கும், உண்மைக்கும் புறம்பான காரியங் களைச் செய்ததில்லை. பெரியார்கள், ஞானிகள், நல்லவர்களுடைய வழிகாட்டலில் வாழ்ந்தவர். "தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்றாங்குக ஐம்புலத்தாற் றோம்பல்தலை" என்ற வள்ளுவர் வாக்கிற்கமைய இல்லறக் கடமைகளைத் தவறாது நிறைவேற்றி நிறைவாழ்வு வாழ்ந்து இறைவன் நியதிப்படி 26.01.2015ல் சிவபதம் அடைந்துள்ளார்.

எனக்குத் தமிழ் தந்த ஆசான்கள் இருவர்

பண்டிதர்
இராசலிங்கம்

பண்டிதர். வித்துவான்
சைவப்புலவர் இ.திருநாவுக்கரசு

"எழுத்தறிவித்தவன் இறைவனாவான்" என்பது ஔவை வாக்கு. எழுத்தறிவித்த ஆசான்கள் இறைவனுக்கு சமமானவர்கள். அகத்தியர், தொல்காப்பியர், ஔவையார் போன்றோருக்கு இறைவனே தமிழை அறி வித்தான். இதனால் தமிழ் தெய்வீகம் வாய்ந் தது என்பர். இன்று வரை எத்தனையோ தமிழ் வளர்த்த சான்றோர்கள் இருந்திருக் கிறார்கள். மாணவர்களின் உள்ளங்குளிர தமிழ் புகட்டிய நல்லாசான்களை மாணவ ருலகம் மறப்பதில்லை. அவர்கள் மாணவர் நெஞ்சங்களில் வாழ்ந்துகொண்டே இருக் கின்றார்கள். நான் எத்தனையோ நல்லா சிரியர்களிடம் தமிழ் கற்றுள்ளேன். இந்த வகையில் வை.கதிர்காமநாதன், பண்டிதர் இ.இராசலிங்கம் பண்டிதர், வித்துவான். சைவப்புலவர். இ.திருநாவுக்கரசு, இ.கந்த சுவாமி, பண்டிதர் செ.துரைசிங்கம், வித்து வான் வேந்தனார், வித்துவான் சுப்பையா-பிள்ளை, திருமதி. மங்கையற்கரசி சிற்றம்-பலம் என்போரைக் குறிப்பிடலாம். இவர் கள் என் வணக்கத்துக்குரியவர்கள்

ஆயினும் இவற்றுக்கெல்லாம் மூலா தாரமாக அத்திபாரமாக இருந்தவர்கள் பண்டிதர் இ. இராசலிங்கம், பண்டிதர் இ.திருநாவுக்கரசு ஆசிரியர்களே. இவர்கள் அம்பிகைபாக வித்தியாசாலை அல்லது சைவப்பிரகாச வித்தியாசாலை (தற்பொழுது இது இணுவில் இந்துக்கல்லூரி)யில் ஆசிரியர் களாக இருந்த பொழுது யான் தமிழைக் கற்றேன். மணலிலே "அ" எழுதிப் படித்தது முதல் S.S.E வகுப்பு வரை தொடர்ச் சியாகக் கற்றுள்ளேன். இவர்கள் இருவரும் இக்கல்லூரி யின் பழைய மாணவர்களே. இதனால் பாட சாலையில் மிகுந்த ஈடுபாடும், விசுவாசமும், அர்ப்பணிப்பும் உடையவர்கள். நல்லதொரு மாணவ சமுதாயத்தை உருவாக்கியவர்கள். இவர்கள் எனக்களித்த தமிழே இன்று நான் பண்டிதை என்ற பட்டத்தை எடுக்க அத்தி வாரமாயிற்று.

எளிமையும் இனிமையும் கலந்த சுபாவம், வெள்ளை நாசினல், வேட்டி சால்வை, விபூதிப்பூச்சுக்கு மேல் சந்தனப் பொட்டு இதுவே அவர்களது தோற்றம். தமிழும், இசையும் இவர்களுக்குக் கைவந்த கலைகள். தமிழால், இசையால் மாணவர் களைக் கட்டிப்போட்டுவிடுவார்கள். அவர் கள் சொல்லித் தரும் பண் கலந்த தேவாரங் கள் உடனே பாடம் வந்து விடும். இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை வளர அர்ப் பணிப்புடன் செயற்பட்டவர்கள்; சைவமும் தமிழும் பேணிக்காத்தவர்கள்.

பாலர் வகுப்பு அ... ...து அரிவரி என்று அழைப்பர். நான் அந்த வகுப்பில் திருநாவுக்கரசரிடம் படித்தேன். நாடகங்கள் நடிப்போம். இசையோடு அபிநயப்பாடல் கள் பாடுவோம். ஒருமுறை "நண்டும் நரி களும்" என்ற பாடல் நடிக்கப்பட்டது. நரி தந்திரமுள்ளது. தீமை செய்யும் நம்பக் கூடாது என்று சொல்லித்தந்த பாடல் இன்றும் "சம்புவின் பின்னே நண்டுகளும் நம்பிச் சென்று மாண்டனரே" என்று என் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருக் கிறது. திருநாவுக்கரசர் பண்ணோடு சொல் லித் தந்த பூசுவதும் வெண்ணீறு, மடையில் வாளை, சலம்புவொடு என்பது போன்ற பல தேவாரங்கள் அவரை நினைவூட்டும். இவரது திறமையைக் கண்டு அரசாங்கம் அதிபர் பதவியை வழங்கியது. கண்டி யிலும், வண்ணார்பண்ணை நாவலர் வித்தியாசாலையிலும் அதிபராக இருந்து நாவலர் பணியைத் தொடர்ந்தவர்.

இணுவில் சைவப்பிரகாச வித்தியா சாலையும் இராசலிங்கப் பண்டிதரும்

இப்பாடசாலையிலே ஆரம்பக்கல்வி முதற்கற்று, மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டித ராகி, ஆசிரிய தராதரப்பரீட்சையில் சித்தி பெற்று 1944ம் ஆண்டு இணுவில் சைவப் பிரகாச வித்தியாசாலையில் ஆசிரியராகப் பணிபுரிந்தார். 1950ம் ஆண்டு சிரேஷ்ட உப அதிபராகவும், 1960ல் இருந்து 1977 வரை சைவப்பிரகாச வித்தியாசாலை அதிப ராகவும் பணிபுரிந்தார். இப்பாடசாலை யில் பணிபுரிந்த காலத்தில் பல சாதனை களைச் செய்து முடித்தார்.

பரராசசேகரப்பிள்ளையார் தெற்கு வீதியில் அமைந்த இப்பாடசாலை இட வசதி போதாமையால் தத்தளித்தது. இதே வேளை கோவிலின் வடபுறத்தே இருந்த 22½ பரப்புக் காணியை, சுதுமலைச் சாத்திரியார் சின்னையாவும் மனைவியும் ஈட்டின் மேலறதி பெற்றிருந்ததை அறிந்து, அப் பணத்தைக் கொடுத்து (வட்டி தவிர்த்து) இந்து போட்டுக்கு ஏழுதுவித்தார். அப் பொழுது பாடசாலை இந்துபோட்டே கையேற்று நடாத்தியது. பண்டிதர் இந்து போட்டின் நம்பிக்கைக்கு உரியவராக இருந்ததால் இந்தக் காணி பாடசாலைக்குச் சொந்தமானது. இக்காணியில் இணுவில் பரராசசேகரப்பிள்ளையாருக்கு இரண்டு பரப்பும், இணுவில் கந்தசுவாமி ஆலயத் துக்கு 1 பரப்பும் கொடுக்கப்பட்டது. மீதிக் காணி 18ப் பரப்பிலும் புதிய பாடசாலை கட்டப்பட்டது. சிறிய காணித்துண்டில் இட நெருக்கடிப்பட்ட பாடசாலை 22 பரப்புக்குச் சொந்தமானது. மேலும் பண்டிதர் பணி தொடர்ந்தது. பாட சாலையை சைவப்பிரகாச மகா வித்தி யாலயம் ஆக்கும் வகையில் ஈடுபட்டார். கிழக்கு மேற்காக 200 அடி நீளமும் 20 அடி அகலமுங் கொண்ட கட்டடத்தை இந்து போட்டின் உதவியால் கட்டினார். பலரின் எதிர்ப்பால் அது உடைக்கப்பட்டது. மீண்டும் அப்பொழுது இருந்த கல்வி மந்திரி அஸ்வில் அவர்களின் உதவியோடு நன்கொடை பெற்று அக்கட்டடம் பூர்த்தி செய்யப்பட்டது. இந்து போட்டின் அந்த ரங்கச் செயல்வீரனான இவர் 100 x 20 அடி நீளமான கட்டடத்தைச் சொந்தச் செலவு பணமும் இட்டு பல எதிர்ப்பின் மத்தி யிலுங் கட்டி முடித்தார்.

முத்தமிழ் வித்தகரான பண்டிதர் இராசலிங்கம் சேக்ஷ்பியர் நாடகத்தை தமிழில் மொழிபெயர்த்து கருணாகரன் என்ற பெயரில் மேடை ஏற்றினார். மேலும்

இவர் சகுந்தலை, அரிச்சந்திரா நாடகம், போன்ற பல நாடகங்களை எழுதி மேடை ஏற்றினார். இயலிசை நாடகத்துறையில் பாடசாலை மேலோங்கியது.

பண்டிதருடைய புலமையை வெளிப் படுத்த இரண்டு எடுத்துக்காட்டுகள். இவை என்மனதில் பதிந்தவை. சகுந்தலை நாடகம் ஆசிரியர் பழக்கும்போது யான் சிறியவள். 2ம், 3ம் வகுப்பில் தான் படித்திருப்பேன். சகுந்தலை தோழி களுடன் பூந்தோட்டத்தில் உலாவுகிறாள். பூஞ்செடிகள் வாடியிருப்தைக் கண்டு வினாவுகிறாள்.

சகுந்தலை : எந்நநியாயம் பூஞ்செடி எல் லாம் இப்படி வாடியதே?

தோழி : நாங்கள் நேற்று தண்ணீர் ஊற்ற இல்லை, இல்லையே.

மற்றத்தோழி : எங்கள் ஊஞ்சல் ஆட்டத் தாலே மறந்தோம் மறந்தோமே"

என்ற பாடலும், இதுபோன்ற பல பாடல்களும் என்னுள்ளத்தில் பதிவா கியது. என்னைப் போன்ற மாணவர்கள் பாடிக் கொண்டே திரிவார்கள். இன்னு மொரு எடுத்துக்காட்டு சுகாதார வாரத்தில் நடித்ததில் நானும் ஒருவர்.

விற்றமின் குறைவால் நோய்வாய்ப் பட்ட ஒரு தாய்க்கு விற்றமின் A, B, C, D, E ஆக 5 மாணவர்கள் அறிவுரை கூறுவதாக அமைகிறது. ஒவ்வொருவரும் தமது பெயரை வெளிப்படுத்த "என் பெயர் சீவாதாரம் A, என்றும் B என்றும் கூறுவர். கூறும் பொழுது தாம் எந்த எந்த உணவுகளில் இருக்கிறார்களோ அதனை யும் கூறி அவற்றை உண்டால் சுகமாக வாழலாம் என்று கூறுவர். பாடல் ஒன்று மட்டும் "என் பெயர் சீவாதாரம் B தீட்டரிசி செழுங்கோதுமை, சோளமிவற்றில் வாட்ட முறாதிருப்பேன் மகிழ்ந்து புசிப்பாயிவை" "அம்மா நினது நலம் நன்றாக வாழ்வடைய எம்மால் அல்லது வேறு எந்த வழியு மில்லை" என்று பாடல் அமைகிறது. இவை யெல்லாம் என்னை வழிப்படுத்திய தமிழே, ஆத்திசூடி, கொன்றைவேந்தன் நீதி நூல் களை ஆசிரியர் கதிர்காமநாதன் மனனம் செய்விப்பார். பொருளை விளங்காமல் மனனம் செய்வோம். "சிவத்தைப் பேணில் தவத்திற்கழகு" என்ற தொடர் சிவந்த பேணி என்பது அப்போதைய எனது விளக்கம். இன்று இவை என்வாழ்வில் கருத்தூன்றிய பாடல்களாக வழிகாட்டிகளாக அமைந் துள்ளதை உணர்கிறேன்.

சகல துறைகளிலும் வளர்த்த பாட சாலைக்கு இவர் அயரா முயற்சி செய்து இராமநாதக் குருக்களிடம் 28 ½ பரப்பை யும் குறைந்த விலைக்கு வாங்கிப் பாட சாலை விளையாட்டு நிலம் இல்லாத குறையையும் போக்கினார். 100க்கும் அதிகமான மாணவர்களுக்கு ஆசிரியப் பதவி பெற்றுக் கொடுத்த பெருமைக்கு உரியவர். இன்று பாடசாலை புதிய மேல் மாடிக் கட்டடங்களுடனும் கலைத்துறை களிலும் புதுப்பொலிவு பெற்று 150வது வருட விழாவையும் கொண்டாடியுள்ளது. பாடசாலைக்கு நற் பணியாற்றி நன் மாணாக்கர் பலரை உருவாக்கிய ஆசிரியப் பெருந்தகைகளை அவர்களது பணிகளை எதிர்காலச் சந்ததியினரும் உணரும் வகை யில் இக்கட்டுரை ஆக்கம் அமைந்தது. இக்கட்டுரை எனது சொந்த அனுபவத் திலும், இணுவில் மத்திய இந்து இளைஞர் சங்க வெளியீட்டில் இருந்து எடுக்கப்பட்ட தகவல்களுங் கொண்டுள்ளது.

செம்மொழியாம் தமிழ்மொழி

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" என்ற பாரதியின் கூற்றும், "தமிழுக்கு அமுது என்று பெயர்" என்ற பாரதிதாசனின் கூற்றும் என்னைக் கவர்ந்தவை. இதற்கு மேலாக "என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்ற திருமூலரின் அறிவுறுத்தலும் செம்மொழியாம் தமிழ்மொழி பற்றி சிந்திக்க வைத்தது. தமிழ் செய்தல் என்றால் அன்பு செய்தல் என்பது பொருள். அன்பினால் இன்பம் பெறலாம். வீடுபேறு அடையலாம், தமிழ் அத்தகைய ஆற்றல் வாய்ந்த தெய்வ மொழியாகும். இதனால் இதற்குக் கன்னித்தமிழ், இன்பத்தமிழ், செந்தமிழ், அன்புத்தமிழ் எனப் பல பெயர்கள் கொண்டு அழைப்பர்.

சங்கமிருந்த தமிழ்

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்தகுடி தமிழ்க்குடி என்றும், அவர்கள் பேசிய மொழி தமிழ் மொழி என்றும், ஆய்வாளர்கள் கூறுவர். இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்மொழி பழைமை குன்றாது புதுமை பெற்றும். இளமையும், இனிமையும் பெற்றுக் காலத்தால் அழியாது கன்னித் தமிழ் எனச் செழித்து நிற்பதைக் காணலாம். இது இசைத்தமிழ், இயற்றமிழ், நாடகத் தமிழ் என வடிவமைந்து விளங்குகின்றது. வேறு எந்த மொழிக்கும் இல்லாத சிறப்பு தமிழ் மொழிக்கு உண்டு. இத்தகைய தமிழ் மொழியைப் புலவர்கள் ஆராய்ந்தனர். இதனால் இது "சங்கத்தமிழ்" எனவும் "கூடலின் ஆய்ந்த ஒண்தீம்தமிழ்" எனவும் பெருமை பெற்றது. சங்கங்கள் மூன்று இருந்தன என்றும் அவை ஒவ்வொன்றும் ஆயிரமாயிரம் ஆண்டுகள் இடைவெளிகளையுடையதாய் இருந்தனவென்றும், முச் சங்கங்களிலும் அறிஞர்கள் கூடி ஆராய்ந்து செப்பனிடப்பட்ட மொழியே தமிழ் மொழி யென்றும், "சங்கத்தமிழ்" என்றும் போற்றப் பட்டது என்பர். முதற் சங்கத்தில் அகத்தியரும், இடைச்சங்கத்தில் தொல்காப்பியரும், கடைச்சங்கத்தில் நக்கீரர் முதலியோரும் இருந்தனர். முதற்சங்க நூல்கள் கடல்கோள்களினாலும் கால வெள்ளத்தாலும் அழிந்து போக மதுரையில் கூடிய தமிழ் சங்க நூல்களே பெரிதும் கிடைத்துள்ளன. அகத்தியரின் மாணாக்கர் தொல்காப்பியரினால் எழுதப்பட்ட தொல்காப்பியமும், இறைவனால் அருளிச் செய்யப்பட்ட இறையனார் அகப்பொருளோடு பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க் கணக்கு, சிலப்பதிகாரம். மணிமேகலை ஆகிய நாற்பது நூல்களும் சங்க நூல்கள் எனப்படுகின்றன.

தெய்வப்புலவர் தொல்காப்பியத்தை தமிழ் மொழிக்கு வழங்கினார். இது பழமையும் பெருமையுமுடையது. இடைச்சங்க காலம் முதல் இன்று வரையும் இலக்கணத்தை உணர்த்தும் தலையாய நூலாக விளங்குகிறது. எழுத்து, சொல், பொருள் மூன்றினது இலக்கணத்தையும் கூறுகிறது. இதற்கு இளம்பூரனார், சேனாவரையர், பேராசிரியர், தெய்வச்சிலையார், நாச்சிநார்க்கினியார் என்போர் உரையெழுதி உள்ளனர். யாவருரையிலும் சேனாவரையாருரையே சிறந்ததென்பர்.

திருக்குறள் "உலகப்பொதுமறை" எனப் போற்றப்படுகிறது. இது உலகில் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. திருக்குறளுக்கு இன்னொரு சிறப்பாகும். இனமத வேறுபாடின்றி எல்லோரும் கைக்கொள்ளக் கூடிய அறங்களைக் கூறுவதோடு அறம், பொருள், இன்பம், வீடு என்ற புருடார்த்தங்களையும் எடுத்துக் கூறுகின்ற சிறப்பினையுடையது. இறையனாராகப் பொருள் இறைவனால் அருளிச் செய்யப்பட்ட அகத்தினை இலக்கண நூலாகும்.

உயரிய கோட்பாடுகளையுடைய தமிழ்

இவ்வாறு ஈராயிரமாண்டுகட்கு முன் தோன்றிய ஆயிரத்துக்கு மேற்பட்ட இலக்கியங்கள் இன்றும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அவற்றில் ஆயிரத்துக்கு மேற்பட்ட புலவர்களின் குரல்கள் ஒலித்துக்கொண்டே இருக்கின்றன. "இருந்தமிழே உன்னால் இருந்தேன்" என்கிறார் ஒரு புலவர் "யாதுமூரே யாவரும் கேளீர்" என்கிறார் மற்றுமொரு புலவர், இளம் பெருவழுதி என்பவரோ "உண்டாலம்ம இவ்வுலகம்..... பிறர்க்கென முயலுனர் உண்மையானே" என்கிறார். இவையாவும் சங்கத்தமிழன்றோ இத்தகைய உயரிய வாழ்க்கைக் கோட்பாடுகளை உலகிற்கு எடுத்துக் கூறுவனவாகத் தமிழ் மொழி விளங்குகின்றது. பல்லாயிரமாண்டுகட்குப் பின்னரும் இவை மக்கள் வாழ்வை வளம்படுத்துவனவாக அமைந்துள்ளன.

சங்ககால மக்கள் வாழ்வு அகவாழ்வு, புறவாழ்வு என வகுக்கபட்டுள்ளன. அக வாழ்வு, காதலையும், புறவாழ்வு போரையும் பற்றியவையாகும். இவை இரண்டுமே சங்க இலக்கியப்பொருள் மரபாக அமைந்துள்ளன. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என நிலங்களை வகுத்து, நிலத்தின் பெயரால் ஒழுக்கங்களை வகுத்து அகத்திணைப் பாடல்கள் அமைந்துள்ளன. இவற்றிற்கு முறையே வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை எனப் புற ஒழுக்கங்களும் பாடற்பொருள் மரபாக அமைந்துள்ளன. இவ்வாறு அமைந்த சங்க இலக்கியங்கள் கவிச்சுவை, பொருட்சுவை, சொற்செறிவு நிரம்பியவையாகவும், உவமை நயத்தோடு கூடியனவாகவும், குறிப்புப்பொருள் உணர்த்துபவையாகவும், அரசரின் கொடை, வீரம், போர், முதலிய அற ஒழுக்கங்களை கூறுபவையாகவும் அமைந்துள்ளன. இம்மொழியானது மக்களைக் கலைஞர்களாகவும், கலாரசிகர்களாகவும், ஆன்மீகச் சிந்தனையாளர்களாகவும், பண்பாளர்களாகவும் வளர்த்துள்ளது.

அன்புத்தமிழ்

சங்ககால நல்லிசைப் புலவர்களின் இலக்கியங்கள் உயிருள்ளவை. புலவன் தான் நுகரும் இன்பத்தைப் பிறரும் அனுபவிக்க வைக்கிறான். நல்லிசைப் புலவனின் நாவில் பிறக்கின்ற சொற்களின் சிறப்பையும், கேட்போர் அடைகின்ற இன்பத்தையும், தமிழ் மொழியின் சிறப்பாகக் கண்டுகளிக்கலாம். ஒரு தலைவன் பொருளீட்டுவதற்காக வெளிநாடு செல்கின்றான் காட்டிலே காதலை நினைவூட்டும் நிகழ்ச்சிகளே நிறைந்திருக்கும் என்பதைத் தலைவிக்குக் கூறியிருக்கிறான். தலைவன் சென்றபின் தலைவி அவற்றை நினைவு படுத்துகிறாள். தோழிக்குக் கூறுவாள்.

"அடிதாங் குமளவின் றி அழலன்ன
வெம்மையால்

கடியவே கனங் குழாய் காடென்றார் அக்காட்டுள்

துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்

பிடியூட்டிப் பின்னுண்ணும் களிறு"

எனவும் உரைத்தனரே.

"இன்னிநிழல் இன்மையால் வருந்திய மடப்பிணைக்குத்

தன்னிநிழலைக் கொடுத்தளிக்கும் கலை"

எனவும் உரைத்தனரே (பாலைக்கவி)

என்று கூறுந்தலைவி, இக்காட்சியைக் கண்டதும் தலைவன் பொருளீட்டாமல் திரும்பி வந்து விடுவாரோ? என்ற ஐயப் பாட்டைத் தெரிவிக்கிறாள். பாலை நிலத் திலேயுள்ள குட்டை நீரில் களிறும் பிடியும் அடைந்த இன்பவாழ்வின் இன்பத்தை மக்கள் வாழ்வில் இணைத்துத் தெய்வீக வாழ்வொன்று காட்டப்படுகின்றது. நீர் வேட்கையை மறந்த களிறும், பிடியும் தம் அன்புக் குட்டிக்குழவி குட்டைநீரைக் கலக்கி, உழக்கி, விளையாடி., நீர்குடித்து வரும்வரை அக்காட்சியைக் கண்டு களித்து இன்புற்றன. பின்பு ஆண்யானையானது தனது அன்புக்குரிய பெண்யானையை நீரருந்த விட்டு அதன்பின்பு தான் நீரை அருந்தி மகிழ்ந்தது. களிறும் பிடியும் கருத்தொருமித்த காதலன்பினால் இன்பங் கண்டன. ஒருயிர் இன்பத்தைத் தானுவந்து ஏற்று பிறிதொருயிருக்கு இன்பத்தை அளிக் கிறது. இதனை வள்ளுவர் பெருமான் "அன்போடியைந்த வழக்கு" என்பர். இங்கே தெய்வீகத்தைத் தியாக உணர்வைப் பார்க்கின்றோம். திருமூலரும் இக்கருத்துப் படவே "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்" என்றார். அன்புதான் சிவம் என்பது கூட்டிக் காட்டுகிறது இப்பாடலில். இங்கே தெய்வீகத்தைப் பார்க்கிறோம். இது போன்ற ஆயிரமாயிரம் பாடல்களைச் சங்க இலக்கியங்களில் காணலாம். தமிழ் ஒரு தெய்வமொழி என்பதை உணரு கிறோம்.

காப்பியத்தமிழ்

மொழி கலைவடிவம் பெற்றதினால் காப்பிங்களும், இலக்கியங்களும், இதி காசங்களும் தோன்றின. தமிழிலக்கிய வரலாற்றில் காப்பியமென முதல் முதலில் தோன்றியது சிலப்பதிகாரமே. இதனை எமக்குத் தந்தவர் இளங்கோவடிகள். சிலப்பதிகாரமும், மணிமேகலையும் இரட் டைக் காப்பியங்கள் என்பர். இவை சங்க மருவிய கால நூல்களாகும். ஏனைய இலக் கியங்கள் பல்லவர், சோழர்காலமும், அதற் குப் பிந்தியவையுமாகும். இந்த வகையில் தமிழில் உள்ள சீவகசிந்தாமணி. சிலப் பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்பன பெரும் காப்பியங் கள் என்றும், சூளாமணி, யசோதரா காவியம், உதயண குமார காவியம், நீல கேசி, நாககுமார காவியம் என்பன சிறு காப்பியங்கள் என்றும் கூறப்படும். சிலப் பதிகாரமும், மணிமேகலையும் தமிழ் நாட்டுக்கதை கூற ஏனைய காப்பியங்கள் வட நாட்டுக்கதை கூறுவனவாக அமைந் துள்ளமை குறிப்பிடத்தக்கது. சோழர் காலத்தில் எழுந்த காப்பிய வரிசையிலே கம்பராமாயாணம், பெரிய புராணம், கந்த புராணம் என்பவை தமிழ் மொழிக்கு சிறப்பினை தேடித் தந்தவையாகும்.

சிலப்பதிகாரம் ஒரு குடிமக்கள் காப்பியம். வீட்டைவிட்டு வெளியே வராத ஒரு பெண் நாட்டை விட்டு வேற்று

நாட்டில் அரச சபை ஏறி வழக்குரைக்கும் அளவிற்கு புரட்சி செய்துள்ளார் இளங்கோ வடிகள். சாதாரண வணிகக் குலத்துதித்த கோவலனையும் கண்ணகியையும் காப் பியத் தலைவர்களாக்கி நூலை தமிழுக்கு அளித்துள்ளார். சோழ நாட்டில் பிறந்து, பாண்டி நாட்டில் வழக்குரைத்து, சேர நாட்டில் தெய்வமாகிறாள் கண்ணகி. கணவனை இழந்த கண்ணகி பொங்கி எழுந்தாள். சூரியனைப் பார்த்து "காய் கதிர்ச்செல்வனே என் கணவன் கள்வனோ"? என்றாள் "பாண்டியனிடம் நீதி கேட்பேன்" என எழுந்து சென்றாள். அக்காட்சியை இளங்கோவடிகள் படம்பிடித்துக் காட்டு கிறார். "மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும் கையிற் தனிச்சிலம்பும்" கொண்டு ஏகினாள் என்றும், ஆவி குடி போன அவ்வடிவம் என்றும் கண்ணகியின் தோற்றத்தை வர்ணிக்கிறார். சென்றவள் சபையில் மன்னனை நோக்கினாள் "தேரா மன்னா", "நற்றிறம் படராக் கொற்கை வேந்தே" என மன்னனை அஞ்சாது விளிப் பதும், "கள்வனென உன்னாற் கொலை யுண்ட கோவலன் மனைவி கண்ணகி என் பெயர்" எனத் தன்னை அறிமுகம் செய் வதும், வழக்குரைப்பதும், என்காற்சிலம்பு மணியுடையரியே என அரசன் அறமற்று தன் கணவனைக் கொன்ற செயல் உணர்த்த லும், மாணிக்கப்பரலைக் கண்ட பாண்டியன் நெடுஞ்செழியன் தன்பிழை உணர்ந்து "யானோ அரசன் யானே கள்வன்" என உயிர் துறத்தலும், மதுரை மாநகர் தீக் கிரையாதலும் கண்ணகி சேரநாடு சென்று தெய்வமாதலையும் காப்பியம் அழகாக எடுத்து கூறுகிறது. இதனால் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரமாகின்றது. முத் தமிழ் காப்பியமாகப் போற்றப்படும் சிலப் பதிகாரம் மூன்று அறக்கருத்துக்களை எம் முன் வைக்கிறது. ஒன்று அரசியல் பிழைத் தோருக்கு அறங்கூற்றாவதும், இரண் டாவது ஊழ்வினை வந்துறுத்தும் என்ப தும், மூன்றாவது உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏற்றலும் என்ற மூன்று தத்து வங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. சிலப்ப திகாரமும், மணிமேகலையும், இரட்டைக் காப்பியங்கள் என்பர். கோவலன் பரத்தை யர் குலப்பெண்ணான மாதவியையும், மணம் முடிக்கிறான். மாதவி கற்புடைப் பெண்ணாகக் காட்டப்படுகிறாள். கோவல னுக்கும் மாதவிக்கும் மகளாக மணி மேகலை தோன்றுகிறாள். இவள் சிறந்த துறவியாகவும், குருவாகவும் காட்டப்படு கிறாள். சிறந்த இலக்கியங்கள் காலத்தால் அழிவதில்லை அவை மக்களுக்கு வழி காட்டியாக அமைபவையாகும்.

மகாபாரதமும், இராமாயணமும் இதி காசங்கள். இவை உயரிய இலட்சியங்களை கொண்டமைந்தவை. மக்கள் வாழ்விய லுக்குப் பயன்படுபவையாகும். வடமொழி யில் வால்மீகியால் எழுதப்பட்ட இராமா யணத்தை கம்பர் தமிழ் செய்தார். வீரத்தின் இலட்சணம் பேராண்மை அதிலும் ஒரு படி மேலானது ஈராண்மை. இதனை இராமன் மேல் வைத்து காட்டுகிறார் கம்பர். இராம, இராவண யுத்தத்தில் யாவற்றையும் இழந்த இராவணன் நிராயுதபாணியாக நிற்கிறான். இராமனின் பகைவன் இராவணன் நிராயுத பாணியாக நிற்கும் இராவணனை கொன் றிருக்கலாம். அதனை இராமன் செய்ய வில்லை. பகைவனான இராவணனுக்கு இரக்கம் காட்டுகிறான். உபகாரியாக மாறு கிறான். "இராவணா இன்று போய் நாளை வா" என்கிறான். நாளைக்கு நீ சும்மா

வராதே படைகளுடன் வா என்றான் இராமன். இந்த வீரனுடைய கொடையை மிகைப்படுத்திய கம்பர்.

"இன்றுபோய்ப் போர்க்கு நாளை வாவென நல்கினன் கோசலை நாடுடை வள்ளல்" என்று சிறப்பிக்கின்றார். வள்ளண்மையை விதந்து கூறி போர்த்தருமத்தை உணர்த்துகிறார் கம்பர்.

பல்வேறு இலக்கியங்களை, இலட்சியங்களை எடுத்துரைத்த கம்பர் மருத நிலக் காட்சியிலும் எம்மைப் பிணித்து விடுகின்றார். வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம், வயல்களிலே தாமரைத் தடாகங்கள் இருப்பது இயற்கை, அன்னங்கள் எருமைகள் வாழ்வது இயற்கை. இவ் வழகிய வயலையும், தாமரைத்தடாகத்தையும் கவிதை செய்தார் கம்பர்.

"சேலுண்ட ஒண்கணாரிற்
திரிகின்ற செங்காலன்னம்
மாலுண்ட கமலப்பள்ளி
வளர்த்திய மழலைப் பிள்ளை
காலுண்ட செற்று மேதி
கன்றுள்ளிக் கனைப்பச் சோர்ந்த
பாலுண்டு துயிலப் பச்சைத்
தேரை தாலாண்டும் பண்ணை"

என்றார்.

வயல்களிடையே காணப்பட்ட தாடாகத்தில் தாமரைமலரில் அன்னப்பிள்ளைகள் கண் வளருகின்றன. எருமைகள் தமது கன்றை நினைக்குந் தோறும் பாலைச் சொரிய அதனை அன்னப்பிள்ளைகள் உண்டு துயில் கொள்ள, அவற்றின் நித்திரை குழம்பாமல் இருக்க தேரைகள் தாலாட்டுகின்றன என்று தன்புலமையைத் தமிழ் செய்த கம்பர் மருதநிலத்தின் செழிப்பையும், அங்கு வாழ்கின்ற மக்களின் செழிப்பான வாழ்க்கையையும் உணர வைக்கின்றார். இயற்கைக் காட்சிகளினூடு மக்களின் பண்பட்ட ஒழுக்கங்களையும் உயர்ந்த இலட்சியங்களையும் புலவனாற் படைக்கப்படும் போது அவை செந்தமிழ் இன்பங்கனிந்த செம்மொழி என்பதை எவராலும் மறக்க முடியாது. இது வேறு எந்த மொழிக்கும் இல்லாத சிறப்புமாகும்.

செந்தாமரை மலர்கள் நிறைந்த அழகிய பொய்கை ஒன்றின் இயற்கைக் காட்சிகளைச் சீவகசிந்தாமணி ஆசிரியர் நயம்படக் கூறுகின்றார்.

"நீலத்துகிலிற் கிடந்த
நிழலார் தழலம் மணிகள்
கோலச் சுடர் விட்டுமிழக்
குமரியன்னங் குறுகிச்
சால நெருங்கிப்பூத்த
தடந் தாமரைப் பூவென்ன
வாவிச் சுடர்கள் கவ்வி
அழுங்கும் வண்ணம் காண்மின்"

என்கிறார்.

பெண்ணொருத்தி செம்மணிகள் பதித்த நீலப்பட்டாடையுடன் நீராடப் பொய்கையை நோக்கிச் சென்றாள். கதிரவன் ஒளிபட்டு அவள் பட்டாடையின் மணிகளின் ஒளியானது பொய்கையில் விழுதலும், பொய்கையானது செம்மை நிறமெய்தியது. இதனைத் தூரத்திலே இருந்து கண்ட மட அன்னமானது விரைந்து ஓடி செந்தாமரை மலரென வாவியில் விழுந்த சுடரைக் கவ்விற்று, சுடர்கள் வாயில் அகப்படாமையால் தன் மடமையை எண்ணி நாண முற்றது என்று அழகாகச் சிந்தாமணிக் கவிஞர் தமிழ்

செய்துள்ளமை எல்லோருடைய உள்ளங் களையும் உவகையில் ஆழ்த்துகிறது.

தமிழின் சிறப்பைப் பக்திச் சுவை சொட்ட உலகறியச் செய்தவர் சேக்கிழார். பெரிய புராணத்தின் பாட்டுடைத் தலைவன் சுந்தரர். சுந்தரர் பரவையாரைக் கண்டு காதல் வெள்ளத்தில் மூழ்கியதை அழகாகச் சேக்கிழார் செம்மொழியில் தரு கின்றார்.

"கற்பகத்தின் பூங்கொம்போ காமன்தன்
பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ
புயல்சுமந்து
விற் குவளை பவளமலர் பூத்த விரைக்
கொடியோ
அற்புதமே சிவனருளோ அறியேனென்று
அதிசயித்தார்."

எனப்பாடலமைத்தார். கற்பகத்தின் பூங்கொம்போ, காமன் பெருவாழ்வோ, புண்ணியத்தின் வடிவமோ, பவளமலர் விரைக் கொடியே, இந்த உருவம் தான் என்னே! என்று பரவையாரை விதந்த சுந்தரர் அற்புதமோ, சிவனருளோ இது என்ன அதிசயம் என்று ஐயுற்றுக் காதல் வயப்பட்டு நிற்கும் காட்சியைச் சேக்கிழார் சுவாமிகள் அழகாக எடுத்துரைக்கின்றார். இவையாவும் செம்மொழியாம் தமிழ் மொழியின் சிறப்பன்றோ.

பிற்காலத்தமிழ்

இவ்வாறு சங்ககாலம், சங்கமருவிய காலம் பல்லவர் சோழர் காலங்களில் செம்மொழின் சிறப்பைக் கண்ட நாம் பல்லவர்காலப் பக்தி இலக்கியங்களில் ஆத்மீக சிந்தனையையும் பக்தி வைராக் கியத்தையும் பார்க்கலாம். மேலும் பிற் காலத்தில் எழுந்த பிள்ளைத் தமிழ், உலா, பரணி, கோவை போன்ற சிற்றிலக்கியங் களும் தமிழ்மொழிக்கு வளம் சேர்த்தன. இதனாலே தான் பாரதியார் "நாமமது தமிழர் என கொண்டிங்கு வாழ்வதிலும் தேமதுர தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்யதல் வேண்டும்" என்றார். ஆதலின் தமிழராகப் பிறந்த நாம் தமிழ் மொழியின் சிறப்பை உலகமெல்லாம் பரவும் வகை செய்வோமாக. யாம்பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம். வாழ்க! செம்மொழியாம் தமிழ்மொழி.

நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்

செந்தமிழர் நலம் பாடும் பைந்தமிழ்க் காப்பியமே நெஞ்சை அள்ளும் சிலப்பதி காரம் மூவேந்தர் வள நாட்டுச் சிறப்புக் கூறும் கலைப் படைப்பு பழந்தமிழர் பண் பாட்டின் ஒப்பற்ற இலக்கியம், தமிழிலே எழுந்த முதல் காப்பியம். இதனை தமிழ் அன்னைக்கு அணிவித்து அழகு பார்த்தவர் இளங்கோவடிகள். சோழ நாட்டிலே பிறந்து பாண்டி நாட்டிலே வழக்குரைத்து, சேர நாட்டிலே தெய்வமாகிய கண்ணகி யின் கதை கூறுவது. இதற்கு இணையான நாடக நூல் முன்னும் பின்னும் இல்லை என்றே கூறலாம். வேண்டிய இடங்களிலே அறக்கருத்துக்கள் நிலை நிறுத்தியும் தமிழரின் கலை வளர்ச்சி காட்டியும், பண் பாட்டுச் சிறப்பு கூறியும், நீதியை நிலை நாட்டியும் நெஞ்சை அள்ளுகிறது சிலப் பதிகாரம்.

முத்தமிழ்க் காப்பியம்

இயல், இசை, நாடக வடிவில் அமைந்தது. சிலப்பதிகாரம் வெண்பா, அகவற்பா, வஞ்சிப்பா, கலிப்பா என்பன இயற்றமிழையும் ஆற்றுவரி, ஊசல்வரி, கந்துகவரி என்பன இசைத்தமிழையும், உரையிடையிட்ட பாட்டு நாடகத் தமிழை யும் உணர்த்துவன. சங்கம் மருவிய காலத்து நூலான சிலப்பதிகாரம் தமிழர்களின் தனிப் பெருஞ் செல்வம், நடனக் கலையின் சிறப்பை மாதவியினூடாக இளங்கோவடி கள் தமிழுலகிற்குத் தந்துள்ளார். மாதவி "அரங்கேறி ஆடினாள்" என்பதன் மூலம் நடனக் கலைபற்றியறியச் சிலப்பதிகாரம் ஒன்றே போதுமானது. ஆடல் வகைக் கூத்துக்களை மாதவி ஆடியுள்ளாள். அரங் கேற்றுக் காதையில் கானல்வரி அந்தி மாலைச் சிறப்பு, இசையுங்கூத்தும், ஆட லும் பாடலும், ஊடலும் என இன்ப விளை யாட்டுக்கள் கூறப்படுகின்றன. பாண்டரங் கம், அல்வியம், மல், துடி, குடை, குடம், பேடி, மரக்கால், பாவை, கடையம் எனப் பதினொரு வகைக் கூத்துக்களையும் செப் பனிட்டுத் தந்துள்ள காப்பியம் சிலப்பதி காரமாகும். இத்தகைய முத்தமிழ் காப்பியச் சிறப்புக்கள் கூறிமுடியாதவை. நெஞ்சை அள்ளுந் திறனுடைய சிலப்பதிகாரம் தமிழ் மக்களது கலைப் பொக்கிசமாகும்.

குடிமக்கள் காப்பியம்

சிலப்பதிகாரம் ஒரு குடிமக்கள் காப் பியம். முடி மக்கள் வாழ்வில் கண்ட சிறப்பு குடிமக்கள் வாழ்விலும் தொனிக்கிறது. காதலும், தூதும், வீரமும் அழுகையும் பெண்மையும், திண்மையும், சிறப்புக்கள் எல்லாம் இனிப்பது சிலப்பதிகாரம். சோழ வளவ நாட்டிலே மாபெரும் வணிகர் குடி யிலே மாநாயகன் எனும் வணிகப் பெரு மகன் மகளே கண்ணகி. இவளுக்கு அவ்வூர் பெரு வணிகர் குல திலகம் மாசத்துவான் மகன் கோவலனை மணம் பேசி முடித்தனர். கோவலனும் கண்ணகியும் இன்புற்று வாழ்ந்து வருகின்றனர். ஊழ்வயத்தால் கருத்தொருமித்த காதலர் வாழ்வு கசந்தது. காவிரி நாட்டின் கலையரசி மாதவியின் பச்சை மாலையைக் கோவலன் விலை கொடுத்து வாங்கினான். மாலையுடன் மாதவி வீடு சென்றான்.

கோவலன் மாதவியோடு நீங்கா துறைந்தான். கற்பின் செல்வி கண்ணகியை மறந்தான். இதன் பயனாக முதியோர்

செல்வமெல்லாம் தொலைத்தான். செய் தொழில் மறந்தான். ஏழ்மை நிலையில் கண்ணகியை அடைந்தான். காற் சிலம்பு விற்கப் போனவன் கள்வனெனக் கொலை யுண்டான். இதனை அறிந்த கண்ணகி தன் கணவன் கள்வனல்லன் என்பதை உறுதி செய்யப் பாண்டியன் நெடுஞ்செழியன் சபை ஏறி வெற்றியும் கண்டாள். அறந்தவறிய அரசன் இறந்துபட்டான். மதுரை நகர் தீக் கிரை ஆனது. கண்ணகி மேற்கு வாயிலால் சென்றாள். சென்று மலை நாடு அடைந்து திருச் செங்குன்றம் என்னும் மலைமேல் ஏறி வேங்கை மரத்தின் கீழ் நிற்றலும் பதின் னான்காம் நாள் கோவலன் தெய்வ வடி வத்தோடு வரக் கண்டு களித்து அவனுடன் விமானத்தில் ஏறிச் சென்று கண்ணகி தெய்வமானாள்.

இவற்றை எல்லாம் பார்த்துக் கொண் டிருந்த வேடுவ மகளிரும், வேடவரும் அந்நாட்டரசனுக்கு உணர்த்தலும், சேர முனிவன் இளங்கோ காப்பியத்தை அழகாக எழுதித் தமிழுலகுக்கு அளித்தார். அரசர் குடும்பத்தில் பிறந்து அரச செல்வத்தில் வாழ்ந்த ஒருவர் இளங்கோ வடிகள். அவர் சாதாரண வணிகர் குடியிற் பிறந்த கோவல னைக் காப்பியத் தலைவனாகவும், கண்ணகி யைத் தலைவியாகவும் கொண்டு காப்பியம் செய்து இருக்கிறார் என்றால் வரலாற்றிலே ஒரு புரட்சியைக் கொண்டு வந்தது என்றே கூறலாம். சேர, சோழ, பாண்டிய மன்னர் களின் போர்களால் தமிழ்நாடு மூன்று கூறுகளாக்கப்பட்டது. அவற்றை ஒன்று சேர்க்கும் இளங்கோ வடிகள் கண்ணகி பாண்டிய நாட்டில் வழக்குரைத்து சேர நாட்டிலே தெய்வமான தன்மையைச் சித்தரிக்கின்றனர்.

காப்பிய இலக்கணம் காட்டும் சிலப்பதிகாரம்

முடி மக்கள் வாழ்வில் காணும் சிறப்புக்களையும் குடி மக்கள் வாழ்விலும் காட்டி காப்பிய நயம் இனிக்கச் செய்கிறார் இளங்கோவடிகள். காதலும், வீரமும் அழுகையும் காப்பியத்தில் பெருஞ்சுவை கள் ஆகும். மாதவியும் கோவலனும் சேர்ந்த காதலின்பச் சுவை காட்டப்படுகிறது. கண வனை இழந்த கண்ணகி மூலம் அழுகைச் சுவை தெரிகிறது. சேரன் செங்குட்டுவன் வீரத்தையும், கோவலன் யானையில் இருந்து முதியவனைக் காப்பாற்றும் வீரத்தையும் தெளிவாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது. பொதுவாக நாடு, நகரம், ஆறு, காதல், வீரம், தூது எனப் பல்வேறு அம்சங்களுடன் பெருங்காப்பியமாகச் சிலப்பதிகாரம் அமைகிறது. சிலம்பை முக்கியப்படுத்துவதால் சிலப்பதிகாரம் என்ற பெயர் பெற்றது.

வீட்டை விட்டு வராத பெண் கண்ணகி. வீறு கொண்டு பாண்டியன், சபையில் நீதி கேட்கிறாள். தாசி குலத்து மாதவி கற்புக் கரசியாகக் காட்டப்படுகிறாள். கண்ணகி தெய்வமாகும் தன்மை அடைகிறாள். சேரன் செங்குட்டுவன் இமயத்தில் கல் லெடுத்து கோயில் கட்டுகிறான். சிலப்பதி காரம் புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக்காண்டம் என்னும் பிரிவுகளைக் உடையது. கோவலன் மாதவி காதல் வாழ்வு புகார்காண்டத்திலும், கணவனை இழந்த கண்ணகி வழக்குரைத்தல் மதுரைக் காண்டத்திலும், கண்ணகி கோயில் கட்ட வடவரசர் கனகவிசயர் தலை மீது கல் எடுத்து வரப்பட்ட வீரம் வஞ்சிக் காண்டத்திலும் கூறப்படுகிறது.

ஒப்பற்ற தலைவனும் தலைவியும் (இன்பச்சுவை)

கண்ணகிக்கும் கோவலனுக்கும் திரு மணம் முடிந்தது. இருவரும் நிலா முற்றத் தில் இன்பத்தில் மூழ்கி இருக்கிறார்கள். கோவலன் கண்ணகியைப் பார்த்து காதல் மொழி பேசுகிறான். அவளுடைய அழ கைப் பாராட்டுகிறான். அழகிய நெற்றி, வளைந்த புருவங்கள், துடியிடை, அழகிய கண்களை வியந்து பாராட்டியவன்.

'மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
அரும் பெறற்பாவாய் ஆருயிர் மருந்தே
பெருங்குடி வணிகர் பெருமட மகளே
மலையிடைப் பிறவா மணியே என்கோ
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ
யாழிடைப் பிறவா இசையே என்கோ' என

அலையிடை பிறவா அமுது, யாழி டைப் பிறவா இசை, பொன்னே, மணியே, முத்தே, கரும்பே, ஆருயிர் மருந்தே என்று பலபடப் பாராட்டுகின்றான். இருவரும் தனிக்குடித்தனம் நடத்துகின்றனர். பண் டைத் தமிழர் வாழ்வியலில் திருமணமான பெண்ணுங் கணவனும் தனிக்குடித்தனம் நடாத்தும் வழக்கம் இருந்தது. அவ்வாறே இருவரும் பெற்றோர் காட்டிய நெறியில் இல்லறம் நடாத்தி விருந்தினர்களையும் துறவிகளையும் வரவேற்று உபசரித்து வாழ்வில் இன்பங்கண்டனர். இதனை இளங்கோவடிகள்,

'வார் ஒலி கூந்தலை பேரியல் கிழத்தி
மறுப்பரும் கேண்மையொடு அறப்பரிசாரமும்
விருந்து புறத்தரும் பெருந்தண் வாழ்க்கையும்'

கொண்டு இல்லறம் சிறக்க வாழ்ந்தனர் என்று கூறுவார். இவ்வாறாகச் சில ஆண்டு கள் கழிந்தன.

மாதவியின் ஆடலில் மயங்கிய கோவலன்

மாதவி சித்திராபதியின் மகள் தேவ மகளான ஊர்வசியின் குலத்தைச் சேர்ந் தவள். பேரழகி ஆடலும் பாடலும் அழகும் என்ற மூன்றிலும் ஒன்றுங் குறைபடாது ஏழு ஆண்டுகள் நடனக் கலையைப் பயின்ற மாதவியின் கலைத்திறன் சோழ மன்னன் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டது. மன்னன் மனம் மகிழ்ந்து மாலை ஒன்றினை யும் தலைக்கோலையும் 1008 கழஞ்சு பொன்னையும் பரிசாகக் கொடுத்தான். சித்திராபதி அவள் கையில் மாலையை வாங்கிக் கூனியின் கையில் கொடுத்து இளைஞர் நடமாடுந் தெருவில் நிறுத்தி மாலை வாங்குவார் யாரோ அவன் மாதவி யைக் கணவனாக அடைவார் என்று கூறச் செய்தாள். இதனையறிந்த கோவலன் பின் முன் யோசியாது மாலையை வாங்கினான். கண்ணகியை மறந்தான். மாதவியுடன் பிரிய முடியாதிருந்தான்.

துன்பச்சுவை

கண்ணகி துன்பமே வடிவமானாள். அலையிடைப் பிறவா அமுது யாழிடைப் பிறவா இசை, பொன்னே, மணியே என்று பாராட்டப்பட்ட கண்ணகி துயரக் கடலில் வீசி எறியப்பட்டாள். அன்று முதல் அவள் சீறடிகள் சிலம்பை அணியவில்லை. நெற்றி யில் குங்குமமும் இடவில்லை, கண்ணுக்கு மை தீட்டவில்லை, குழலுக்குப்பூச் சூட்ட வில்லை. அவளது துயரம் கூறவும் வேண்டுமா?

'அம் செம் சீறடி அணி சலம்பு ஒழிய
மென்துகில் அல்குல் மேகலை நீங்க
கொடுங்குழை துறந்த வடிந்து வீழ் காதினள்
திங்கள் வாண்முகம் அஞ்சனம் மறப்ப
பவள வாள்நுதல் திலகம் இழப்ப
தவள வாள்நகை கோவலனிழப்ப
மையிருங்கூந்தல் நெய்யணி மறப்ப
கையறு நெஞ்சத்துக் கண்ணகி'

என்று கண்ணகியின் துன்ப நிலை யைக் காட்டுகிறார் இளங்கோ. மாதவி யுடன் கூடி மகிழ்கிறான் கோவலன் கண்ணகியின் நிலை இவ்வாறு இருந்தது.

இந்திர விழா

தமிழ் மக்களின் பழம் பெருந்தேசிய விழா இந்திரவிழா. சித்திரை மாதச் சித்திரை தொடங்கி 28 நாட்கள் கொண் டாடப்படும் விழா இந்திரனுக்கு எடுக்கப் படும் பெருவிழா. பூம்புகாரில் இந்திரவிழா வைக் காண கோவலனும் மாதவியும் சென் றனர். வந்திருந்த மக்கட் கூட்டத்தைக் கண்டு களித்து அப்பால் சென்றவர்கள் ஒரு புன்னை மர நிழலில் புது மணற் பரப்பில் இருந்தனர். மாதவி வசந்த மாலையிடம் யாழை வாங்கி, வணங்கிக் கோவலனிடம் நீட்டினாள். கோவலன் அதனை வாங்கி அகப் பொருட்சுவை அமைந்த ஆற்றுப் பாட்டும், கடற்கரைப் பாட்டும் பாடி னான். கானல் வரிப் பாடல்களைக் கேட்ட மாதவி மனம் தவித்தாள்.

யாழிசை மேல் ஊழ்வினை உருத்தது

'திங்கள் மாலை வெண்குடையான்
சென்னி செங்கோல்து வோச்சி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மங்கை மாதர் பெருங்கற்பென்
றறிந்தேன் வாழி காவேரி'

எனக்கோவலன் பாடுதலைக் கேட்டு மாதவி கோவலனுக்கு மற்றுமோர் குறிப்பு உண்டு என் மனத்திரிந்தாள். தன்னிலை மயங்கிய மாதவி தானும் காதலில் மகிழ்ந் தாள் போல் தனக்குமோர் குறிப்புண்டு என்னுங் கருத்துப்பட யாழை வாங்கி மீட்டினாள்.

(ஊடல்)

'மருங்கு வண்டு சிறந்தார்ப்ப
மணிப் பூவாடை அது போர்த்துக்
கருங்கயற் கண் விழித்தொல்கி
நடந்தாய் வாழி காவேரி
கருங்கயற் கண் விழித் தொல்கி
நடந்தவெல்லாம் நின் கணவன்
திருந்து செங்கோல் வளையாமை
அறிந்தேன் வாழி காவேரி'

காவிரியே வண்டொலிக்க மணிப் பூஞ்சோலையணிந்து மீன் விழி காட்டி பெண்மையால் நீயொதுங்கி நடக்கின்ற காரணம் நின் கணவன் செங்கோல் கோடாமைதான் என்றும் காவிரியே சோலையில் மயில்கள் ஆட, குயில் பாட, மாலைகள் அசைய நீ நடந்ததன் காரணம் பகைவரை வென்ற நின் கணவனின் வேலின் திறன் தான் என்று மாதவி பாடிய பாடல் கள் கோவலன் பிரிவுக்கு வழி வகுத்தது. கோவலன் தன்னந்தனியனாய் மாதவியை விட்டு நீங்கினான்.

கோவலன் மாதவிக்கிடையே ஏற் பட்ட கருத்து வேறுபாடு பிரிவில் முடிந் தது. நாயகன் வரவிற்காகத் தவங்கிடந்த கண்ணகி ஏமாற்றப்படவில்லை. கோவலன் கண்ணகியிடம் வருகின்றான். கண்ணகி

யின் வாடிய மேனி வருத்தங் கண்டான். உள்ளம் நொந்தான்.

'சலம்புணர் கொள்கைச் சலதியொடு ஆடிக
குலம் தரு வான் பொருட் குன்றம் தொலைத்த
இலம்பாடு நாணுந்தரும் எனக்கு'

என்றான் கோவலன்.

வஞ்சகமும் பொய்யும் வடிவு கொண்ட மாயக்காறியொடு உறவு கொண்டு நம் குலத்தார் தேடித்தந்த மலை போலும் பொருட்குவையைத் தொலைத்தேன். வறுமையுற்றேன். என் நிலை வெட்கம் தருவது என்றான். அச்சமயம் கண்ணகி கோபிக்கவில்லை; கடுமையான வார்த்தை களைக் கூறவில்லை. மாதவிக்குக் கொடுக் கப் பணமில்லாமல் கணவன் தவிக்கின்றான் என்று நினைத்து இப்பொழுது என்னிடம் எஞ்சியிருப்பவை காற்சிலம்புகளே அவற் றையும் பெற்றுக் கொள்ளுங்கள் எனப் புன்னகையுடன்,

'நகைமுகம் காட்டி
சிலம்புள கொண்மின்' என்றாள்.

இதனைக் கேட்ட கோவலன், கண்ணகி யைப் பார்த்து சேயிழையே நீதரும் சிலம்பு களை முதலாகக் கொண்டு வணிகம் புரிந்து தொலைந்த பொருளை எல்லாம் மீண்டுந் திரட்டுவேன். இதன் பொருட்டு மதுரைக் குப் போகத்துணிந்தேன். உடன் எழுக என்னுடன் என்றான். பிரிந்த காதலர் இன்பக் களிப்பில் அயராமல் மதுரை மாநகர் நோக்கிச் சென்றனர். காடும், மலையும், முள்ளும் கடந்து சென்று மாதவி வீட்டில் தங்கினர்.

விருந்தோம்பல் சிறப்பு

மாதவி வீட்டில் தங்கிய கண்ணகி, கோவலன் உண்பதற்குச் சமையல் செய் தாள். சமையல் முடிந்து சாப்பிடுவதற்கு கோவலனை அழைத்து ஆசனமிடுகிறாள். ஆசனத்தில் அமர்கின்றான் கோவலன். இதனை அழகாக "கைவினை மகடூஉ கவின் பெறப் புனைந்த செய்வினைத் தவிசின் செல்வனிருந்த பின்" என அழகாக விருந்து உபசாரப் பண்பு கூறப்படுகின்றது. மேலும் ஒரு தமிழ்ப் பெண் தன் கணவனுக்கு எவ்வாறு உணவு பரிமாற வேண்டுமென் பதைக் கற்பின் செல்வி கண்ணகி மூலம் இளங்கோ தெளிவுபடுத்துகின்றார். குருத்து வாழையிலையை விரித்து வைத்துத் தண்ணீர் தெளித்து அமுது படைத்து உண்பிக்கும் விதத்தை

'மண்ணக மடந்தை மயக்கம் தெளிவிப்பதைப்
போற்
தண்ணீர் தெளித்துத் தன்கையாற் தடவி
குமரி வாழையின் குருத்தகம் விரித்து
அமுத முண்க அடிகளீங்கென'

உணவு பரிமாறினாள் கண்ணகி.

கோவலன் உள்ளத்தில் குற்ற உணர்வு தட்டுகின்றது. உள்ளம் நெகிழ்கிறது. கோவலன் பேச்சு மன்னிப்புக் கேட்பது போல் அமைகிறது. பெற்றோர் தன் பிரி வால் என்ன துன்பம் எய்தினரோ அவர் கட்குச் செய்யும் பணிவிடைகளை யான் செய்யத் தவறி விட்டேன். உனக்கும் தீமை செய்தேன். ஊரை விட்டுப்புறப்பட்டதே இழுக்கு. எழுக என்றேன். எழுந்தாய் என்று பரிந்து பேசினான். இதுவரை பேசாதிருந்த கண்ணகிக்குப் பேச வாய்ப்புக் கிடைத்தது. வாய்பைப் பெற்றுக் கொண்ட கண்ணகி வாயிலாக அடிகள் விருந்தோம்பற் சிறப் பையும் கூறிவிடுகிறார்.

நீங்கள் என்னை விட்டுப் பிரிந்ததால் செய்ய வேண்டிய இல்லற தர்மங்களை இழந்தேன் என்கிறாள்.

'அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலும்

துறவோர்க் கெதிர்தலும் தொல்வோர் சிறப்பின்
விருந் தெதிர் கோடலும் இழந்தென்னை'

என்று கூறிப் புரிய வைக்கிறாள். கணவன் மனைவி இருவரும் இல்லற தர்மங்களைச் செய்தல் வேண்டும் என்பதை யும் கோவலன் குற்றத்தைப் பெரிதுபடுத் தாது குற்றத்தின் விளைவைச் சுட்டிக் காட்டுகிற பண்பு பாராட்டப்படவேண் டியது. வள்ளுவர் கூறும் இல்லறத்தார் கடமைகள் துறந்தார்க்கும் துவ்வாதவர்க் கும் இறந்தார்க்கும் இல்வாழ்வான் என் பான் துணை என்ற கருத்தும் நினைவிற் கொள்ளலாம். விருந்து உபசாரம் இல்லறத் தார் கடமைகளில் ஒரு அங்கமாகும். எனவே ஒப்பற்ற தலைவனும் தலைவியு மாக வாழ்ந்த கோவலனுங் கண்ணகியும் விருந்தோம்பற் பணியில் இடையீடு சில காலம் ஏற்பட்டதை இங்கு அழகாக விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை என கண்ணகியின் கூற்றிலிருந்து அறிய லாம். சிலப்பதிகாரத்திலும் அதற்கு முன்பும் பழந்தமிழர் விருந்தோம்பற் பண் புடையராக இருந்தமையும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

கோவலன் கண்ணகியின் நற்பண்பு களைப் பாராட்டி சிலம்பையும் பெற்றுக் கொண்டு மதுரைக்குப் போய் வர வழி அனுப்புமாறு கேட்கிறான்.

'நாணமும் மடனும் நல்லோரேத்தும்
பேணிய கற்பும் பெருந்துணையாக
என்னொடு போந்திங்கு என்தையர் களைந்து
பொன்னே மணியே புனைபூங்கோதாய்
நாணின் பாவாய் நீணில விளக்கே
கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி
சீறடிச் சிலம்பு கொண்டு யான் போய்
மாறி வருவான்'

என்கிறான் சீறடிச் சிலம்பு கொண்டு யான் போய் விற்றுப் பணத்துடன் வரு வேன். என்னாமல் மாறிவருவான் என்று கூறுவதன் மூலம் ஊழ்வினைக்கு உற்பாத மும் கூறினார்.

ஊழ்வினை உருத்தல்

தமிழ் மக்களிடத்து ஊழ்பற்றிய நம்பிக்கை உண்டு. கோவலனும் மாதவியும் இந்திர விழாவில் கடற் கரையில் பாடிய கானல் வரிப்பாடல்களே ஊழ்வினையாய் அமைந்தது. இருவரும் பிறரொருவர் மேல் காதல் கொண்டதாகத் தப்புக் கணக்குப் போட்டுப் பாடிய பாடல்கள் "திங்கள் மாலை" என்று தொடர்ந்த பாடல்களும் மணிப்பூ வாடை அது போர்த்தி என்று தொடங்கிய பாடல்களும் இருவரது பிரிவையும் உண்டாக்கியது.

மாதவியைப் பிரிந்த கோவலன் கண்ணகியிடம் சென்று தன் குற்ற உணர் வைப் பரிந்து கூறி கண்ணகி கொடுத்த காற் சிலம்பையுங் கொண்டு மதுரை மாநகர்க் குப் புறப்பட்டான். மதுரைத் தெருவிலே ஏனைய பொற் கொல்லரைச் சந்திக்காது நூற்றுவர் பின் தொடர வந்த பொற்கொல் லரைச் சந்திக்கின்றான். விற்பதற்குத் தான் கொண்டு வந்த சிலம்பைக் காட்டுகின்றான் கோவலன். ஏற்கனவே பாண்டிமாதேவி யின் சிலம்பைத் திருடி அதனை மறைக்க வழிபார்த்திருந்த அக்கள்வன் சதி செய்யத் துணிந்து கோவலனை இங்கேயே இரும் என்று கூறி அரண்மனைக்குச் சென்று, சிலம்பு திருடிய கள்வன் என்னிடத்தில் இருக்கின்றான் என்று அரசனுக்குக் கூற ஆராயாமல் அரசனும் "கள்வனைக் கொன்று சிலம்பினைக் கொணர்க" என் றான். கோவலன் முடிவு காலம் எய்தினான்.

அவலச்சுவை

செய்தி அறிந்த கண்ணகி பொங்கி எழுந்தாள். கவலை மேலீட்டால் மண் மிசை வீழ்ந்தாள். செங்கண் சிவப்ப அழுதாள். ஆருயிர் தலைவரே யாண் டுள்ளீர் என்று கூவி மயக்கமுற்று வீழ்ந் தாள். காதலர்க்காண்கிலேன் ஊதுலை தோர்க்க உயிர்க்குமென்னெஞ்சு, அன்ப னைக் காணாது அலவு மென்னஞ்சு, தஞ் சமோ தோழி, பெண்டிருமுண்டு கொல் பெண்டிருமுண்டுகொல், கொண்ட கொழு நற் குறுகுறை தாங்குறூ உம் பெண்டிரு முண்டு கொல்" என்றாள்.

'சான்றோரு முண்டு கொல்
சான்றோரு முண்டு கொல் என்றூ'

அலறி அழுதேங்கி நிலத்தில் வீழ்ந்து கணவரை இழந்த மற்றைய பெண்டிர் போல் மனமிடிந்து மாழ்வேனோ என்றாள். எறித்து வரும் சூரியனைப் பார்த்தழுதாள்.

'காய் கதிர்ச் செல்வனே
என் கணவன் கள்வனோ' என்றாள்.

மாதே "நின் கணவன் கள்வனல்லன் - அவனைக் கள்வனென்ற இவ்வூர் தீக்கிரை யாகும்" என்றது ஒரு குரல். மதுரை மாநகர் வீதியெல்லாம் கண்ணகியின் **ஆவேசப்** புரட்சிக் குரல் கேட்டது. பத்தினிப் பெண்டிரே கேளுங்கள் என் கணவன் கள்வ னல்லன். இந்த வாய்மையை உலகம் அறியவும், இறந்த என் கணவன் உயிரோ டெழவும், காதலர் வாயால் நல்லுரை கேட்பேனெனக் கூறிச் சென்றாள். அவல உணர்ச்சியால் விம்மி விம்மி அழுதாள். கோவலன் கொலையுண்ட இடம் சென் றாள். அவன் அகம் தழுவி அழுத போது கோவலன் எழுந்து கண்ணீரைத் துடைத்து நீ இங்கிருக்க எனக் கூறி வானுலகம் புக்கான்.

கண்ணகி பாண்டிய மன்னனிடம் நீதி கேட்பேன் என்று புறப்படுகின்றாள். மதுரை மாநகர் நோக்கி அவள் சென்ற காட்சி உள்ளத்தை உருக்குவதாகும்.

'மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்
கையிற் தனிச் சிலம்பும் கொண்டேகி' என்றும் ஆவி குடிபோன அவ்வடிவம் என்றும் சித்தரிக்கப்படுகின்றது.

வழக்குரைத்தல்

கண்ணகி நீதி கேட்பேன் என்று பாண்டியன் அரண்மனை வாயிலை அடைந்தாள். வாயில் காப்போனைப் பார்த் துக் கூறுவாள்.

'வாயிலோயே வாயிலோயே
அறநெறி பிழைத்தோன் வாயிலோயே

கணவனை இழந்தாள் கடையகந்தாள்' என உன் மன்னனிடம் கூறுவாய் என்கிறாள். கண்ணகி மன்னன் முன் அழைக்கப் படுகிறாள். கண்ணகியின் கோலத்தைக் கண்ட மன்னன் "நீர் வார் கண்ணை என் முன் வந்தாய் யாரையோ மடக்கொடி" என்று வினாவலும் கண்ணகி மன்னனைப் பார்த்து தான் பிறந்த சோழ நாட்டின் சிறப்பையும் அறந்தவறா ஆட்சியையும் கூறுகிறாள். "புள்ளுறு துயர்தீர்த சிபியும் ஆவுறு துயர் நீக்க மகனை ஆழியில் முறை செய்த மனுவும் அரசாண்ட புகார் என்பதி. உன்னால் அறந்தவறிக் கொலையுண்ட கோவலன் மனைவி கண்ணகி என் பெயர் என்றாள். அதற்கு மன்னன் "கள்வனைக் கோறல் கொடுங்கோலன்று" என்றான். கண்ணகி விட்டபாடில்லை வஞ்சகமற்ற குடிமகன் ஒருவனுக்கு அறந் தவறிய மன்னனால் ஏற்பட்ட பழிச் சொல்லைத் துடைக்கத் துணிந்தாள். "என் காற் சிலம்பு விற்க வந்த கணவன் கள்வனோ என்கிறாள். மன்னன் என் தேவியின் காற்சிலம்பு கவர்ந்தவன் உன் கணவன் என்கிறான். கண்ணகி ஆவேசத்துடன் கூறினாள்.

'காற்சிலம்பெ[illegible]றந்தவள் கண்ணகி
மாணிக்கமே[illegible] சிலம்புடை அரீ'
என்று கூறலும்
மன்னன் 'யாமுடைச் சிலம்பு முத்திடை அரியே'

என்று கூறித் தேவியின் சிலம்பைக் கொண்டுவரச் செய்கிறான். கண்ணகி தன் தன் காற்சிலம்பு ஒன்றை வீசியெறிந்தாள். மாணிக்கப் பரல்கள் தெறித்தன. மன்னன் தன் தவறை உணர்ந்தான்.

'பொன் செய் கொல்லன் தன் சொற் கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்
மன்பதை காக்கும் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது கெடுக என்னாயுள்' என

மயங்கி விழுந்து உயிர் துறந்தான். பாண்டி-மாதேவி உயிர் நீத்தாள். ஊழ்வினையால் வளைந்த செங்கோலை உயிரைக் கொடுத்து செங்கோலாக்கி நிமிர்த்தி விட்டான் பாண்டிய மன்னன்.

கண்ணகியின் ஆவேசந்தீராத நிலையில் வஞ்சினம் கூறுவாள் யானுமோர் பத்தினியே யாமாகில் ஒட்டேன் அரசோடொழிப்பேன் மதுரையையும் என்பட்டிமையும் காண்குறுவாய் என்று கூறி கண்ணகி தீக்கடவுளை - அழைத்துப் பார்ப்பார் . பசு, பத்தினி, பெண்டிர், மூத்தோர், குழவி எனுமிவரைவிட்டுத் தீத்திறத்தோர் பக்கம் செல் என்று ஏவவும் மதுரைமாநகர் தீக்கிரையானது. கண்ணகி மேற்கு வாயிலால் சென்றாள்.

கண்ணகி தெய்வமானாள்

கணவனோடு கிழக்கு வாயிலால் வந்த கண்ணகி மேற்கு வாயிலால் போகின்றாள். கண்ணகியின் துயர் நிலை கண்ட மதுராபதித் தெய்வம் அவள் கேட்கும் படி பேசியது. மதுரை மாநகர் அழல்வாய்ப்படுதலும், கணவன் மாண்டதும் பழம் வினைப் பயனே; ஆறுக சினம், தேறுக நெஞ்சம் அம்மையே உன் கணவன் இற்றைக்குப் பதின்னான்காம் நாள் கழிந்த பின் தெய்வ வடிவில் காண்பாய் என்று கூறிச் சென்றது. இவற்றையெல்லாம் கேட்ட கண்ணகி தன்னந்தனியவளாய் மேற்றிசை வாயிலால் சென்றாள். இரவு பகலாக நடந்தாள். இறுதியாக மலையில் ஏறி வேங்கை மர நிழலில் நின்றாள். பதினான்காம் நாள் தெய்வ விமானத்தில் கோவலன் வரக் கண்டு அவனுடன் விண்ணகம் சென்றாள். தேவர்கள் மலர் மாரி பொழிந்தனர். இதனைக் கண்ட வேடர் கைகூப்பித் தொழுதனர். மர நிழலில் நின்ற பத்தினியைத் தெய்வமாக ஏற்றுக் கொள்ளுங்கள் கோயிலமையுங்கள் என்று கூறினர்.

இவற்றையெல்லாம் சேர மன்னன் அறிந்தான். கற்புக்கரசி கண்ணகிக்கு வீர பத்தினிக்கு கோயில் எடுத்தான். இமயத்தில் கல்லெடுத்து கங்கையில் நீராட்டி கோயில் அமைத்தான். கண்ணகி வழி பாட்டால் அருள் பெருகியது. இவ்வழி பாடு இலங்கையிலும் பல இடங்களிலும் பரவியது. ஊழ்வினை வந்துருத்த செய்தியும், அரசியல் பிழைத்தோர்க்கு அறங் கூற்றானதும், உரைசால் பத்தினிக்குத் தெய்வம் போற்றலும் கூறிச் சிலப்பதிகாரம் விளங்குகின்றது. வேண்டிய இடங்களில் சிலம்புச் செல்வியின் தெய்வத் தன்மையைப் புலவர் கூறத் தவறவில்லை.

'கோங்கச் செல்வி குடமலையாட்டி
தேன் தமிழ்ப்பாவை செய்தவக் கொழுந்து
ஒரு மாமணியாய் உலகில் தோன்றிய திருமாமணி'
எனப் போற்றப்படுகிறாள் கண்ணகி.

"பள்ளு" ஒரு கிராமிய நடனம்

கிராமிய கதைகளின் தனித்துவம்

பள்ளுப் பிரபந்தங்கள் சிற்றிலக்கிய வகையைச் சேர்ந்தவை. கிராமிய அல்லது ஒரு பிரதேசக் கலையைப், பாரம்பரியத்தை இங்கே காணலாம். கிராமியக் கலைகள் சாஸ்திரியக் கலைக்கு ஆதாரமானவை. இயற்கை எழிலும், கற்பனை வளமும் உள்ளவை. ஒரு பிரதேச மக்களின் பண் பாட்டு விழுமியங்களைக் கிராமிய நடனம் அல்லது கிராமியக் கலைகளினூடு அறிய லாம். மக்களின் வாழ்வியல், தொழில் நடத்தை, கலாசாரம், மொழி யாவும் அப் பிரதேச மண் வாசனையாகும். பாரம்பரியக் கலையாக இவை பேணிப் பாதுகாத்து வரப் படுகின்றன. இக்கிராமிய நடனங்கள் பிரதேச ரீதியாக வேறுபட்டுக் காணப் படும். இக்கலை காலத்திற்குக் காலம் மாறு தல்களை ஏற்றுக்கொண்டாலும் தன் தனித் துவத்தை இழந்து விடுவதில்லை. சாஸ் திரியக் நடனக் கலை கிராமியக் கலைகளில் இருந்தே தோற்றம் பெற்றன. கிராமத்திற் குரிய மரபு வழி உரிமை, கலைப்பாரம் பரியம் மிளிருவன. செம்மைப்படுத்தப் படாதவை கிராமியக் கலைகள்.

கிராமியக் கலைகள்

"வடவேங்கடம் தென்குமரியா யிடைத் தமிழ் கூறும் நல்லுலகில் மக்கள் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்து..." காணப்படுவது. இக்கிராமியக் கலை பாரதத்தில் மட்டுமல்ல இலங்கை போன்ற ஏனைய நாடுகளிலும் கிராமியக் கலைகள் வனப்புற்று உள்ளன. இவற்றை வைத்து நோக்கும்போது வெறிகொண்டு ஆடுதல், சமய பக்தி கொண்டு ஆடுதல், கரகம், காவடி, கும்மி, கோலாட்டம், குரவை, ஒயிலாட்டம் முதலியவையும் அடங்கும். மழை வேண்டியும், நோய்களைத் தடுத்தல் வேண்டியும், விழாக் காலங்களிலும், கங்கை, யமுனை அம்மன் முதலிய கிராம தேவதைகளை மகிழ்விக்கவும் ஆடுதல் யாவும் காணலாம். இவ்வாறு ஆடும் பொழுது நேர்த்தி வைத்தல், கடா வெட்டல், சேவல் பலியிடல், அம்மனுக்கு கள்ளுக்குடம் வைத்து வழிபடல், முளைப் பாலிகை வைத்து ஆடல் முதலியவற்றைக் கிராமிய நடனங்களில் காணலாம். இத் தகைய கிராமிய நடன அம்சங்கள் யாவும் முக்கூடற்பள்ளில் காணப்படுகின்றமை யின் இது ஒரு கிராமிய நடனம் எனக் கூற முடியும்.

முக்கூடற்பள்ளு என்பது

இப் பள்ளுப் பிரபந்தமானது வயல் களிலே வேலை செய்யும் உழவர்களையும் உழத்தியரையும் நாயக, நாயகியராகக் கொண்டு கிராமப்புற வாழ்க்கை சித்திரிக் கப்படுகிறது. பள்ளர் என்ற சாதியினரே குறிப்பிடப்படுகின்றனர். பள்ளர் - உழவர் என்று கொள்ளலாம்.

மேலும் முக்கூடற் பள்ளு என்பதில் முக்கூடல் என்பது மூன்று நதிகள் கூடு மிடம் எனப்படும்.

பொருனையாறும், சிற்றாறும், கோ தண்ட இராம ஆறும் கூடுமிடமே குறிப் பிடப்பட்டுள்ளது. இங்கே அமர்ந்திருக்கும்

முக்கூடல் ஊரையே முக்கூடற் பள்ளு விதந்துரை ன்றது. கண்டோர் மயங்கும் பேரழகரும், காத்தற் கடவுளுமாகிய திரு மால் முக்கூடல் அழகர் என்னுந் திருநாமத் துடன் கோயில் கொண்டிருக்கிறார். பொருனை நதிக்கு வடகரையிலும், தென் கரையிலும் உள்ளவர்கள் வணங்கிப் பயன் பெறுமாறு இப்பள்ளுப் பாடப்பட்டது.

மருதநிலப் பண்பு கூறும் முக்கூடற்பள்ளு

தமிழ் நாட்டிலுள்ள குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், (பாலை) என்ற நானிலங்களுக்கும் அவற்றிற்குரிய ஒழுக்கங் களையும் காண முடிகிறது. ஆயினும் மருத நிலப் பண்பையே முக்கூடற் பள்ளு விதந்து கூறுதலைக் காணலாம். அதாவது வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம், மருதத்திற் குரிய ஒழுக்கம் ஊடல், உழவர் உழத்தியர் வாழ்க்கை, காதற் பரத்தை முதலியன அழ காகச் சித்திரிக்கப்படுகின்றன. மூத்தபள்ளி தலைவி, இளைய பள்ளி காதற்பரத்தை, குடும்பன் தலைவன் இவர்களுடைய வாழ்க்கை முறை சித்திரிக்கப்படுகிறது. கிராமப்புற வாழ்க்கை, அங்கே அவர்கள் பயன்படுத்தும் மொழி - பேச்சு வழக்கில் தரப்படுகிறது. பண்ணையார் பெரு நிலச் சுவாந்தராகக் காட்டப்படுகிறார். அவரது பண்ணையிலே பள்ளர், பள்ளியர் வயல் வேலையில் ஈடுபடுகின்றனர், வரம்பு கட்டு தல் பட்டி அடைத்தல். (எருவிடல்) உழுதல் விதைத்தல், மழை வேண்டிப் பாடல், நாற்று நடல், பாதுகாத்தல், அருவி வெட்டல், சூடடித்தல், நெல்லளத்தல், தெய்வம் போற்றல் முதலியன நடைபெறு கின்றன. இவற்றையெல்லாம் சிந்துநடைக் கவிதையாகச் சந்தத்துடனும், தாளக் கட்டு டனும் கவிஞர் தந்துள்ளார். ஆட்டக் கூத்தின் முக்கிய அம்சங்கள் தாளமும் சந்தமுமே. இவற்றை இக்கிராமிய நடனப் பள்ளு மூலம் அறியலாம். மேலும் சமயச் சார்புடையதாக இம்முக்கூடற் பள்ளு அமைந்திருக்கிறது. பண்ணையார், வடிவழக் குடும்பன், மூத்த பள்ளி, இளைய பள்ளி, தோழி யாவரையும் வைத்து ஒரு கதையாக்கி, நாடகமாகவும் நடித்து மக்களைக் கவரச் செய்யலாம். கருத்தை நடித்து நாட்டிய நடனமாகவும் கலைஞர் களைக் கவரலாம். பாடல்கள் யாவும் வேண்டிய வேண்டிய இடங்களில் சந்தமும் தாளக் கட்டும் உடையனவாக உணர்ச்சி யைத் தூண்ட வல்லனவாக அமைந்திருக் கின்றன. இந்தக் கதை மூலம் மருத நில மக்கள் பெரும்பாலும் கிராமப் புற மக்களே என்பதும் அவர்களுடைய தொழில் உழவு என்பதும் அவர்களுடைய பொழுது போக்கு ஆடல், பாடல்களே என்பதும் ஆடு, மாடு மேய்த்தல், பால் எடுத்தல், திருமால், காவல் தெய்வம், அம்மனை வழிபடல் முதலியன. இவை யாவும் இப் பள்ளின் மூலம் அறியவுண்டு இரசனை யுள்ள பாடல்கள் சிலவற்றைப் பார்ப்போர் எல்லாப் பாடல்களும் சிந்து நடையில் அமைந்திருப்பது இன்னொரு சிறப்பாகும். இங்கே பள்ளர், பள்ளியர் என்று குறிப் பிடும் பொழுது சாதிப்பாகுபாடும் சற்றுக் காட்டப்படுகிறது. அதனைக் கவிஞர் பள்ளன் வாயிலாக வெளிப்படுத்து கின்றார்.

"தக்க சோறென் வெள்ளாண்மை
பள்ளா பள்ளா என்பர்"

தள்ளிப் போ என்று கூறுவர் உண்மை உணராதோர் என்கிறான் பள்ளன். வடகரை வளங்கூறுமிடத்து வசந்த கால

வரவினை அறிந்த மயில் களிப்பிலே **மேட்டின் மீது** ஏறி நின்று தன்கால்களைப் **பவிசுடன்** எடுத்து வைத்து, தோகையை விரித்து **வானத்தை** நிமிர்ந்து பார்த்து நடனம் ஆடத் தொடங்கியது.

வசந்த காலம் வந்துவிட்டதோ எனத் தன் குரல் எடுத்து கூவிக் கேட்டதாக நினைத்த மாமரத்தில் இருந்த பெட்டைக் குயில், மயிலின் ஆட்டத்தைக் கண்டு கூவும் தன்மையிழந்து நின்றது என்பதை அழகாக,

"மேடை ஏறித்தன் காலைப் பவுசு
விரித்த பீலி
மயிலெட்டிப் பார்க்கப்
பேடை மாங்குயில் வாய் கொண்டு உசாவப்
பிளந்த வாய்தனைப்
பேசாமல் மூட
கோடை போய்விட்ட சோபனங் கொண்டு
குளிர்ந்த கொண்டற்
குறிந்துளி போட
வாடையோடி வரக்களி சூரும்
வளமையா சூர்
வடகரை நாடே"

எனக் கவிதை அமைந்துள்ளது.

மேலும்,

"கறை படட்டுள்ளது வெண்கலைத் திங்கள்"
"சிறைபட்டுள்ளது விண்ணெழும்புள்ளு"
"குறைபட்டுள்ளது கம்மியரம்மி"

என்பன போன்ற கிராமத்து மொழி யிலே எதுகை மோனை ஒழுங்கிலே இசை படப் பல பாடல்கள் இங்கே காணக் கூடிய தாக உள்ளது. சித்திரா நதி வெள்ளம் நிலங்களை வளம்படுத்திச் செல்லும் காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது.

மழை வளம் வேண்டல்

திருமால் திருவடிகளை மறவாத பண்ணைக்கு அடிமைப்பட்ட பள்ளர், எல்லோருங் கூடி மழை வேண்டி முக்கூடல் அழகரை வேண்டித் தெய்வநிலை போற்றினர். மழைக்கறிகுறி வானத்தில் தோன்றியது. இதனைப் புலவர் அழகாகச் சிந்துநடையில் அட தாளத்தில் பாடி யுள்ளார். இப்பாடலைத் தனிப் பாடலாக வும் நடனத்துடன் பாடி ஆடி இன்புறலாம்.

"ஆற்றுவெள்ளம் நாளை வரத்
தோற்றுதே குறி - மலை
யள மின்னல் ஈழ மின்னல்
சூழ மின்னுதே
நேற்று மின்றுங் கொம்பு சுற்றிக்
காற்றடிக்குதே - கேணி
நீர்ப்படு சொறித்தவளை
கூப்பிடுகுதே
சேற்று நண்டு சேற்றில் வளை
ஏற்றடைக்குதே - மழை
தேடியொரு கோடி வானம்
பாடி ஆடுதே
போற்றி திருமாலழகர்
கேற்றமாம் பண்ணைச் - சேரி
பள்ளிப்பள்ளர் ஆடிப்பாடித்
துள்ளிக் கொள்வோமே"

என்னும் பாடல் மழை வரப் போகின்றது என்பதை அறிந்து தென் மேற் கிலுள்ள மலையாள மின்னலும் ஈழத்து மின்னலும் சூழவளைந்து மின்னிக் கொண் டிருக்க, நேற்றுமின்றும் மரக் கொம்புகள் சுற்றும்படி காற்றடிக்கிறது. நீரிலுள்ள சொறித்தவளை கூப்பிடுகிறது. நண்டுகள் தமது இருப்பிடங்களுள் மழை நீர் புகாத வாறு வளை வாயில்களைச் சேற்றினால்

அடைக்கின்றன. வானம்பாடிப் பறவைகள் ஆடிப்பாடி அங்குமிங்குமாகப் பறக்கின்றன. முக்கூடல் அழகருக்கு ஏற்றவாறான சேரிப் பள்ளர் மழையினை வரவேற்று ஆடிப் பாடித் துள்ளிக் கொள்வோமே என ஏனை யோரையும் ஆடிப்பாட அழைப்பது போல இப்பாடல் கிராமிய மொழியிலே கிராமப் புறக் கலை அழகாகப் பாடப்பட்டுள்ளது. கொம்பு, சுற்றி, சொறித்தவளை, கூப்பிடுகுதே, மலையாளம், ஈழம், மின்னல், சேற்றுநண்டு என்னும் பதங்கள் கிராமப் புறக் கலையை வெளிப்படுத்தி நிற்கின்றன.

மேலும் மழைவளம் சிறக்க வேண்டி மக்கள் எல்லாம் சேரியில் கூடி குரவை ஒலி ஓங்கத் தெய்வம் போற்றினர் என்பதை

"மாரிப் பொருட் டால் வரங்குறித்து
பள்ளரெல்லாம்
சேரிக் குரவை எழுத் தெய்வநிலை
போற்றினரே"

என்றும் அந்த வழிபாட்டில்,

"பொங்கலிட்டு தேங்காயும் கரும்பும்
பூலாவுடையாருக்கு - கொடுங்கள்
குங்குமத்தோடு சந்தனங் கலந்து - சாத்துமின்
"..... ஏழு செங்கடாயும்
வெட்டும்" என்றும்
"செஞ்சேவற் சாத்திரத்தாலே - பலியிடுமின்"
சாராயமும், கள்ளும் - குடத்தில்
வையும்"
"மழை பெய்ய அழகர் பேரை வாழ்த்தி எல்லோரும் வாரும்"

"பள்ளர் எல்லோரும்" என்ற பாடல் அடிகள் கிராமப்புற மக்களின் குரவை ஆடல், பாடல், தெய்வம் போற்றுதலை அறியலாம். எனவே முக்கூடற்பள்ளு ஒரு கிராமிய நடனம் என்பதில் ஐயமில்லை.

பராக்குக்கூறல்

முற்காலத்திலே, அரசர்களுக்கும், பண்ணைத்தலைவர்கட்கும், உயர்வு காரணமாக "பராக்குக்" கூறி வரவேற்பது வழக்கம். இங்கேயும் கவிஞர் மூத்த பள்ளி வாயிலாகப் பண்ணையாருக்குப் "பராக்கு" கூறி மகிழ வைத்துப் பள்ளனை மன்னித்து வேலை வாய்ப்புக் கொடுக்கும்படி வேண்டுகிறாள். "ஐயா பராக்கு பராக்கும் மைக்கும்பிட்டேன் - உம்மை - என்ற வரிகள் இதனை உணர்த்தும்.

ஐயா பராக்குப் பராக்கும்மைக்
கும்பிட்டேனாண்டே - உம்மை
அல்லவோ தேடி அடியாளிங்கே
வந்தேன் ஆண்டே
கையாரக் கண்ட கனவும்
பொறுப்பீரே ஆண்டே - பள்ளன்
காவலைக் கண்ணாலே
பார்க்கப்படாது காண் ஆண்டே"

பள்ளியர் அன்பு

பள்ளன் செய்த கள்ளத்தனத்தில் மூத்த பள்ளியின் சொற்கேட்டுத் தண்டனை வழங்கல், மீண்டும் மூத்த பள்ளி பண்ணை யாரை மன்றாடி விடுவித்தல், பள்ளன் மாடுகளைக் கொண்டு சென்று உழுதல், காளை மாடு குத்துதல், பள்ளன் மயங்கிதைக் கண்டு இரு பள்ளிகளும் துடித்து ஓடி வரல்.

"துள்ளி யெழுங்காளை தொடர்ந்து
பள்ளனைப் பாய்ந்து
தள்ளிவிடும் சோர்வுகண்டு சற்றுந்
தரியாமல்....
புள்ளின் வாய் கிழித்த புங்கவனார்
முக்கூடற் பள்ளி வரத்

தென் மருதூரப் பள்ளியும் வந்துற்றாளே"

என்று புலவர் தன் கவி வன்மை யால் பள்ளன் மேல் பள்ளியர் வைத்திருந்த அன்பைக் காட்டுகிறார். இப்படியான வாழ்க்கை முறையை மருத நிலக் கிராமப் புற மக்கள் வாழ்ந்தமையைத் துல்லிய மாகக் காட்டுகிறார் புலவர். பள்ளனின் இரு மனைவியரும் அழுது புலம்பக் குடும்பன் சிரித்துக் கொண் டெழுந்து உழுது விதைத்து, நாற்று நட்டு அறுவடை செய்து நெல்லளந்து கொடுத் தல் முதலிய பணிகளைச் செய்தான்.

வாழ்வியல்

இங்கே காணும் எல்லாப் பாடல் களும் கிராமப் புற மக்களின் வாழ்விய லைப் படம்பிடித்துக் காட்டுவதோடு சுவை மிக்க பாடல்கள் வேளாண்மை குறைவு படாமல் இருக்க வேண்டிப் பள்ளியர் கூடிக் கும்மி அடிக்கின்றனர்.

மருதூரில் உள்ள ஆற்றிலே புனல் மோதிக்கொண்டோடும் வேளை தங்கள் நாற்று நடும்வேலைக்குப் பள்ளர் எதிர் பார்த்திருக்க சோற்றுக்கு காலம் தாமதம் ஏற்பட எல்லோரும் ஒன்று சேர்ந்து பள்ளியர் எல்லாம் மேட்டில் கூடி, காப்பு கள் ஒலிக்க வும், சங்கிலிகள் அதிரவும், காதிலணி ஊசலாடவும் சிவந்த கைகளை நீட்டி கும்மி அடிக்கும் காட்சி தரப்படு கிறது.

தங்கள் வேலை நாற்றுக்கும் பள்ளர்
அங்கலாய்க்கும் சோற்றுக்கும்
தாமதப்படவே மற்ற தொன்றைச்
சாட்டி மேட்டிற் கூட்டாமல்,
"எங்கும் காப்பொலி பொங்கவேயதற்கு
எதிராய்ச் சங்கொலி அதிரவே" என்றும்

அங்குமிங்கும் செங்கை நீட்டி அருதியும் சின்னமருதியும் அரியாரும் கட்டைப் பெரியாரும் - கும்மி அடிப் பதைப் பாருங்கடி" என்பது போன்ற பாடல் கள் அமைவதால் பள்ளு ஓர் கிராமிய நடனமாகும்.

நிறைவு

கிராமிய நடனங்கள் பெரும்பாலும் செப்பனிடப்படாதவையாகும். கிராமப் புற மக்களின் வாழ்க்கை முறையைக் கலை களை, பண்பாட்டு விழுமியங்கள் யாவும் இங்கே, பிரதிபலிக்கின்றன. கிராமத்தின் பேச்சுவழக்கு, அதற்கேயுரிய பாணியில் கூறப்படும் விதம், இசை, தாளம், ஆட்டம், நடை, உடை, பாவனை யாவும் கிராமியத் தனித்துவத்தைக் காட்டுவதனால் பள்ளுப் பிரபந்தம் கிராமிய நடனம் எனலாம்.

நாட்டிய நாடக மரபின் வளர்ச்சி

பண்டைக் காலத்துக் கூத்தே நாட்டிய நாடகமாக மாறியுள்ளது. நாட்டிய நடனத் திற்கு நாடகமும், நாடகத்தின் நாட்டிய நாடகமும் துணை புரிந்திருக்கின்றன. இந்த வகையில் கதகளி (மலையாளம்) பகவத மேளம் (தெலுங்கு) கன்னடம் (யட்ச கானம்) என்பவற்றைக் கூறலாம்.

செம்மொழியாம் தமிழ்மொழி இயல், இசை, நாடகம், என்ற முத்தமிழையும் கொண்டு விளங்குவது, நாடகத் தமிழில் இயலும் இசையும் இணைந்து இன்பந்தரு மியல்பின. இது சம்பந்தமான நூல்கள் கால வெள்ளத்தில் அழிந்து போக எஞ்சிய உரை இலக்கியங்கள், கல்வெட்டுச் சான்றுகள் வேறு ஆதாரங்கள் வாயிலாக ஒருவாறு அறியமுடிகின்றது.

தொல்காப்பியர் காலத்தில் இருந்தே நாடகத்தமிழ் இருந்து வந்துள்ளது. "நாடக வழக்கினும். உலகியல் வழக்கினும் பாடல் சான்று புல நெறிவழக்கினும்" எனத் தொல் காப்பியம் நாடக வழக்குப்பற்றிக் கூறும்.

நாட்டிய நாடகம் (கூத்து)

கதை தழுவி வரும் ஆட்டமும், பாட லும் நிறைந்த நாடகத்தை நாட்டிய நாடகம் எனவும் இதில் இசை ஆடலும் நாடகமும் நிறைந்திருக்கும். இதனைப் பழந்தமிழர் கூத்து என்றனர். சாத்தனார் எழுதிய கூத்து நூல் ஆடவல்லானில் இருந்து கூத்துப் பிறந்தது என்கிறது. ஆடவல்லான் கையி லுள்ள உடுக்கையிலிருந்து ஓசையும், கழலி லிருந்து இசையும், இசையிலிருந்து ஆட்ட மும், ஆட்டத்தில் இருந்து கூத்தும், கூத்திலிருந்து நாட்டியமும், நாட்டியத் திலிருந்து நாடகமும் தோன்றின என்று குறிப்பிடப்படுகின்றது. கூத்து என்ற சொல் நாட்டியம், நாடகம் இரண்டுக்கும் பொது வானது என்கிறது திவாகர நிகண்டு - புத்தனேரி சுப்பிரமணியம் குறிப்பிடும் பொழுது கதை தழுவிய கூத்தே நாடகம் எனக் கூறுவர். பழங்காலத்தில் நாடகம் என்பது நடன நாடகத்தையே குறித்தது. எனவே கதை தழுவி ஆடல், பாடல், அபிநயம் இணைந்து மக்களைக் கவரும் கூத்து வகையே நாட்டிய நாடகம் எனக் கூறுவதே பொருத்தமானது.

தொல்காப்பியர் காலத்தை ஒட்டியும் அதற்கு முன் பின்னாகவும் பல நாடக இலக்கண நூல்கள் இருந்தன. அவை அழிந்தொழிந்தன.

சங்க இலக்கியப்பாடல் ஒன்று

"விழாவிற் கோடியர் நீர்மை போல முறை முறை ஆடுநர் கழியும் இவ்வுலகத்து" என உலக மொரு நாடக மேடை, அதில் ஆடவரும் மகளிரும் நாடக மாந்தர் எனக் குறிப்பிடு கின்றார். மேலும் கலித்தொகை, அக நானூறு, நற்றிணை முதலிய அகத்துறை இலக்கியங்களில் நாடகப் பாங்கினைக் காணலாம். சங்கமருவிய கால நூலான சிலப்பதிகாரம் முத்தமிழ்க் காப்பியமாக விளங்குகின்றது. இது இயற்றமிழ், இசைத் தமிழ், நாட்டியத்தமிழ், நாடகத் தமிழ் வரலாற்றையும் வளத்தையும் எடுத்தியம்பு கின்றது. சிலப்பதிகாரத்திற்கு எழுந்த உரைகள் வாயிலாக இசை நாடகத் தமிழ் வளம்பற்றி அறியலாம்.

ஆடல், பாடல், அழகு இம்மூன்றிலும் குறைவுபடாத மாதவியின் அரங்கேற்றம் பற்றி அறியக் கூடியதாக உள்ளது. அரங் கேற்றுக் காதையில் மாதவி கலை பயின்ற நிலை, ஆடலாசான் அமைதி, இசையோன் அமைதி, நன்னுற் புலவன் அமைதி, தண்ணுமை முதலோன், குழலோசை யாழ்ப்புலமையோன் அமைதிகள், அரங்க அமைதி, தலைக் கோல் வழங்கும் நிலை, வாரப்பாடலமைப்பு, இசை முழக்கம் அமைதி, தேசிக்கூத்து, மார்க்கக் கூத்து என்பன மாதவி ஆடல் மூலம் கூறப்படு கின்றன.

மேலும் இந்திர விழாக் கலைஞர்களின் பங்கு, மாதவி ஆடிய பதினொரு ஆடல் காவரியை நோக்கிப் பாடிய முகுமுடை வரி ஆற்றுவரி, சாத்துவவரி என ஆடற் கூறுகள் கூறப்படுகின்றன. எனவே சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரை மூல ஆடல் பற்றிய விரிவாக செய்திகளைஅறியாலாம் (காலம் 17, 12)

எனவே மாதவியின் ஆடல் நிகழ்ச்சி தமிழ் இலக்கியங்கள் கூறும் முதல் அரங் கேற்றமாக அமைந்துள்ளது. இளங்கோ வடிகள் ஆடற் கலையின் அறிவனைத் தையும் மாதவி மூலம் வெளிப்படுத்து கின்றார். ஆடல், பாடல், அழகு இம் மூன்றும் நிறைந்த மாதவி ஊர்வசியின் மறுபிறப்பே எனச் சிலப்பதிகாரம் கூறு கிறது.

மாதவி 7 ஆண்டு காலம் ஆடற்கலை யைக் கற்று 12வது வயதில் அரங் கேறினாள். தலைக்கோலரிவை என்ற பட்டத்தையும், தலை அரங்கேறும் நாடகக் கணிகையர்க்கு கிடைக்கும் 1008 பொற் கழஞ்சுகளையும், பச்சை மாலையையும் பெற்றாள். எனவே, மாதவி இசைக்கலை யிலும், ஆடற் கலையிலும் சிறந்து விளங்கிய வல்லவள் என்பதனையும் அறி கின்றோம்.

நாட்டிய இலக்கணம்

மாதவி மூலமாக இளங்கோவடிகள் ஆடற் செய்திகள் கூறுகின்றார். தண்டியம் பிடித்தல், ஆடற் பயிற்சி முறைகள், பல் வகைக் கூத்துக்கள், பதினொரு வகை ஆடல்கள், தலைக்கோலமைதி போன்ற செய்திகளைச் சிலப்பதிகாரத்தில் காண லாம். இவையனைத்து நாட்டிய இலக்கணம் கூறும் பகுதிகளாகும்.

தண்டியம் பிடித்தல் என்பது நடன பாடத்தில் ஆரம்பத்தில் செய்யப்படும் வழிபாட்டுச் சடங்கு இந்தத் தண்டியத்தை நடனமாடும் மங்கை வணங்கிய பின் ஆட்டந் தொடங்குவாள்.

ஆடற்பயிற்சி

5ம் ஆண்டு தொடங்கி 7 ஆண்டுகள் வரை கற்றல், தண்டியம், தாளம், பண் ணியம், நாட்டிய நூல்கள் பயிலுதல், நிருத்தம், நிருத்தியம், நாடகம், தாள ஆவர்த்தனங்கள், வட்டணைகள், பல் வகைக் கூத்துக்கள். ஒப்பனை, தலையரங்கு ஏற்ற நிகழ்ச்சி என்பன ஆடற்பயிற்சியில் இடம் பெறுகின்றன. இவ்வாறாக பல்வேறு வகைக் கூத்துக்கள், பதினொரு வகை ஆடல்கள், தலைக்கோலமைதி என்பவற் றைச் சிலப்பதிகாரம் விரிவாகக் கூறு கின்றது.

எனவே சிலப்பதிகாரம் நாடக இலக் கணம் கூறும் நூலாகவும் இலக்கிய நூலாக வும் விளங்குகின்றது. மேலும் தமிழகத்தில் நிலவிய நாடகக்கலை, நாட்டியக்கலை

பற்றிய செய்திகளும், அரசர்களும், புரவலர் களும் அளித்த கொடைகளும், மதிப்பும் ஆதரவும் கல்வெட்டுகள் வாயிலாக அறிய லாம். இவற்றைப் பல்லவர், சோழர், பாண்டியர், நாயக்கர், மராட்டியர் காலக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

பல்லவர் காலம்

பல்லவர் காலத்தில் கூத்துக்கலை சிறந்து விளங்கிமையை அக்காலக் கல் வெட்டுக்கள் கூறுகின்றன. பல்லவர் காலத் தில் இராசசிம்ம பல்லவனால் காஞ்சி கட்டப்பெற்ற கயிலாசநாதர் கோவிலில் சிவபெருமான் ஆடிய பாதகை நடனம், வதாவிருட்சிக நடனம், ஊர்த்துவ நடனம், ஆனந்தத் தாண்டவம் என்பன கருங்கற் களால் வடிவமைக்கப்பட்டுள்ளன. பர மேஸ்வர பல்லவன் காலத்தில் புதுப்பிக்கப் பட்ட வைகுந்தப் பெருமாள் கோயில் சிற்பங்களும் நடனக் கலையின் உன்னத படைப்புக்களாக விளங்குகின்றன.

சோழர்காலம்

நாடகக் கலை அழிந்து போகாமல் பாதுகாத்த பொற்காலம் எனலாம். நாடகக் கலையை வளர விடாமல் தடுத்த சமண, பௌத்த மதங்கள் கி.பி. 7ம் நூற்றாண் டோடு அழிந்தொழிய 8ம் நூற்றாண்டில் நடன, நாடகக் கலை சோழப்பெரு மன்னர் களால் பேராதரவுடன் வளர்க்கப்பட்டது. சமண பௌத்த மதங்களால் இசையும், நாடகமும் காமத்தை விளைவிப்பன என்று தடை விதிக்கப்பட்டிருந்தது. இத்தடை களை மீறிச் சோழர்காலம் நடன நாடகக் கலையில் அதி உன்னத வளர்ச்சியுற்றது. கி.பி 10ம் நூற்றாண்டளவில் புதுமலர்ச்சி அடைந்தது. தஞ்சாவூரில் 400 ஆடல் மகளிர் நடனக் கலையை வளர்ப்பதற்கு ஆலயத்தில் நியமிக்கப்பட்டனர். ஆலய வழிபாட்டுக் கலைகளுள் ஒன்றாக ஆடற் கலை திகழ்ந்தது. சோழர் காலக் கல் வெட்டுக்கள் நாடக, நாட்டியக் கலை பற்றியும், கலைஞர்கள் பற்றியும் ஆதரவு கொடுத்த அரசர், புரவலர்கள் பற்றியும் கூறுகின்றது. இதனை

"பக்க வாத்தியர் அழகிய சோழத் தெரிந்த வலங்கை
வேளைக் காறரில் ஐயாறன் சுந்தரிக்குப்
பங்கு முக்காலும்" என்று குறிப்பிடும் கல்வெட்டு, இன்ன ஆலயம் கலைஞர்கள் ஆடல் மகளிர் அவர்களுக்குக் கொடுக்கும் சன்மானம் என்பன குறிப்பிடப்பட்டு உள்ளன.

பாண்டியர் காலம்

சோழர் காலத்தைப் போலவே பாண் டியர் காலத்திலும் ஆடற்கலை, இசைக் கலை போன்றன போற்றப்பட்டன. ஆலயங் கள் கலை வளரும் இடங்களாகத் திகழ்ந் தன. இது பற்றிக் கருணாமிர்த சாகர ஆசிரியர் குறிப்பிடும் பொழுது மதுரை, திருச்செந்தூர், திருநெல்வேலி, ஆழ்வார் திருநகரி சங்கர நாராயணர் கோயில், வில்லி புத்தூர், தென்காசி ஆகிய இடங்களில் உள்ள ஆலயங்களில் ஆடல் மகளிர் வாழ்ந்து பணியாற்றியுள்ளனர் என்கிறார். எனவே பாண்டியர் காலத்திலும் நடனக் கலை வளர் நிலையில் இருந்தது என்று கூறலாம்.

நாயக்கர் காலம்

தஞ்சையை நாயக்கர் 143 ஆண்டுகள் ஆட்சி புரிந்தனர். தஞ்சையில் பல வைணவ ஆலயங்கள் தோன்றின. கலையும் சமயமும் வளர்ந்தோங்கிய காலமெனலாம். தஞ்சை

நாயக்கர் காலத்தில் இரண்டு நாட்டிய சம்பிரதாயங்கள் இருந்தன. ஒன்று சங்கீத மேளம்; மற்றது பாகவத மேளம். இவை இரண்டும் நாட்டியக்கலைக்குரியனவாக இருந்தன. இவை நாட்டிய நாடகங்களை வளர்த்தன.

சங்கீத மேளத்தை நட்டுவ மேள மென்று அழைத்தனர். இதில், நட்டுவனார், முட்டுக்காரர், நடனப் பெண்கள், பாடகர், இசைக் குழுவினர் இருப்பர். பெண்கள் நடனமாடுவார். இவர்களைத் தளிச்சேரிப் பெண்கள் என்றும் நாடக சாலாமகள் என்று அழைத்தனர். சிருங்கார ரசங் கொண்ட பதங்களையும், நாட்டிய நாடகங் களையும், தெய்வத்தின் மீதும், மனிதர் மீதும், பாடி ஆடுவர். அதோடு அரண் மனை அரங்குகளிலும், கோவில்களிலும் ஆடுவர். இவர்களுக்கு அரசு மரியாதை செலுத்தியது. மானியம் வழங்கியது. இவர் கள் தெலுங்கு நாடகங்களையும் ஆடி யுள்ளனர்.

நாயக்கர் கால அரிய கலைவடிவ மாகப் பாகவத மேளம் விளங்குகின்றது. கதகளி, குச்சுப்புடி, மணிப்புரி, நடன வகைகளைப் போல பாகவத மேளம் விளங்குகின்றது.

இசைக் கலைஞர்களான பாகவதர்கள் தெலுங்கு மொழியில் நாட்டிய நாடகங் களை ஆடியுள்ளனர். இக்குழுவில் நட்டுவ னார், முட்டுக்காரர், பாடகர் பிராமணர் களாகவே இருப்பர். பெண்கள் அரங்கு ஏறுவதில்லை. பெண் வேடத்தில் ஆண் களே ஆடுவர். இவ்வாறு நாயக்கர் காலத் தில் சங்கீத மேளமும், பாகவத மேளமும் இணைந்து நாட்டியக் கலையை வளர்த் துள்ளனர். இக்கலையைப் பராமரிப் பவர்களுக்கு அச்சுதப்ப நாயக்கர் பிராமண தேயமாக மெலட்டூர் என்ற ஊரையே வழங்கியுள்ளார். இது அவர்களுக்கிருந்த நாட்டியக் கலையை வளர்தெடுக்க வேண்டுமென்ற ஆர்வத்தைக் காட்டு கின்றது.

பாண்டிய, சோழ, நாயக்கர் காலத்தில் கலை வளர்ந்தது போல் மராட்டியர் காலமும் விளங்கியது. மராட்டிய மன்னர் களும், இசை நாட்டியக் கலை வல்லுனர் களாக இருந்தனர். தஞ்சை நாட்டியக் கலைக்கூடமாக விளங்கியது. மராட்டிய மன்னர்கள் மராட்டிய மொழியில் கலைப் படைப்புக்களைத் தந்தது போல், தெலுங்கு, தமிழ், சமஸ்கிருத மொழிகளிலும் கலைப் படைப்புக்களைத் தந்துள்ளனர். பாகவத மேளம், சங்கீத மேளம். யட்சகானம். ஹரி கதை, பொம்மலாட்டம், புரவியாட்டம் போன்ற நாட்டுப் புறக்கலைகளும் சிறப் புற்று விளங்கின. ஆலயங்களிலும் விழாக் களிலும் இக்கலைகள் இடம்பெற்றன. மன்னரும் மக்களும் பேராதரவு தந்தனர். தஞ்சை நால்வரான சின்னையா, பொன் னையா, சிவானந்தம், வடிவேலுவும், சங்கீத மும்மூர்த்திகளான சியாம சாஸ்திரி, தியாக ராஜர், முத்துசாமி தீட்சிதர்கள் தோன்றிக் கலைக்குப் புதுவடிவம் தந்தார்கள். புதுப் பரிணாமம் பெற்றது. இன்றைய நாட்டிய இசைக்கலை வளர்ச்சிக்கு மராட்டியர் கலை வடிவங்களே முக்கிய காரணகளாகும்.

சகசி மன்னன் காலத்தில் (கி.பி1684-1712) தோன்றிய ஐந்து தமிழிசை நாடகங் களை தஞ்சை சரஸ்வதி மகால் நூல் நிலையம் 1980ல் வெளியிட்டது. இவை தமிழ் நாட்டிய நாடக வரலாற்றில் சிறப் பிடம் பெறும் நூல்கள். சகசியின் காலத்

தில் 30க்கும் மேற்பட்ட நாடகங்களும் 500க்கு மேற்பட்ட பாடல்களும் தோன்றின. இவையாவும் தெலுங்கு மொழியில் அமைந்துள்ளன. இதேவேளை தமிழ்மொழிப் புலவர்களையும் போற்றி வந்துள்ளனர். தமிழகத்தில் நிலவிய சமயம், சமுதாயம், வழிபாட்டு முறைகளோடு புராணக்கதைகளை வெளிக்காட்டுவனவாக இந்நாட்டிய நாடகங்கள் விளங்கின. இவ்வனைத்து நாடகங்களும் சிவனை வழிபடும் சமய மேம்பாட்டையும், மராட்டிய மன்னர்கள் தம்மைச் சோழமன்னர்கள் என்று கூறிக்கொள்ளும் நிலையையும், நாட்டியக் கலைவளர்ச்சியில் மராட்டியரின் பங்களிப்பினையும், தமிழ் மொழிப் பங்களிப்பினையும் உணர்த்துகின்றன.

17ம், 18ம் நூற்றாண்டுகளில் குறவஞ்சி, நொண்டி நாடகங்கள் தோன்றின இஸ்லாமிய படையெடுப்பின் காரணமாக நாட்டியக்கலை வலுவிழந்தது. மீண்டும் 18ம் நூற்றாண்டுப் பிற்பகுதியில் நாடகங்கள் மறுமலர்ச்சியுற்றன. அருணாசல கவிராயர் இராம நாடகம் கீர்த்தனை களைப் படைத்தார். இது நாடகக் கலைக்குப் பெரிதும் உதவியது.

பண்டுதொட்டு கூத்து என்ற பெயரில் இருந்து மாறி நாட்டிய நாடகமாகப் பரிணமித்து நாடகக் கலையின் அங்கமாகவும் திகழ்கின்றது. "நாட்டிய நாடகக் களஞ்சியம்" என்ற பெயரில் புத்தனேரி ரா.சுப்பிரமணியத்தால் வெளியிடப்பட்ட 12 நாட்டிய நாடகங்களும் பாராட்டைப் பெற்றன.

சென்னைத் தமிழ் இசைச் சங்கத்தினால் ஆண்டு தோறும் விராலி மாலை, தியாகேசர், அழகர், கும்பேசர், திருமலையாண்டவர், அர்த்த நாரீசுவரர், வள்ளியம் பலக் குறவஞ்சி போன்ற நாட்டிய நாடகங்கள் விழாக்காலங்களில் மேடை ஏற்றப்பட்டு வருகின்றன. நடராஜன் சகுந்தலா குழுவினர் திருவள்ளுவர், பஞ்சாலி சபதம். மாமன்னன் மாட்சி என்ற நாட்டிய நாடகங்களையும், வயந்திமால குழுவினர், குறவஞ்சி, திருப்பாவை, சங்கத் தமிழ் மாலை என்ற நாட்டிய நாடகங்களையும், இ.வி சரோசா குழுவினர் மனோன்மணீயம், சந்திரகாந்தி சிவகாமியின் சபதம் என்ற நாட்டிய நாடகங்களையும், செல்வி. ஜெயலலிதா, காவிரி தந்த கலைச்செல்வி, பரிஜாதம் நடந்தாய் வாழி காவேரி என்ற நாட்டிய நாடகங்களையும், திருவரங்கன் கண்ட கோதை, பாரதி கண்ணம்மா, சகுந்தலா, முத்தமிழ் காத்த முத்தழகி இராமவதாரம் போன்ற பல நாட்டிய நாடகங்கள் மேடை ஏறியுள்ளன. இதிலிருந்து நாட்டிய நாடகங்களின் வளர்ச்சிப் போக்கினை இற்றைவரை அறியலாம். இந்நாட்டிய நாடக வளர்ச்சியில் இலங்கை கலைஞர்களும் பங்களிப்புச் செய்துள்ளனர்.

ஈழத்தில் நாட்டிய நாடக மரபின் வளர்ச்சி

ஈழத்தமிழரின் நடனப் பாரம்பரியத்தை நோக்கும்போது நாட்டார் வழக்கிற் காணப் படும் கூத்துக் கலைவடிவங்களே பின்புல மாக அமைகின்றது. விலங்குகள், பறவை கள் தேவையின் பொருட்டு நடனங்களில் இடம்பெற்றன. மானாட்டம், மயிலாட்டம், குதிரையாட்டம், பாம்பாட்டம், மீனாட்டம், கொம்பனாட்டம், குரங்காட்டம் என்பன பல குரல் ஒலிகளை வெளிக்கொணர்ந்தன. தெய்வீக உணர்வு பாம்பு நடனங்களின் மூலம் வெளிக்கொண்டு வரப்பட்டன. இது நாக வணக்கத்துடன் இணைந்தாக அமைந்தது. விலங்குகளது தோலை கையி லேந்தி ஆடும் மரபு உரியாட்ட மெனப் பட்டது. இது பிற்காலத்தில் ஒயிலாட்ட மாடியது. விலங்கு, குரங்காட்டங்கள் முக மூடிக்குள் ஆடுபவர் யார் எனத் தெரியாத வாறு ஆடுதல்.

பண்டக்கூத்து

மேலும், பானை, குடம், சுளகு, கூடை தானியக் கதிர்களை ஏந்தியாடும் ஆட்டம் பண்டக்கூத்து எனப்பட்டது. தானியங் களை நடுதல், அளத்தல், பகிர்தல், என்பன பண்டக்கூத்து வகையைச் சாரும் ஆண்கள் ஆடிய ஆட்டம் மல்லுக் கூத்து எனப் பட்டது. கம்பு, வேல், சூலம், வாள், அம்பு முதலியவற்றை ஏந்தி ஆடுதல். தொழி லோடு இணைந்த நடனங்கள். இடித்தல், புடைத்தல், தூற்றுதல், கழுவுதல், அவித் தல் என்பன வயற்காட்சிகளோடு அமைந் தன. பிறப்பு, பூப்பு, திருமணம், இறப்பு இணைந்த நடனங்கள் வீட்டு முற்றத்தில் நடைபெற்றன. கும்மி, கோலாட்டம் என்பனவும் அடங்கும், வழிபாட்டு இடங் களில் பெண்கள் ஆடிய நடனம் வங்கை எனவும், ஆண்கள் ஆடிய நடனம் சிங்கை எனவும் கூறப்பட்டது. இவ்வாறான ஒரு நடனப் பாரம்பரியம் அல்லது நடன மர பின் மூலமே பரத நாட்டியம் தோன்றியது.

நடனக் கலைக்கு உடல் கருவியாக இருந்தது. அங்க அசைவுகளினால் வெளிப் படுத்தப்படும் நடனத்திற்கு பயிற்சிகள் அழிக்கபட்டன. இவை பரத நாட்டியத் தில் ஆன்மீகம், வாசிகம், அணியாடல், மெய்ப்பாடு அல்லது சாத்வீகம் எனப் பட்டது. எனவே தமிழர் மரபின் பாரம் பரியத்தில் முளைத்தெழுந்த வடிவமாகப் பரதநாட்டியம் விளங்குவதால் முகிழ்ப்பு நடனம் எனவும் கூறப்படும். கையினால் கருத்தை வெளிப்படுத்தல் கைக்குறி எனவும் கூறப்படும். முகத்தில் வெளிப்படுத்தல் முகக்குறி எனவும் கூறப்படும். இவ்வாறு தலை அசைவுகள், கண்ணசைவுகள், கையசைவுகள் என்பனவற்றிற்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டன. அவற்றிற்குக் குறியீடு கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இவ்வாறே நால்வகை வர்ணத்தினரை உணர்த்தக் குறியீடுகள் அறிமுகப்பட்டத்தப்பட்டன. கழுத்தசைவுகள், பாத அசைவுகள், பத லட்சணங்கள் எனப்படும். அரச நடை, அன்ன நடை, துள்ளு நடை போன்ற பல் வேறு நடை இலட்சணங்கள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. ஈழத்தில் தோன்றிய பண்டக்கூத்து, மல்லுக்கூத்து, வடமோடி தென்மோடி ஆகிய கூத்து வகைகள் அடி மட்டத்தில் இருந்தோரால் கிராமிய மக்க ளால் பயிலப்பட்டவை. இவை தெய்வீகம்

சார்ந்த மனிதப்பண்புகளை உள்ளடக்கி யவை. கூத்தே பரத நாட்டியமாகப் பரிண மித்தது. செந்நெறிப்படுத்தபட்டது.

கூத்துக் கலையை நம்முன்னோர் பாது காத்தனர் அதன் பெயராலேயே அவர்கள் கூத்து வண்ணர் கூத்து, மாதவர் கூத்துப் பெருமான் கூத்துக்கந்தர், கூத்துச் சுப்பர், கூத்து நாகர், வேலர் எனப்பெயர்கள் நாட் டார் கலைமரபுகளில் காணப்படுகின்றன. குரூர நிலையில் உள்ள மனித உணர்வு களைப் பண்பட்ட நிலைக்கும், சமூக இசை வாக்கத்திற்கும் அசைத்துச் செல்வதில் நடனம் பங்களிப்புச் செய்துள்ளது.

தமிழில் நாட்டிய நாடகங்கள் வளர் வதற்கு உலகளாவிய முறையில் வளர்ச்சி யுற்ற பல நடனங்கள் காரணங்களாயின. 19ம் நூற்றாண்டில் ருஷியாவில் வளர்ச்சி யுற்ற பல நடனங்கள் ஐரோப்பிய நாடு களிலும் தமிழ் மக்களிடையிலும் பரவத் தொடங்கின. இந்த வகையில் எமது பாரம்பரியக் கலைகளை மீட்டெடுப்பதில் கவனம் செலுத்தப்பட்டது. பலே நடன வீரங்கனை கிளிஓநோர்டியிடம் ருக்மணி அம்மையார் பலே நடனம் கற்றுள்ளமை எடுத்துக் காட்டாகும்.

கலைத்துறையிலே மேல் நாட்டுப் பண்பாட்டு தாக்கங்களும், தழுவல்களும் கூத்து என்பதை "சதிர்" என்ற நிலைக்குத் தள்ளியது. கடந்த 3ம் நூற்றாண்டு கால மாக "சதிர்" என்ற பெயரே வழங்கலாயிற்று தற்போது 1947க்குப் பின் 40 ஆண்டுகட்கு மேலாகவே பரத நாட்டியம் என்ற பெயர் பிரசித்தம் அடைந்துள்ளது. எமது பாரம் பரியக் கலை வடிவங்களை மீட்டெடுப்ப தில் செயற்பாடுகள் முன்னெடுக்கபட்டன. ஒழுங்கமைந்த கலைத்திட்டத்தின் வழியாக நடனங் கற்றபின்னரே அரங்கேற்றம் வலி யுறுத்தப்பட்டது.

நவீன கல்விமுறையும் நாட்டிய நாடக வளர்ச்சிக்குத் தூண்டுதலாயின. தனித் தனியாகப் பரத நாட்டியம் பயிற்றப்பட்ட நிலைமாறி பலர் ஒருமித்து ஆடும் நிலை உருவாகியது. இது பரத நாட்டியக் கல்வி யில் இடம் பெறலாயின.

உயர்ந்த கலை வல்லுனர்களால் பரத நாட்டிய நாடகம் வரையறைகட்கு உட் படுத்தப்பட்டு நீண்டகாலப் பயிற்சி, முத்திரைகளையும், பாவங்களையும் துல்லியமாக வெளிப்படுத்துவதோடு சமூக நெறி முறைகள், பாதுகாப்பதற்கான கலை நடவடிக்கைகள் பேணப்பட்டன. இவை சுத்தம் எனப்பட்டது. கர்நாடக இசை, பரதநாட்டிய அரங்கியல் நுட்பங்கள் என்ப வற்றின் ஒருங்கிணைப்பால் ஆக்கப் பட்டதே நாட்டிய நாடகம். நடனம், அபி நயம், இசை என்பவற்றால் பாத்திரங்கள் உருவாக்கப்படுதல் அரசியல் நுட்பங்கள் குறிப்பிடப்படுகின்றன. கேரளத்தில் கதகளியும், ஆந்திராவில் குச்சுப்பிடியும், மாவிரட்டி ஒத்தில யக்ஷகானமும் சிறப் புற்றமை கூறலாம்.

பலநடனக் கோலங்களை ஒன்றிணைப் பதற்குரிய தளமாக நாட்டிய நாடகங்கள் அமைந்தன. கலைப்பண்புகள் மேலோங்கச் செய்வதற்கு உபாயங்கள் செயல் வடி வமைக்கப்பட்டன. இராமாயணம், குற்றா லக் குறவஞ்சி, சாகுந்தலம், தமயந்தி சுயம் வரம் புத்தவதாரம், மீனாட்சி கல்யாணம் என்பவற்றை ருக்மணி அம்மையார் தயாரித் தார். இது ஈழத்து நாட்டிய நாடக வளர்ச் சிக்கு உறுதுணையாயிற்று.

இந்திய இலங்கைத் தொடர்பாடல் களாலும் ஈழத்தில் நாட்டிய நாடகக்கலை வளர்ந்தது. இதற்கு ஏரம்பு சுப்பையா, வீரமணிஐயர் போன்றோரது பங்களிப்பு பெரிதும் உதவின. இவர்கள் உருவாவதற்கு கலைச்செழுமை வாய்ந்த பின்புலம் ஒன்று இருந்து இவர்கள் இணுவில் என்னும் கிராமத்தைச் சேர்ந்தவர்கள். இக்கிராமத் தில் வேரூன்றி விருட்சமாக இசைக்கலை, நாடகக் கலைப் பாரம்பரியமொன்று இருந்தது. சிறந்த தவில் வித்துவான்கள், நாதஸ்வர வித்துவான்கள், நாடகக் கலை விற்பன்னர்கள் இருந்து வந்துள்ளனர். அவர்கள் நடித்த நாடகத்தினால் பெயர் பெற்றிருந்தனர். எடுத்துக் காட்டாக கோவலன் வைரமுத்து, வேடன் பொன் னையா, பபூண் சண்முகம், நாரதர், முதலித் தம்பி, பண்டாரக்கிழவன் கார்த்திகேசு, சத்தியவான் கந்தையா, ஏஜண்டர் கதிர் காமர், கைகேயி சரவணமுத்து, சத்தியவான் நடராசா, அண்ணாவி சுப்பர், அண்ணாவி ஏரம்பர் (கலைச்செல்வன் சுப்பையாவின் தந்தை) எனப் பேர்சிறந்த நாடக, கூத்து கலைஞர்களாவர். இவர்களின் பின் புலத்தில் மூன்று பரதக்கலை மாணவர்கள் தோன்றினர். கலைச்செல்வன் சுப்பையா (02) பிரம்ம ஸ்ரீ வீரமணி ஐயர், கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் இம் மூவரும் இந்தியாவிற்குச் சென்று புகழ் பூத்த பரதக்கலை வல்லுனர்களிடம் பயின் றனர். இவர்களை வழி நடத்திய கல்வி மான்களும் இணுவில் கிராமத்தை அலங் கரித்தவர்கள் பண்டிதர் சரவணமுத்து, பண்டிதர் இராசலிங்கம், பண்டிதர் திரு நாவுக்கரசு, அம்பிகைபாக உபாத்தியாயர், சபா ஆனந்தர் சேதுலிங்கச் சட்டம்பியார், கதிர்காமநாதர் என்போரைக் குறிப்பிட லாம். பரத நாட்டியம் பற்றிய எண்ணக் கருவை அதன் அரசியலையும் இந்நாட்டில் கட்டி எழுப்ப அரும்பாடுபட்டவர் ஏரம்பு சுப்பையா ஆவர். ஆடலோடு தொடர்பு கொள்ளாது கலையை நோக்கும் நிலை யில் உள்ளவர்களை மாற்றியமைக்க முயன் றார். இதனை வலுப்படுத்த யாழ்ப்பாணத் திலுள்ள புகழ் பூத்த கல்லூரிகளையும். தாம் நிறுவிய கலாபவனத்தையும் பயன்படுத் தினர். இச்செயற்பாடானது இந்நாட்டின் கல்விச் செயற்பாடுகளோடும். கலைத் திட்ட இயக்கங்களோடும் பரதக்கலையை வளர்ப்பதற்கு விரிவானதளங்களாயின.

தமிழகத்திலுள்ள இராமகான சபா விலே நடிகராக இருந்தமை. மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் பரதம் கற்றமை, குருகோபிநாத்திடம் கதகளியையும் கிரா மிய நடனங்களையும் கற்றமை, தந்தை யாரிடம் மரபுவழி நடனங்களைக் கற்றமை இவரது நாட்டிய நாடக ஆற்றுகைக்கு வலுச் சேர்த்தன. அகல்யா, சுகன்யா, ஊர்வசி, பாமாவிஜயம், குறிஞ்சிக்குமரன், தம்பியர் மூவர், பஸ்மாசுர மோசிலி, திருவெம்பாவை, காணி நிலம், சூடாமணி யேசு பிறப்பு முதலிய நாட்டிய நாடகங் களை எழுதியுள்ளார். கல்வி மான்கள், கலை ஆர்வலர்கள் ஆதரவும் இருந்தது. இவ்வாறு ஈழத்தில் நாட்டிய நாடக மரபு வளர்ச்சி யுற்றது.

இசைப்பாரம்பரியம் மிக்க இணுவில் கிராமத்தில் வரன் முறையான இசைக்கல்வி யைப் பரப்பியவர் வீரமணி ஐயரின் தந்தை யார் நடராச ஐயர் 1953ம் ஆண்டு தந்தை யார் வீரமணிஐயரை சென்னைக்கு அனுப்பி வைத்தார், கலாசேத்திர மாணவ னாக நடனம் கற்றவர். வரதராசாச்சாரியார்,

வீணை கிருஷ்ணமாச்சாரியார், மைசூர் வாசுதேவாச்சாரியார், காரைக்குடி சாம்ப சிவஐயர். மீனாட்சி சுந்தரம்பிள்ளை, மைலாப்பூர் கௌரியம்மா, ருக்மணிதேவி அம்மையார் ஆகியோரிடம் அனுபவக் கல்வியை கற்றுத் தேறினார்.

பரத நாட்டிய வளர்ச்சிக்கு குறவஞ்சி வடிவம் துணை செய்தது. கலாசேத்திர நாட்டிய நாடக மரபு குற்றாலக் குறவஞ்சி யுடன் ஆரம்பித்தது. வீரமணி ஐயரின் நாட்டிய நாடக வளர்ச்சி மைலைக் குறவஞ்சியுடன் ஆரம்பித்தது. தெய்வீக அடிப்படையில் உருவாக்கப்படும் பரத நாட்டியத்துடன் தெய்வீகக் கதைகள் உள்ளடக்கிய குறவஞ்சி நாடகமும் ஒன்றி ணைந்தன. இவரால் நூற்றுக்கு மேற்பட்ட நாட்டிய நாடகங்கள் (வீரமணி ஐயரால்) எழுதப்பட்டன. இவ்வாறாக ஈழத்தில் நாட்டிய நாடக மரபின் வளர்ச்சி செழித்தது. 2005ல் வீரமணி ஐயா அவர் களின் மறைவிற்குப் பின்பும் பல நாட்டிய நாடகங்களே அவரது அடியொற்றி வளர் கின்றன. அரசின் கலைத்திட்டத்தில் நாட்டிய நாடகம் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. இவ்வாறாக நாட்டிய நாடகத்தை எழுதியோர் வரிசையில் குறிப் பிடத்தக்கவர். திருமதி. கணேசபிள்ளையி னால் எழுதப்பட்ட நாட்டிய நாடகங் களும் இடம்பெறுகின்றன. தேசியமட்டம் வரை பரிசுபெற்ற பல நாட்டிய நாடகங்கள் நூலாக்கம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

நாவலரின் சமூகப்பணி

சைவத்தின் காவலர், வசன நடை கை வந்த வள்ளலார் என்று போற்றப்படுபவர் நாவலர். சமயகுரவர்கள் நால்வருடன் ஐந் தாங் குரவரென வைத்தெண்ணப்படுபவர் நாவலர் பெருமான். மக்கள் சேவையே மகேசன் சேவை என்று உணர்ந்து, மக்களுக் காகத் தன்னை முழுமையும் அர்ப்பணித் தவர். "நடமாடுங் கோயில் நம்பர்க்கொன் றீயின் படமாடுங் கோயில் பரமர்க்கதாமே" என்ற திருமந்திர வாக்கிற்கமைய நடமாடுங் கோயில்களாகிய மக்களுக்குப் பணி செய்து கிடந்தவர். படித்தவர்கள், புலவர்கள், பண்டிதர்கள் நூல்கள் எழுதித் தம் புலமை களை நிலைநிறுத்த முயன்றுகொண்டிருந்த வேளை, நாவலர் இளந்தலைமுறை யினருக்குக் கல்வி போதித்து வந்தார். இலவசக்கல்வி வழங்கினார். இளைஞர்கள் நல்ல கல்வி ஒழுக்கங்களில் சிறந்து விளங்கி னாலன்றி சமூகமோ, நாடோ முன்னேற முடியாது என்று உறுதியாக நம்பினார்.

18ம் நூற்றாண்டு யாழ்ப்பாணம் அந் நியராதிக்கத்தின் பிடியில் சிக்கித் தவித்தது. மக்கள் பலவழிகளில் சீரழிக்கப்பட்டார் கள். அடக்குமுறையால் அவதிக்கப்பட்டார் கள். சைவத்தமிழ்ப்பண்பாடு கலாசாரம் சீர் குலைந்தது. மக்கள் அச்சம் கொண்டு வாழ்ந்தனர். கட்டாய மதமாற்றம் காட்டுத் தீயெனப் பரவிற்று. இந்த நேரத்திலே உதய சூரியனென, விடிவெள்ளியெனத் தோற்றம் பெற்றவரே நாவலர் பெருமான். 1822ம் ஆண்டு நல்லூரில் கந்தப்பிள்ளையாருக்கும், சிவகாமி அம்மையாருக்கும் ஐந்தாவது பிள்ளையாக அவதரித்தவரே நாவலர் பெருமான். ஒரு நல்ல பிள்ளையைப் பெற்றுக் கொடுப்பதும் சமூகத்திற்குச் செய்யும் பெரும்பணியாகும். இந்த வகை யில் நாவலர் பெருமானின் தோற்றம் அவர் தம் பெற்றோருக்கும், தான் வாழ்ந்த சமூகத் திற்கும் நாட்டிற்கும் பெருமையைத் தந்தது எனலாம்.

இவரது பணிகள் சமயப்பணி, சமூகப் பணி, கல்விப்பணியெனப் பாகுபடுத்த லாம். இவை ஒன்றையொன்று பிரித்தறிய முடியாதவையாக அமைந்துள்ளன. சமூகத் திற்கான கல்விப்பணியையும், சமயப் பணி யையும் ஆற்றினார். இந்த வகையில் நாவலர் பெருமானின் பணி மேலோங்கி நிற்கின்றது. இதனாலேதான் "நல்லை நகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழ் எங்கே - சுருதியெங்கே" என்று சி. வை. தாமோதரம் பிள்ளை எடுத்துக் காட்டினார். ஆறுமுக நாவலர் செய்த பணி கள் எல்லாம் சமூகப் பணியுள் அடங்கு பவையே.

நாவலர் பெருமானின் சமூகப் பணியை முன்னெடுத்துச் செல்பவையாக அமைந் தவையே சைவ பரிபாலன சபையும், சைவ வித்தியா விருத்திச் சங்கமும் ஆகும். வறுமையின் பிடியிலும் அந்நியராதிக்கத் தின் அடிமைத்தனத்திலும் சிக்கித் தவித்த மக்களை விடுவிக்கச் சித்தங்கொண்ட நாவலர், மக்கள் இலவசமாகக் கற்பதற்குப் பல கல்விக்கூடங்களை நிறுவினார். ஆசிரியர்கள் சம்பளம் வாங்காமல் கற்பிக்க வேண்டுமென்ற எண்ணத்தை வெளி யிட்டார். தமிழ்க்கல்வியுடன் ஆங்கிலக் கல்வியையும் எமது சமூகம் பெற்றுக் கற்க வேண்டுமென்று ஆலோசனைகள் வழங்கிய

துடன் வண்ணார்பண்ணையில் சைவ ஆங்கில வித்தியாசாலை ஒன்றையும் நிறுவினார். சைவப் பிள்ளைகள் சைவப் பாடசாலைகளில் கற்க வேண்டுமென்று அறிவுறுத்தினார். இவரது பிரசங்கத்தின் பயனால் இணுவில், கோப்பாய், புலோலி, கொழும்புத்துறை, ஏழாலை முதலிய இடங்களில் சைவப் பாடசாலைகள் நிறுவப்பட்டன. வண்ணார்பண்ணையில் நிறுவப்பட்டதே நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையாகும். இவரால் தொடக்கப்பட்ட பாடசாலைகளுக்கு இவை எவ்வாறு இயங்க வேண்டுமென்ற பாடவிதானத்தையும், அவற்றைப் பரிபாலிப்பதற்கு சொத்துக்களையும் தேடி வைத்தார். பெண் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தார். ஒரு பெண் கற்பதனால் நல்ல சமுதாயம் உருவாகும் என்பதே அவருடைய எண்ணம். இதன் பேறாக நாவலரின் நல்லெண்ணத்தை முன்னெடுக்கும் வகையில் இவரது மரபின் வழிவந்த சேர்.பொன்.இராமநாதன் தனித் தமிழ் சைவப் பெண்களுக்கு என்று இராமநாதன் பெண்கள் கல்லூரியை அமைத்தார். அதனாற் பயனடைந்தோர் பலராவர்.

படித்தவர்களால் மட்டும் உணரக் கூடிய நூல்களை சாதாரண மக்களும் படிக்க வேண்டுமென்ற எண்ணத்தால் பாடல் வடிவிலமைந்தவற்றை இலகு தமிழில் எழுதி வெளியிட்டார். இந்த வகையில் எழுந்தவை பெரிய புராண வசனம், கந்தபுராண வசனம், பாலபாடம் முதலியனவாகும். பழைய நூல்களை இலகு வாக்கியும், புதிய நூல்களை எழுதியும் சமூகம் கல்வியறிவில் மேம்படவேண்டுமென்று பாடுபட்டவர். இந்த வகையில் சி.வை.தாமோதரம்பிள்ளை போன்ற ஆங்கிலங் கற்றவர்களைத் தமிழ்த் தொண்டர்களாக்கிய பெருமை நாவலரையே சாரும். துண்டுப் பிரசுர முறையைத் தொடக்கி வைத்து அதன் மூலம் சமுதாயத்திற்கு உணர்த்த வேண்டிய உண்மைகளை உணர வைத்தார்.

இவரது பணிகளில் முன்னிற்பது கஞ்சித் தொட்டித் தர்மம். பசித்த ஏழை மக்களுக்கு உணவு கொடுத்தல். இதனை "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்று இலக்கியங்கள் பேசும். உயிரைக் காப்பதற்கு உணவும் முக்கியம். 1877ம் ஆண்டு பஞ்சமேற்பட்டு மக்கள் பசிபட்டினியால் வாடினர். இந்த வாட்டத்தைப் போக்கக் கஞ்சித் தொட்டித் தர்மத்தை ஏற்படுத்தினார். பஞ்சம் நீங்கும் வரை ஏழை மக்களுக்கு கஞ்சியும், அன்னமும், கறியும் கொடுத்து உதவி பசிப்பிணி போக்கிய மருத்துவனாகவும் விளங்கினார். பாசையூர், கரையூர்ப் பகுதி முதல் பரவி வந்த பேதி நோயைத் தடுக்காது பாராமுகமாக இருந்த மாவட்ட அதிபர் துவைனம் துரையைச் சுட்டிக்காட்டி, தேசாதிபதிக்கு கடிதம் எழுதியதோடு, ஒரு தூதுக்குழுவையும் அனுப்பி வைத்து ஆவன செய்தார். இது அவரது சாதி, சமயத்திற்கு அப்பாற்பட்ட சேவையின் பண்பினைச் சுட்டிக் காட்டுவதாகும். சேர்.பொன்.இராமநாதன் தமிழ்ப்பிரதிநிதியாக அரசியல் வானில் அரை நூற்றாண்டு காலம் பிரகாசித்துச் சமூகசேவை செய்யக் காலாக இருந்தவர் நாவலர் அவர்களே. தீர்த்த யாத்திரை, தல யாத்திரை செய்பவர்களுக்கும், கடவுளுக்குத் தொண்டு செய்பவர்களுக்கும், வறியவருக்கும் உழைக்க முடியாத முடவர், குருடர், குழந்தைகள், நோயாளர்களுக்கும் அன்னம் கொடுக்க வேண்டுமென்ற அ கட்டளையை ஏற்பாடு செய்திருந்தார்.

1872ம் ஆண்டு வில்லியம் கிரகரியினால் உருவாக்கப்பட்ட வர்த்தக வேளாண்மைச் சங்கத்திடம் கந்தளாய்ப் பகுதியிலிருந்து 200 பங்குகளை முத்துக்கருப்பன் செட்டியாருடன் சேர்ந்து வாங்கினார். இதன் நோக்கம் ஏழை மக்களுக்கு உதவுவதேயாகும். இதனை எல்லோரும் மெச்சினர். வேளாண்மைச் சங்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டதோடு மக்களையும் கிளைச்சங்கங்கள் நிறுவி இணையுமாறு பிரசங்கித்தார். வாங்கப்பட்ட இந்நிலப் பரப்பிலுள்ள காட்டுமரங்களை வெட்டி வருவாயை ஏற்படுத்தியும், நெற்பயிர் விளைவித்தும் அவற்றையெல்லாம் சமூகப் பணிக்கு உதவினார். இவரது சமூகப்பணியின் பெருமையை அப்போது இருந்த இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழத்துறை ஆசானாகிய கிங்ஸ்பெரி பெரிதும் பாராட்டினார்.

துண்டுப் பிரசுரங்களை வெளியிடவும், நூல்களைப் புதுப்பிக்கவும், புதிய நூல்களை எழுதவும் அச்சுக்கூடங்களை நிறுவினார். கையெழுத்துப் பிரதியாக அக்காலத்து நூல்கள் இருந்தன. அந்த ஏடுகள் புத்துயிர் பெறவும், செய்திகளை மக்களுக்கு இலகுவாக அறிவிக்கவும் அச்சியந்திரக் கூடங்கள் பெரிதும் பயன்பட்டன. அஞ்சா நெஞ்சத்துடன் கிறிஸ்தவப் பாதிரிமாருடன் எதிரிட்டுச் சமூக சீர்திருத்தப் பணியில் இறங்கிய மகான் ஆறுமுக நாவலர். அவரது சமூகப்பணியால் இன்று சைவத்தமிழ் மக்கள் தலைநிமிர்ந்து நிற்கின்றனர். அவரது சமூகத்தொண்டுகளைப் பின்பற்றி எத்தனையோ சமூகத்தொண்டு நிறுவனங்கள் அறக்கட்டளைகள் உருவாகியுள்ளன. எல்லோரும் கல்வி வாய்ப்பைப் பெற்றுள்ளனர். நாமும் அவர் வழி நின்று வாழக் கற்றுக்கொள்வோமாக.

இராமநாத வள்ளலாரும் அவரது பணிகளும்

நமது குழலில் காலத்திற்குக் காலம் அவதரித்த அவதார புருஷர்களில் சேர். பொன் இராமநாதனும் ஒருவர் எனலாம். இவர் அரசியல், சட்டம், சமூக சேவை, கல்விச்சேவை, ஆத்மிகம், கலை இலக்கியம் முதலானவற்றின் பாற் கொண்டிருந்த ஈடுபாடானது அவரைத் தனித்துவமிக்க ஒருவராக இனங்காட்டியுள்ளது.

1851ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 16ஆந் திகதி பொன்னம்பல முதலியாருக்கும், செல்லாச்சியம்மையாருக்கும் இரண்டாவது மகனாகப் பிறந்த இராமநாதன் அவர்கள் ஞானியர்களால் ஆசீர்வதிக்கப்பட்ட "கருவிலே திருவுடையவராக" காணப்பட்டார். சிறந்த கல்விமானாக, அரசியல் ஞானியாக, சமூக சமயத் தொண்டனாக, கல்விப் பணியாளனாக விளங்கிய அவர், சிறிதும் விலகாத ஆத்ம ஞானியாகவும், யோக சாதனையாளனாகவும், இருந்து ஞான நூல்களை ஓதி உணர்வதிலும், நூல்களை ஆக்குவதிலும் அதீத ஈடுபாடு காட்டிவந்துள்ளார். இவ்வுலகில் எண்பது ஆண்டுகள் அவர் வாழ்ந்து ஆற்றிய ஒவ்வொரு பணியும் அவர் வாழ்ந்ததற்கான அர்த்தத்தை நிரூபிப்பதாகக் அமைந்திருப்பதைக் காணலாம்.

அரசியல், சட்டத்துறைகளில் இராமநாதன்

1879இல் இவர் சட்டநிர்ணய சபையில் தமிழர் பிரதிநிதியாக இணைந்து கொண்டது முதல் அரைநூற்றாண்டு காலம் இலங்கை அரசியல் வானில் விடிவெள்ளியாகப் பிரகாசித்தார். இவர் இன, மத, மொழி, பேதங்கடந்த நிலையில் "நாம் இலங்கையர்" என்பதை தாரக மந்திரமாகக் கொண்டு தொழிற்பட்டு வந்தார். இலங்கை மக்களின் அமைதியான வாழ்வும், வளங்களும், சுதந்திரமும், உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக சேர். பொன். இராமநாதன் அவர்கள் ஆற்றிய பணிகள் அளவு கடந்தன.

சமூக நீதிக்கு எதிராக நடைபெற்ற எல்லாக் காரியங்களுக்கும் எதிராக அவர் சட்ட நிர்ணய சபையில் ஆற்றிய உரைகள் "வீரமுழக்கங்கள்" எனப்படும் அளவுக்கு முக்கியத்தும் மிக்கனவாகும். இலங்கை வாழ் தேசிய இனங்களின் ஒற்றுமைக்கும், முன்னேற்றத்திற்கும் உளப்பூர்வமாக உழைத்த இவரது செயற்பாடுகளை மக்கள் மனதாரப் போற்றினர். அக்கால மக்கள் தங்கள் முன்னேற்றத்திற்கும், வாழ்வாதாரத்திற்கும் அதிகார பீடத்திலிருந்தவர்களையே நாடவேண்டியிருந்தது. இத்தகைய சூழ்நிலையில் சேர். பொன். இராமநாதன் அவர்களது தூரநோக்கும் நுண்ணறிவும் கொண்ட செயற்பாடுகள் பெரும் நன்மை பயப்பனவாகக் காணப்பட்டன.

சேர். பொன். இராமநாதன் அவர்களுடைய அரசியற் செயற்பாடுகளுக்கு உதாரணமாக பல விடயங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்றுதான் 1915 இல் சிங்களவர்களுக்கும் சோனகருக்கும் இடையில் நிகழ்ந்த இனக்கலவரமும் அதனை அடக்க பிரிட்டிஸார் சிங்களத் தலைவர்களை சிறையில் அடைத்தும் இதற்காக சரித்திரப் பிரசித்தி பெற்ற

உரையை நிகழ்த்தியதுடன் உலக மகாயுத்த சூழலிலும் பிரித்தானியா சென்று பாராளு மன்றத்தில் வாதிட்டு வெற்றியுடன் திரும்பி வந்திறங்கியதும் அந்த நன்றியை வெளிப் படுத்த அவரைக் குதிரை வண்டியிலேற்றித் தாமே இழுத்துச் சென்றதும் அமை கின்றது.

பின்னர் ஒருபோது இச்சம்பவத்தை நிதி மந்திரியாக இருந்த ஜே. ஆர். ஜெயவர்த்தனா அவர்கள் நன்றியுணர் வோடு; சிங்களவர் கண்டபடி சுட்டுக் கொல்லப்பட்ட போது, எம்மைக் காப் பாற்ற எவரும் முன்வரவில்லை. மானிப் பாயிற் பிறந்த மகான் ஒருவரே எம்மை இரட்சித்தார். அன்று அவர் காப்பாற்ற முன்வராவிட்டால் நாம் தப்பிப்பிழைத் திருக்க முடியாது. எமது வரலாறு வேறு விதமாக அமைந்திருக்கும் என்று கூறி யிருந்தார். டி. எஸ். சேனநாயக்க முதலான தலைவர்களும் இவருக்குப் பெருமதிப்புச் செய்ததோடு பாராளுமன்ற முன்றலில் சிலை எழுப்பிக் கௌரவித்துள்ளனர்.

மேலும் சேர். பொன் இராமநாதனது முயற்சியால் இலங்கையில் சட்டக்கல்விச் சபையும், சட்டக் கல்லூரியும் நிறுவப் பட்டுள்ளது. சட்டம் மற்றும் நீதித் துறைக்குப் பெரும் பணியாற்றிய இவரால் உயர்நீதிமன்றத் தீர்ப்புக்களுக்கு புதிய சட்ட அறிக்கைகள் தொகுக்கப் பட் டுள்ளன. மேற்கு நாட்டுக் கொள்கைகளை "தைக்கப்பட்ட ஆடைகள் போல" அப் படியே கொண்டுவந்து எமது சூழலுக்குப் பிரயோகிப்பதால் ஏற்படும் விளைவுகளை பெண்ணியம், சிறுவர் உரிமைகள் முதலான வற்றில் கண்கூடாக காணமுடிகின்றது. இதனை முன்கூட்டியே இராமநாதன் அவர்கள் உணர்ந்திருந்தார். என்பதை; கல்வி அறிவு குறைந்த மக்கள் மத்தியில் சர்வஜன வாக்குரிமை பொருத்தமற்றது எனச் சுட்டிக்காட்டி டொனமூர் அரசியல் யாப்பை எதிர்த்தமை காட்டுகின்றது.

சமூகசேவையில் வள்ளல்

பெருந்தனவந்தரான இவர், ஏழை மக்களிடம் இரக்கமும் பேரன்பும் உடைய வராகக் காணப்பட்டார். குடிமகன் ஒவ் வொருவனும் வருடத்தில் ஒரு கிழமை கட்டாய வீதி அமைப்பு வேலையில் ஈடுபட வேண்டும் என்ற சட்டத்தை எதிர்த்தார். யாழ்ப்பாணத்துக்கான புகை யிரதப் பாதை அமைப்பதற்கு பெருஞ் செலவு ஏற்படும். ஆனால் அரசுக்கு வருவாய் இருக்காது எனக் கருதி தட்டிக் கழிக்கப்பட்டு வந்த அரசுடன் பலமுறை வாதாடி யாழ்ப்பாணம் காங்கேசன் துறைக்கான புகையிரதப் பாதையை அமைக்கச் செய்தார். சுன்னாகம் சந்தை வியாபாரிகளிடமிருந்து வழக்கத்துக்கு மேலதிகமாக ஒரு சதம் கிராம சங்கத்தினர் வாடகை அறவிட்டதை எதிர்த்து; வியா பாரிகளின் ஏழ்மை நிலையினையும் சந்தைச் சட்டத்தின் விளைவுகளையும் எடுத்து விளக்கி மக்களைப் பாதுகாத்தார். இவ்வாறே, மலையக மக்களின் உழைப் பால் அரசும் முதலாளிவர்க்கமும் அடை யும் அதிக இலாபத்தைச் சுட்டிக்காட்டி அந்த மக்களுக்கான கல்வி, மருத்துவம் உள்ளிட்ட செலவுகளை அவர்களே பொறுக்க வேண்டுமென வாதாடி ஏற்கவும் செய்தார். யாழ்ப்பாணத்திலுள்ள பழைய துறைமுகங்களை இயங்க வைத்தமையும், பல பழைய குளங்களையும் புனரமைக்கச் செய்து நிலமில்லாதவர்களுக்கு காட்டு நிலங்களைப் பகிர்ந்தளிக்கச் செய்து ஏழை மக்களுக்கு வாழ்வளித்தமையும் வள்ளலார் செய்த சமூகப் பணிகளுட் சிலவாகும்.

பண்பாட்டு பாதுகாவலர்

இராமநாதன் தேசியவாதியாகவும், பண்பாட்டுப் பாதுகாவலனாகவும் தொழிற்பட்டமையை பின்வரும் செயற்பாடுகள் உறுதிப்படுத்துகின்றன. அந்த வகையில் வெசாக் தினத்தை பகிரங்க விடுமுறை தினமாக அறிவிக்க அரசுடன் வாதிட்டு வெற்றி பெற்றமை, பௌத்த ஆலயச் சொத்துக்களும், மானியங்களும் அரச தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வந்த அன்றைய சூழலில் பௌத்த தேவாலயச் சொத்துப் பாதுகாப்பு மசோதாவை ஆதரித்து உரையாற்றியமை, மற்றும் முஸ்லிம் திருமண நடைமுறைகளை மாற்றி பதிவுத் திருமணத்தை வலியுறுத்தும் சட்டத்தை எதிர்த்து அதனை நிறைவேற்ற விடாது தடுத்தமை முதலானவை இத்தகையனவற்றுட் சிலவாகும்.

இந்தவகையிலே தான் இவருடைய இந்து, மத ஆத்மிக மற்றும் கல்விச் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன. அதாவது இவரால் ஆரம்பிக்கப்பட்ட மருதனார்மடம் - இராமநாதன் மகளிர் கல்லூரி, திருநெல்வேலி - பரமேஸ்வராக் கல்லூரி, நுண்கலைப்பீடம், சைவ மங்கையர் சபை, சைவபரிபாலன சபை, சைவாசிரியர் கலாசாலை, சைவச் சிறுவர் பாடசாலை மற்றும் பரமேஸ்வரன் ஆலயம் பொன்னம்பலவாணேஸ்வரர் வழியால் சைவத்தமிழ்ப் பண்பாட்டு மறுமலர்ச்சிக்கும் பாதுகாப்பிற்கும் உரிய பணிகளாக இனங்காணப்படத்தக்கன எனலாம்.

இராமநாதன் கல்லூரி

சைவத் தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்களைப் பேணும் வகையில் 1913ஆம் ஆண்டு இராமநாதன் மகளிர் கல்லூரியை நிறுவினார். இது இலங்கையில் சுதேசிகளால் ஆரம்பிக்கப்பட்ட முதற் பெண்கள் கல்லூரி ஆகும். 25 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் அமைந்த இக்கல்லூரி பாரிய கட்டட அமைப்புக்களைக் கொண்டதும், கலை நுணுக்கம் வாய்ந்ததும், ஆசிரியரும் மாணவரும் உடனுறைந்து கல்வி கற்கும் வாய்ப்பினையுடையதும், வழிபாட்டிற்கென அமைந்த நடராஜர் ஆலயத்தையும் சரஸ்வதி மண்டபத்தையும் உள்ளடக்கியதாகக் கலை, பண்பாட்டுப் புரட்சியின் சின்னமாகவும் அமைந்துள்ளது.

ஆரம்பகாலத்தில் கல்லூரியின் ஒழுங்கு கட்டுப்பாடுகளைத் தானே முன்னின்று கவனித்தார். மாணவர்கள் குருகுலக்கல்வி முறையில் கற்றனர். ஆசிரியர்கள் சைவத் தமிழ்ப் பண்பாட்டைப் பேணி நடப்பவர்களாகவும், தேர்ச்சி பெற்றவர்களாகவும் தெரிவு செய்து நியமிக்கப்பட்டிருந்தனர். மாணவர்கள் சைவ உணவை உண்டு, தமிழர் பண்பாடு பேணும் வகையில் நீண்ட பாவாடை சட்டையும், தாவணியும் அணிந்தனர். கூந்தலைப் பின்னி விட்டுக் குஞ்சங் கட்டினர். இவர்கள் கல்வி கற்றலோடு நில்லாது கோலம் போடுதல், மாலை கட்டுதல், தையற்பயிற்சி போன்ற பயிற்சிகளும் பெற்றிருந்தனர். இதற்கென அமைந்த பூந்தோட்டத்தில் மலர்கொய்து மாலை கட்டி காலை, மாலை வேளைகளில் மாணவர்கள் வழிபாடு செய்தனர். வழிபாட்டின் போது இராமநாதன் அவர்களால் தெரிவு செய்யப்பட்ட பாடல்களே பாடப்பட்டன. இதற்கேற்ப மாணவர்களுக்கு இசைப் பயிற்சியும் அளிக்கப் பட்டன. இதனை அழகாகக் கல்லூரிக் கீதத்தில் "பொன்பூத்த மேனியினார் -

பூக்கொய்து பரமனுக்குப் பண்மாலை அணிவிக்கும் - பாங்குடைத்திக் கல்லூரி" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

"கருதரிய சிற்சபையில் ஆனந்த நடமிடும் கருணாகரக் கடவுளே திரிகரண சுத்தியும் காரியசித்தியும் அருள்வாய்" என்பது சேர். பொன். இராமநாதனுடைய தாரக மந்திரம். இது இராமநாதன் கல்லூரி யின் மகுட வாசகமும் ஆகும். இவர் பெண் கல்வியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது போலவே சைவசமய மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தினார். பெண் கல்வி ஆத்மிகச் சிந்தனையுடன் மலர வேண்டுமென்ற காரணத்தால் கல்லூரியோடு ஆலயத்தை யும் இணைத்துக் கட்டினார். மேலும் சைவ சமய மறுமலர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக விளங்குவது கொழும்பு மாநகரை அணி செய்து நிற்கும் பொன்னம்பலவாணேச்சர மாகும். இது சைவப் பண்பாட்டு விழு மியங்களைத் தாங்கி நிற்பதோடு, திராவிட சிற்ப முறையைத் தழுவி முழுவதும் கருங் கற்பொழிவினால் ஆக்கப்பட்ட ஆலய மாகும். 1836ஆம் ஆண்டு தந்தையார் ஆரம் பித்து வைத்த இப்பாரிய ஆலயத்தை ஒரு தனி மனிதனாக நின்று கற்றளி ஆக்கிய பெருமை சேர். பொன். இராமநாதனுக்கே உரியது. பெருஞ் சொத்துக்களைப் பணி களுக்கென்றே விட்டு விட்டு யாவும் பரமேஸ்வரன் சொத்து என்பார்.

இத்தகைய மகானுக்கு அருட் பரானந்த சுவாமிகளுடைய ஞான உப தேசம் கிடைத்தது. அருட்பரானந்த சுவாமி களை ஞான குருவாக ஏற்றபின் இவரது நடை, உடை, உணவு யாவும் ஆத்மீக வழியில் அமைந்தன. ஆழ்ந்த ஆத்ம ஞானமும், பற்றற்றபோக்கும் இவரிடம் மிகுதியாகக் காணப்பட்டன. இவரது ஆத்மஞானம் கடல் கடந்த நாடுகளிலும் பரவியது. அமெரிக்கா வரை சென்று பொஸ்ரன், நியூயோர்க், வாஷிங்டன் முதலிய நகரங்களிலும், தேவாலயங் களிலும், பல்கலைக்கழகங்களிலும் ஞானப் பேருரைகள் நிகழ்த்தினார். அமெரிக்க மக்களிடத்தில் ஆத்மிக விதையை வித் திட்டார். இதன் பேறாக இராமநாதனை குருவாகக் கொண்டோர் பலர். விவே கானந்தருக்குப் பின் அமெரிக்காவில் ஞானமுழக்கம் செய்தவர் சேர். பொன். இராமநாதனே. இவரது சொற்பொழிவுகள் மேற்கு நாடுகளில் காணப்படும் "ஆத்மிகப் பண்பு" என்ற ஆங்கில நூலாக வெளிவந் துள்ளது.

இவர் பிரம்மச்சரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்ற படி முறைகளில் வாழ்ந்து, முழுத்துறவு பூண்டு, பற்றற்ற ஞானியாகி சீவன்முத்தி நிலையில் இறைவனுடன் சங்கமம் ஆகிவிட்டார். குருவிடம் சந்நியாசம் பெற்ற பரமஞானி ஆகையால் இவரது பூதவுடல் சமாதியாக அமர்த்தப்பட்டு சிவலிங்க பிரதிட்டை செய்து, கோயில் எழுப்பப்பட்டு பூசைகள், விழாக்கள் நடைபெற்று இவரது குரு பூசைத் தினம் கார்த்திகை மாதத் திரு வோணமாகும். இவரால் இயற்றப்பெற்ற நூல்கள் ஔவை நாயகியின் ஆத்திசூடி மந்திர விளக்கம், செந்தமிழ் இலக்கணம், திருக்குறட்பாயிரம், இராமநாதபாஷயம், பகவத்கீதை தமிழ்மொழி பெயர்ப்பும், விருத்தியும் ஆகும்.

அர்ப்பணிப்புடன் கூடிய ஆசிரியப்பெருந்தகை

கலாபூஷணம் பண்டிதை வைகுந்தம் கணேசபிள்ளை அவர்களின் சேவையைப் பாராட்டி இணுவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் வெளியிடும் மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். அவர் பணியாற்றிய காலத்திலும், அதிலிருந்து இளைப்பாறிய பின்னரும் ஆற்றிவரும் சேவைகண்டு நாம் எல்லோருமே பெருமையடை கின்றோம். திருமதி.வை.கணேசபிள்ளை அவர்கள் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் இராமநாதன் கல்லூரி அடைந்து வந்த வளர்ச்சியைக் கண்டு நாம் வியந்திருக்கின்றோம். மாணவர் கல்வியிலும் இணைச்செயற்பாடுகளிலும் அவர் ஆற்றிய அர்ப்பணிப்பான சேவையும் மாணவிகளின் ஆளுமை வளர்ச்சியில் ஏற்படுத்திய விளைவையும் பாராட்டாமல் இருக்க முடியாது. பாடசாலையின் எந்தவொரு நிகழ்வையும் முன்னின்று நடாத்துவதில் அவருக்கு நிகர் எவருமில்லை எனக் கூறினால் அது மிகையாகாது. எந்தவொரு நபருக்கோ அல்லது நிறுவனத் துக்கோ பாராட்டு விழா நடக்கும்போது அதற்கான வாழ்த்துப் பாமாலையினை ஆக்கித்தரும் பெருமைக்குரியவரும் இவரேயாவார்.

திருமதி.வை.கணேசபிள்ளை அவர்கள் மாணவர்களது ஒழுக்கத்திலும் சமய அறிவு வளர்ச்சியிலும் என்றுமே அக்கறையுடன் காணப்பட்ட காரணத்தால் இணுவில் திருநெறிய மறைக்கழகத்தினூடாக அறநெறிப் பாடசாலையொன்றை நிறுவியுள்ளமை போற்றுவதற் குரியதாகும். இந்த அமைப்பினூடாக மாணவர்களது சமய அறிவை வளர்ப்பது மட்டுமின்றி அவர் களது ஆளுமையின் விருத்திக்கான பல இணைச்செயற்பாடுகளிலும் ஈடுபாடு கொள்ள வைத் துள்ளமை பாராட்டுதற்குரியதாகும். பேச்சுப்போட்டி, பண்ணிசைப்போட்டி, நடனப்போட்டி, மிருதங் கப் போட்டி, வயலின் போட்டி போன்ற பல்வேறு துறைகளில் மாணவர்கள், தமது திறமையை வெளிக்காட்டுவது மட்டுமின்றி தேசிய மட்டப்போட்டிகளில் கலந்து கொண்டு முதலாம், இரண்டாம், மூன்றாம் நிலைகளைப் பெறும் அளவுக்கு அவர்களின் ஆளுமையை உயர்த்தி யுள்ளமை பாராட்டுக்குரியதாகும். அவரின் திறமையைக் கௌரவித்து அரசு வழங்கிய கலாபூஷணம் விருது அவரால் பெருமையடைந்துள்ளதென்றே கூறுதல் வேண்டும். மொத்தத் தில் சமூக, சமயப் பணிகளிலான அவரது அர்ப்பணிப்பான சேவையும், ஆலோசனையும் என்றுமே எமது சமூகத்தின் வளர்ச்சிக்கு உதவும் எனக் கூறி அவர் உடல் ஆரோக்கியத்துடன் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றேன்.

பேராசிரியர் க.தேவராஜா
தலைவர், வணிகத்துறை,
யாழ் பல்கலைக்கழகம்.